Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
நவ.19-25,1995


# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S TAMIL WEEKLY முரசு 128



## அரசியல் தீர்வில் அமெரிக்கத் தலையீடு!

## பிரபாவின் அடுத்த எதிர்பார்ப்பு





யாருக்கும் வெட்கமில்லை மேல்நாட்டு மாற்றம்

இலக்கிய நயம்

கலண்டர் சொல்லும் கருவறை இரகசியம்

லேடீஸ் ஸ்பெஷல்

## சூப்பர் ஸ்டாரின் புதிய வேடம்

சூடு - சுவை - சுவாரசியம் - அது தான் தினமுரசு

# முரசம்

## மறுப்பதில் நியாயமில்லை

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

நாட்டு நிலவரம் நலமல்ல.
ஒரு புறம் வான்மழை;
மறு புறம் போர்மழை.
அழகான மாங்காய் தீவு
அகதிகளின் கண்ணீரில்
இன்று-மிதந்து கொண்டிருக்கிறது.

வான்மழையால்
பாதிக்கப்பட்டவர்கள் மட்டும்
அகதிகளல்ல;
போர் மழையால்
இடம் பெயர்ந்தோரும்
அகதிகள்தான்.

ஆனால்-அரசாங்கம்
மறுத்திருக்கிறது.
மறுப்பில் நியாயமில்லை.

இங்கிருந்து வெளியேறி
வெளிநாடுகளில்
புலிடம் தேடுவோருக்கு
அந்த நாடுகள்
அகதிகள் அந்தஸ்தை
வழங்கியிருக்கின்றன.

நம் நாட்டில்
சொந்த மக்களுக்கே
அகதிகள் அந்தஸ்துக்கூட
கிடைப்பது கஷ்டமாகிவிட்டது.

முயன்று முன்னேறியும்
வசப்பட்ட பகுதிகளில்
மக்கள் இல்லையே என்று
அரசாங்கம் நினைக்கக்கூடும்.

கடும் போர் நடக்கையில்
இடையிலே சிக்கிக் கொள்ள
எவர்தான் விரும்புவர்?

அரசாங்கம் விரும்பினால்
வெளியேறிய மக்களை
திரும்ப அழைக்கும் வகையில்
தாம் நிலைகொண்ட பகுதிகளில்
திருப்திகரமான நிலையை ஏற்படுத்தட்டும்.

தற்போதும் சமர்
தொடர்கிறதே தவிர
சகஜநிலை தோன்றவில்லை.
அதுவரை மக்கள்
ஒதுங்கியிருப்பதுதான்
உயிர்களுக்கான ஒரளவு
உத்தரவாதமாக அமையும்.

அதனை அரசாங்கம்
புரிந்துகொள்வது நல்லது.
புலிகளோடு முரண்டுபிடிப்பதாக
நினைத்து-பொது மக்களின்
அகதி வாழ்வை
மறுத்துக்கொண்டிருப்பதா?

யாழ்-அரச அதிபரை
வேலைநீக்கம் செய்வதாக
அமைச்சர் அறிவித்திருந்தார்.
அரச அதிபர்
புலிகளின் சொற்படி நடந்தார்
என்று குற்றம் சொல்லலாம்.
அப்படியானால்;
யாழ்-குடாநாட்டிலுள்ள
சகல அரச ஊழியர்களையும்
வேலை நீக்கம் செய்யவேண்டியிருக்கும்.

புலிகள் சொல்வதை
அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள
பகுதிகளில் தொழில் புரியும்
அரச ஊழியர்கள் மறுக்கும்
நிலையில் இல்லை.
மறுத்தால் ஏற்படும் விளைவு
அரசுக்கும் தெரியாததல்ல.
எனினும்-யாழ் அரச அதிபர்
புலிகளைப் பற்றிப் பேசவில்லை.
பொதுமக்களின் நிலைகுறித்தே
எடுத்துக் கூறினார்.
அது அவரது கடமை.

புதிய அரசாங்க அதிபரை
நியமித்தாலும்-
நிலமை ஒன்றுதான்.

தனது அரசாங்க அதிபரை
யாழ்ப்பாணத்தில் வைத்திருக்க
அரசு விரும்பினால்
புலிகளோடு மல்லுக்கு நிற்பவரை
அங்கே அனுப்ப முடியாது.

எனவே-
அகதிகள் பிரச்சனையானாலும்
அரச அதிபர் தொடர்பான
பிரச்சனையானாலும்
நிலமையைப் புரிந்து
எடுக்கப்படும் நடவடிக்கைகளே
நீண்டகாலப் பயன் தரும்.

தற்காலிக பயன் கருதி
மேற்கொள்ளும் முடிவுகள்
நம்பிக்கைக்கு உரம் தராது.
இது-அரசியல் பிரச்சனைக்கும்
பொருந்தும்- அகதிகள்
பிரச்சனைக்கும் பொருந்தும்!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்

### பிரகாசமான வாழ்க்கை

'வாழ்க்கை வாழ்வதற்கே' இக் கூற்றை எந்த இன-மத-சாதி மக்களுமே என்றும் ஏற்றுக்கொள்கிறார்கள். இதனால் பல விதங்களில் தத்தமது வாழ்க்கையினை மனதிற்கேற்றபடி வாழ்ந்து கொள்கிறார்கள். மனச்சாட்சி அவர்களுக்கு வழிகாட்டி.


ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் வாழ வேண்டிய வாழ்க்கை பற்றி நமது இரட்சகராகிய இயேசு பின்வருமாறு கூறுகிறார்:

"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது" (மத்:5:14)

"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற பிதாவை மகிமைப் படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது." (மத்:5:16)

எனவே, இவ்வுலகத்தில் வாழும் நாம் ஒவ்வொருவரும் நம்மில் உள்ள வெளிச்சம் இருளாகாதபடி எச்சரிக்கையாயிருந்து, எமது வாழ்வினை இயேசு சொன்னபடியே நற்கிரியைகளால் பிரகாசிக்கச் செய்வோமாக.

-ரூபராஜ் தேவதாசன், கெங்கல்ல.



### அறிவுக்கு அலி(றழி)யின் அறிவுரைகள்

நல்லவர்களுடன் நட்பு வைத்துக்கொள். அது உன்னை நல்லவனாக்கி விடும். தீயவர்களுடன் தொடர்பு வைக்காதே. இது உன் கண்ணியத்தையும் ஒழுக்கத்தையும் கெடுத்துவிடும். சூழ்நிலை மீது பழி போட்டுவிட்டு நியாயமற்ற உணவை புசிக்காதே. நல்வழியில் சம்பாதித்து நல்லுணவை சாப்பிடு.

மக்களுக்கு அறிவுரை கூறும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள். அறிவுரை என்பது மனோ வியாதிக்கு நல்ல மருந்து. மக்களின் மனோ வியாதிக்கு மருந்து கொடுப்பதாக நினைத்துக் கொண்டு கூறத்தகாததையெல்லாம் கூறிவிடாதே. அவர்களின் உள்ளத்தில் குழப்பத்துக்கு வித்திடக்கூடிய எதையும் அறிவுரையாக எடுத்துரைக்காதே. சில வேளைகளில் ஒரு வியாதிக்குக் கொடுக்கப்படும் மருந்து வேறொரு வியாதிக்கு வித்திட்டு விடக்கூடும்.

மனிதன் பகுத்தறிவு பெற்றவன்தான். என்றாலும் பிறக்கும் போதே அவனது அறிவு முழுமை பெற்றிருப்பதில்லை. பகுத்தறிவுக்கு ஒளி சேர்ப்பது அனுபவம். நல்ல அனுபவம் பெற்றவர்கள் சிறந்த பகுத்தறிவாளர்களாக இருப்பதை நீயே பார்த்திருக்கலாம். கடந்த காலத்துக்கு நீ விரிவுரை கொடுக்க வேண்டும். கடந்த காலத்தை வைத்து எதிர்காலத்தை திருத்த முற்பட வேண்டும். அனுபவத்திலிருந்து நீ அறிவுரை பெறவில்லையானால் உன் அனுபவத்திற்கு சிறப்பு கிடையாது. மனதிலிருக்கும் ஆசைகளை மட்டுமே வைத்து எதையும் செய்து விடாதே.

ஜொஹறா ஹுலைன், தியத்தலாவ.

## கவிதைப்போட்டி இல-125

### பரிசுக்குரிய கவிதை

### (இல்லவே இல்லை)

புத்திரர்கள் போன இடம்
சத்தியமாய் நானறியேன்!
காத்திருக்கக் காலமில்லை
பாத்திரத்தில் சோறுமில்லை!
நித்திரைக்கும் நேரமில்லை
நிம்மதிக்கு யாருமில்லை!
பத்திரமாய்ச் சேர்த்திடுங்கள்
வெட்டிவைத்த பங்கருக்குள்!

பொத்துவில்-சபா. செல்வஜோதி.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### வேறு வழியில்லை

மருத்துவமனை செல்வதற்கு
வண்டியிலோ டீசல் இல்லை
உயிரைக் காப்பாற்ற
வேறு வழியுமில்லை.

எம்.எல்.கிஷோர்,தெஹியோவிட்ட.

### வேற்றுமை

அங்கே....
மீட்கும் கரங்கள்
தூக்கும்!
இங்கே...
காக்கும் கரங்கள்
தாக்கும்!!

ஆ.சிறிதரன், கி.வளாகம்.

### சுமை!

அன்று
கருவில் நீ சுமந்தாய்!
இன்று
தெருவில் உனைச்
சுமக்கும் காலமிது!

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்.02



### மகிமை

வற்றி யுலர்ந்த உடலை
வயதும் முதிர்ந்த நிலையில்
பற்றியே முதுகில் சுமக்கும்
பயனுள்ள நன் மகனை
பெற்றதனால் பெரு மகிமை

உடுநுவவை நிசார், மாவனல்லை

### சுமை

மனிதனால்
மனிதனுக்கு
ஏற்பட்ட
மனித சுமை
இதுவன்றோ!

எம்.செல்வகுமார், மஸ்கெலியா.

### ஈர நெஞ்சம்

கோர யுத்தக் கொடுமையதால்
உர மிழந்த முதியவரை
அரவணைத்து முதுகினிலே
இரக்கமுடன் சுமந்து வரும்
ஈரநெஞ்ச வாலிபர்கள்
சிரம்பணியாக் காவலரோ.

ஏ.எம்.முஸ்தபா, ஏறாவூர்.01.

புவனங்கள் எங்கும்
பொங்கும் எரிமலை.
அவலங்கள்; அகதிகள்
வாழ்வு தொடர்கதை.
பொழுதெலாம் பூமியில்
போர்வெறிப் பொழுதுகள்.
அழுவதால் மாறுமோ?
அகிலமும் வாழுமோ?

டி.யூட்,காரைதீவு.06

### போர்த்தேச நிகழ்வு

இடியென வந்து விழும்
இலக்கிலா ஷெல்லடியால்
தள்ளாடும் வயதிலென்னை
தவிக்கவிட்டு உறவெல்லாம்
இடம் பெயர்ந்து போனதனால்
சா விளிம்பில் எனை மீட்டு
தோல் சுமக்கும் வாலிபங்கள்.

எம்.எச்.யுனைத்தீன், ஏறாவூர்.6

### யார் சுமந்தும் என்ன

போரென்றாலே சுமை
போகுமிடத்திலும் சுமை
தாய் சுமந்த சுமையை
தனயன் சுமந்தால் சுமையோ?
யார் சுமந்தும் என்ன
யாரை நொந்தும் என்ன
போரே ஒழிந்தால் போதும்
போகம் யாவும் சேரும்!

காரைத்தீவூர் சிவம், குருக்கள்மடம்.

### நவயுக பாரி

முல்லைக்கு தேர் ஈந்ததான் பாரி மன்னன்
-அன்று
அன்னைக்கு தோள் ஈந்தான் பாசமகன்
-இன்று

சாந்தி. மகாலிங்கசிவம், மட்/கல்லடி.

## கவிதைப் போட்டி இல-128



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 25.11.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 128
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### ஈடில்லை

காலமெல்லாம் என் முதுகில்
தாயே உனைச் சுமந்திடினும்
கருவறையி லெனைச் சுமந்த
காலத்திற் கிதீடில்லை.

பீ.எம்.எம்.அன்ஸார்,வெலிகம.

### பெற்றகடன்.

பத்துமாதம் சுமந்த கடன்
பார்கொடுத்தும் தீர்ந்திடுமா
சற்று நேரம் சுமந்ததாலே
பெற்ற கடன் தீர்ந்திடுமா?

சாமீஷ்,யோகேந்திரன் ஆரையம்பதி-02.

### கடமை யுணர்வு

"புவி நடுக்க அனர்த்தமதில்
கவிழ்ந்த மாடிக் கட்டிடத்தின்
குவிந்த இடி பாடினுள்ளே
தவித்தவரை முதுகினிலே
காவி வந்த வாலிபரின்
கடமை தனைப் பாருமம்மா"

முஸ்தபா-இஸ்ஸத்,பழத்தார் வீதி, ஏறாவூர்.01

### நம்பிக்கை

பயந்து பயந்து
வாழ்வு முடிவதெனும்
பொழுதில் தான்
நம்பிக்கை துளிர்க்கிறது.

இ.யோகநாதன்,சின்னப் புதுக்குளம்,வவுனியா.

### வழியொன்றில்லை!

இடி முழக்க
இன்னலோ?
கொலன்னாவக்
கொடுமையோ?
மூச்சு நிற்கும்
காலத்திலும்
மூலையொன்றில்
சுருண்டு கொள்ள
மூதாட்டிக்கும்
வழியொன்றில்லை!

ரேணுகா நிபாய்தீன்,ஏறாவூர்.02

## வாசகர் சாலை

வடபுலப் போர்நிலவரத்தை தெளிவாய் சொல்லிவருகிறார் நாரதர். வெற்றிகள் இரு தரப்புக்குமே தற்காலிகமானதாகவே தொடர்ந்து கொண்டிருந்தால்-முடிவு எப்போது? கேள்வி மனதை அரிக்கிறது.

எஸ்.வில்பிரட், மட்டக்களப்பு.

குடாநாட்டு யுத்தம் புதிய கட்டத்துக்கு மாறிவிட்டதை முரசு சுட்டிக்காட்டிவிட்டது. கட்டங்கள் மாறுவதெல்லாம் போர் விதி என்கிறார் நாரதர். பாவம் மக்களின் கதி என்னவாவது?

ஜெ.ஞானசேகர், பண்டாரவளை.

ராஜதந்திரியார் அரசியல் நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். போர்த் தந்திரங்களைவிட அரசியல் தந்திரங்கள் தற்போது பயன்தரும் என்பது மெய்தான். இதெல்லாம் விழவேண்டியோர் செவிகளில் விழுமா?


என்.வில்வராசா, செட்டி.குளம்.

கத்தரிகளையும் மீறி உண்மைகளை உள்ளபடி உச்சரிக்கும் முரசுக்கு ஒரு சபாஷ்.

எல்.இல்யாஸ், வெலிமட.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ள வரை பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:**

எம்.எஸ்.எம்.முஹம்மது அலி,வெல்லம்பிட்டிய.
எஸ்.பத்மா.உமாஜினி,நவ்சாத், கொழும்பு.10
இல்முன் நிஷா, ஏ.ஹஸின், திருக்கோணமலை.
என்.ரீ.அமீனுதீன்,அக்கரைப்பற்று.06
ஏ.வ்ராகிட் மட்டுநகர்,
து.சிவாஜினி, சாம்பல்தீவு-திருமலை.
கி.புஸ்பராஜ்.இறக்குவானை.
எல்.வடிவுக்கரசன், சவுதி அரேபியா.
நசீபர்சா.கிண்ணியா.
கே.வின்சன்ட்,கிறிசந்திரன்
மட்/ சத்துருக்கொண்டான்.
மரீனா-நியாஸ்
பூரணவத்த -கண்டி.
க.ஸ்ரீபன்-கோமாரி,
கோ.பத்மநாதன்-நெடுந்தீவு.
எம்.எஸ் நம்ஸியா,பதுளை.
புஸ்பா காந்தன் மட்/நாவற்குடா
பஹ்மி-கொழும்பு-12
ராமசாமி பவானி
கோட்லொஜ் எஸ்டேட்.
ஸலீம் முஹமட் கடாபி,
ஸலீம் முஹமட் ஸர்தாத், திக்குவெல.
ஏ.எச்.முஹமட் ஜெஸீம்
சாய்ந்தமருது.08
எம்.எச்.எம்.தௌபீக், புதிய காத்தான்குடி.06
ஜெ.துஷிந்ரா, கொழும்பு-04.
குகதாசன் சீலன், மட்டுநகர்.
செல்வி சிவாஜினி சதாசிவம், மாத்தளை.
சி. ரவிச்சந்திரன், ஹப்புகஸ்தன்னை.
மா.அருந்தவன், மொன்றியல்-கனடா.
எம்.தேவராஜா,சுவிற்ஸர்லாந்து.
எச்.ஜெஸீமா,குவைட்.




கார்லோஸின் கைக்குண்டு வீச்சு நியாயமில்லை. பயங்கரவாதம்தான் விவேகமா?

மோ.நிர்மலா, திருக்கோணமலை

அப்பாவிகள் மத்தியில் குண்டை வீசி நோக்கத்தை சாதிப்பது தவறில்லையா? கார்லோஸ் செய்தாலும் தவறு தவறுதான்.

வி.எம்.மொகமட்,கல்முனை.

கார்லோஸ் தொடரில் வரும் பல சம்பவங்கள் நம் நாட்டு நிலவரங்களுக்கு முன்னுதாரணங்களோ?

ஏ.பாலாம்பிகை, நுவரெலியா.

பட்டுக்கோட்டைப் பிரபாகரின் தொடர் திக்,திக் என்பதைவிட மூளைக்கு டிக்,டிக்.

ஆ.ரவீந்திரன், கண்டி..

சரவணகுமார் மீட்கப்படவேண்டும் என்று மனது துடிக்கிறது. மிஸ்டர் பிரபாகர்! எப்படியாவது மீட்டுத்தாருங்கள்.

கு.வினோதினி, வவுனியா.

இராமாயணத்தொடர் இதம். நயம் தவறாமல் தரும் இராஜகுமாரனுக்கு பாராட்டுக்கள்.

எஸ். தாமரைச்செல்வி, பாலாங்கொடை

சிந்தியா பதில்களில் சுருக்கம்தான்-சுருக்கென்று மனதில் தைக்கின்றன பதில்கள். முகத்தைக் காட்டினால் என்னவாம்?

வி.மதிவண்ணன், மூதூர்.

126ம் முரசில் சோனாலியின் படம் சொக்க வைத்துவிட்டது.

ஸானாஸ்.றினோஷா,கிண்ணியா.06

# புலிகளின் வருடாந்த செலவினம் 180 கோடி

# எதிர்த்தாக்குதலுக்கு எறிகணைகள் போதவில்லை

## போர் நிலவரம் குறித்து புலிகள் தெரிவிப்பு

**யாழ்-குடாநாட்டுப் போரில் கனரக வாகனங்கள், டாங்கிகள், எறிகணைத் தாக்குதல்கள் மூலம் படைத்தரப்பினர் யாழ் நகரை நோக்கி முன்னேறுகின்றனர். புலிகள் அமைப்பினரும் நேரடி மோதலைத் தவிர்த்து எறிகணைத் தாக்குதல்களையே பிரதானமாக மேற்கொள்ளுகின்றனர். குடிமக்கள் வெளியேறியுள்ளமையால் இரு தரப்பும் சரமாரியாக எறிகணை யுத்தம் நடத்த வசதியாக இருக்கிறது. மோதல் நடைபெறும் பகுதிகளில் பூமி அதிர்கிறது. வீடுகள் சேதமாகின்றன. கூரைகள் நொறுங்கிப் போகின்றன. கால்நடைகளும் மடிகின்றன.**

### மும் முனைகள்

இரு முனைகளால் யாழ் நகர் நோக்கி முன்னேறிவரும் படையினர் கோப்பாய் சந்தியிலிருந்து மும்முனையால் முன்னேறக் கூடும் என்று நம்பப்படுகிறது.

கோண்டாவிலிலிருந்து யாழ்நகரை நோக்கி ஒரு முனையாலும், கோப்பாயி லிருந்து யாழ் நகரை நோக்கி மறுமுனையாலும், முன்னேறியபடி கோப்பாய் சந்தியிலிருந்து தென் கிழக்குப் பக்கமாக நாவற்குழி சந்தி நோக்கியும் படைத் தரப்பு மும் முனைகளால் முன்னேறலாம் என்று நம்பப்படுகிறது.

அவ்வாறு வியூகம் அமைத்தாலும். யாழ் நகரிலிருந்து புலிகள் தென்மராட்சிக்கு செல்லும் பாதை முற்றாகத் தடைப் பட்டுவிடாது. யாழ்ப்பாணம் கொழும்புத் துறை வழியாக தென்மராட்சிக்கு செல்லும் பாதையொன்றும் இருக்கிறது. நாவற்குழிச் சந்திக்கு செல்லாமலேயே அப்பாதை வழியாக புலிகளின் அணிகள் செல்ல முடியும்.

ஆனால் கோண்டாவில் வழியாக யாழ் நகர் நோக்கிச் செல்லும் படையினரின் வியூகத்தைத் தாண்டி வலிகாமப் பகுதியில் இருந்து புலிகளின் அணிகள் வெளியேற முடியாது. எனவே-வலிகாமம் பகுதியிலுள்ள புலிகளது அணிகள் அங்கிருந்து வெளியேற வேண்டியிருக்கும்.

### ஊடுருவலாம்?

அதேசமயம் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகள் மூலமாக புலிகளது அணிகள் ஊடுருவினால், பலாலியிலிருந்து அச்சுவேலி கோப்பாய் வழியாக யாழ் நகர் நோக்கிச் செல்லும் படைத்தரப்பின் பின்புறத்தில் தாக்குதல் நடத்தக் கூடிய சாத்தியமும் இருக்கிறது.

அவற்றைத் தடுக்க வேண்டுமானால் தென்மராட்சி,வடமராட்சி பகுதிகளையும் படைத்தரப்பு தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படும்.

இதேவேளை யாழ் நகரை நோக்கிச் செல்லும் படைத்தரப்பைச் சுலபமாக முன்னேறவிடாமல் தடுப்பது மட்டுமே புலிகளின் நோக்கம் என்றும், முற்றாகவே தடுத்து நிறுத்துமளவுக்கு பாரிய மோதலை நடத்தும் திட்டம் தற்போதைக்கு இல்லை என்றும் தெரியவருகிறது.

சுலபமாக முன்னேற அனுமதித்தால் தென்மராட்சி நோக்கியும் படையினர் வரக் கூடும் என்று புலிகள் நினைப்பதாக கூறப்படுகிறது.

புலிகள் அமைப்பினரின் நிலக்கண்ணி கள், பொறிவெடிகள் என்பவற்றை கண்டறியும் சாதனங்களுடன் படைத்தரப்பின் முன் வரிசையினர் முன்னேறுகின்றனர். எனவே-தற்போதைய நிலையில் நிலக்கண்ணி வெடித் தாக்குதல்களை புலிகள் பெரியளவில் மேற் கொள்ள முடியாதுள்ளது.பாதுகாப்பு நிலை எடுக்கக் கூடிய வகையில் வீதிகளைத் தவிர்த்து குடியிருப்புக்கள் ஊடாகவே படையினர் முன்னேறி வருகின்றனர்.

எப்படியானாலும் யாழ் நகரை படை யினர் கைப்பற்றுவது உறுதியானது என்றே முரசுக்கு யாழில் இருந்து கிடைத்துள்ள போர்க்கள நிலவர தகவல்கள் தெரிவிக்கின்றன.

### புலிகளின் கருத்து

சமீபத்தில் புலிகள் வெளியிட்ட போர் நிலவரம் குறித்த விமர்சனக் கட்டுரை யொன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

"சிறீலங்கா அரசு வருடாந்தம் 4 ஆயிரம் கோடிக்கு மேல் போருக்காகச் செலவிடு கிறது. ஆனால் புலிகள் இயக்கம் வருடாந்தம் 180 கோடி ரூபாவையே போருக்காகச் செல விடுகிறது. இந்தப் போர்ச்செலவை வருடாந் தம் 360 கோடி ரூபாயாக புலிகளால் உயர்த்த முடியுமானால் போராட்டம் விரைவுபெறும்.

ஒரு எறிகணையின் (ஷெல்) பெறுமதி 100 டொலராகும். எமது ரூபாவில் 5 ஆயிரம் ரூபா. ஒருவர் எமக்கு ஐயாயிரம் ரூபா நிதி தந்தாலும் ஒரு எறிகணை வாங்கத் தான் அது பயன்படும். ஒரு சமரில் படைத் தரப்பு ஆயிரம் எறிகணை களை ஏவினால், புலிகள் அதற்குப் பதிலாக பத்து அல்லது இருபது எறிகணைகளையே ஏவக்கூடிய நிலையில் இருக்கின்றனர். எறிகணைகளை அதிகளவில் ஏவ முடியாமல் இருப்பதால்தான் படையினர் விரைவாக முன்னேற முடிகிறது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நிர்வாகம் நடக்கிறது

யாழ்-குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி மற்றும் யாழ்-குடாநாட்டுக்கு வெளியே வன்னிப் பகுதி என்பவற்றில் புலிகள் அமைப்பினரின் வழக்கமான நிர்வாகங்கள் நடைபெறுகின்றன.

வவுனியாவுக்கு வரும் பயணிகளிடம் தாண்டிக்குளத்தில் வழக்கமாக அறவிடும் பணத்தை புலிகள் பெற்று வருகின்றனர். வயதுக் கட்டுப்பாடும் கண்டிப்பாக கடைப் பிடிக்கப்படுகிறது.

# புலிகளின் விசாரணையில் உபவேந்தர்

## மூடப்பட்ட நிலையில் கிழக்குப் பல்கலைக்கழகம்

(ஏறாவூர் நிருபர்)

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சி.சந்தானம் கடந்த 7.11.95 அன்று பகல் 11.30 மணியளவில் பல்கலைக்கழகத்தில் வைத்து புலிகளால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டார். இச் செய்தி அச்சேறும் வரை அவர் விடுவிக்கப்பட வில்லை. பல் கலைக்கழக நிருவாகச் சீர்கேடு மற்றும் ஊழல் போன்றவை பற்றியே விசாரணைகள் இடம் பெறுவதாகத் தெரிவிக் கப்படுகிறது. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இவ்வருட ஆரம்பத்தில் நடந்த கூட்டம் ஒன்றின்போது விடுதலைப் புலிகளின் கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் பல்கலைக்கழக நிருவாகத்தின் மீது அதிருப்தி தெரிவித்து காரசாரமாகப் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. தற் சமயம் பேராசிரியர் சந்தானம் கொக்கடிச் சோலையில் வைத்து திரு.கரிகாலனாலேயே விசாரிக்கப் படுவதாகத் தெரியவருகிறது.

உபவேந்தர் நியமனத்தில்ஏற்பட்ட சர்ச்சை காரணமாக பல்கலைக்கழகம் சென்ற 13.10.95 தொடக்கம் மூடப்பட்ட நிலையில் உள்ளது. பேராசிரியர் சந்தானத்தின் பதவிக் காலம் சென்ற மாதம் 31ம் திகதியுடன் முடிவடைந்துள்ள போதிலும் இன்னமும் புதிய உபவேந்தர் எவரும் நியமிக்கப்பட வில்லை.

உபவேந்தர் நியமனத்திற்காகச் சிபார்சு செய்யப்பட்டவர்கள் தொடர்பில் மாணவர் களும் மற்றும் பலரும் அதிருப்தி தெரிவித்து ஏராளமான துண்டுப் பிரசுரங்களையும் சுவர் ஒட்டிகளையும் வெளியிட்டிருந்தனர். அவற்றில் பல்கலைக் கழகத்தின் கடந்த கால நிருவாகத்தில் பல ஊழல்கள் நிறைந் திருப்பதாகவும் பல்கலைக்கழக அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டிருந்தது. பல்கலைக் கழக உயர் பதவியி லிருந்தவர்கள் மாணவர்களுக்கு நேரடி யாகவும் மறைமுகமாகவும் அநீதி இழைத்த சம்பவங்கள் ஏராளம் என்று பேசப்படுகிறது. உயர் பதவி வகிக்கும் பலரின் தனிப்பட்ட விவகாரங்களும் பிரதேச வாதங்களும் துண்டுப் பிரசுரங்களில் நிறைந்திருந்தன.

எது எவ்வாறாயினும் உப வேந்தர் நியமன சர்ச்சையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரும்படியான எந்த நடவடிக்கை யையும் பல்கலைக் கழக விவகாரங்களில் சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கத் தவறும் பட்சத்தில் மாணவர்களின் எதிர்காலம் பெரிதும் பாதிப்பிற்குள்ளாவதும் பல்கலைக் கழகம் நிரந்தரமாக இழுத்து மூடப்படக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுவதும் உறுதி என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

# ஒரு வீட்டில் 50 பேர்

## அடகு வைக்கப்படும் குடை

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பல வீடுகளில், வீடொன்றுக்கு 50 பேர்வரை இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர்.

தென்மராட்சி, வடமராட்சி கடற்கரை யோரப்பகுதிகள் சுகாதார சீர்கேட்டின் இருப்பிடங்களாக மாறியுள்ளன. இடம் பெயர்ந்த மக்கள் தமது இயற்கைக் கடன்களை கழிப்பதற்கு கரையோரப் பகுதிகளையே நாடவேண்டியிருப்பதால் சுகாதார சீர்கேடும் அதனால் தொற்று நோய்களும் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு பரிமாறக்கூட தொண்டர் நிறுவனங்களிடம் பாத்திரங்கள் இல்லை. பல முகாம்களில் 10 உணவுத் தட்டுக்களை வைத்து ஆயிரம் பேருக்கு உணவு பரிமாறப்படுகிறது. பத்துப் பேர் சாப்பிட்டு முடிக்கும் வரை ஏனையோர் பசியோடு காத்திருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் அதனால் தொற்று நோய் களும் பரவக்கூடும்.

உணவுக் கஷ்டம் காரணமாக பவுணை மட்டுமல்ல,குடையை அடவுவைத்துக்கூட பணம் பெறும் பரிதாப நிலை காணப்படு கிறது. தாம் இடம்பெயரும்போது கொண்டு வந்த பாத்திரங்களையும் அடவு வைத்தும் பலர் பணம் பெறுகின்றனர்.

ஒரு பவுண் நகையை 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்கவேண்டியிருக்கிறது. தற் போதைய நிலவரப்படி ஒரு பவுண் நகையின் விலை குறைந்தது 5 ஆயிரத்து 500 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

# கை விறைத்து கைக்குழந்தை தவறியது

கிளாலிக் கடல் ஏரியின் மூலமாக தினமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் கிளிநொச்சிக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

இட நெருக்கடி காரணமாக படகுகளில் அடைந்தபடியே மக்கள் பயணம் செய் கின்றனர். காலநிலையும் சீரற்று இருப்பதால் தெப்பமாக நனைந்து கொண்டே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

சமீபத்தில் கைக்குழந்தையோடு பயணம் செய்த தாயொருவருக்கு கடும் குளிர் காரண மாக கைவிறைத்துப் போனது. கையில் இருந்த கைக்குழந்தை ஏரியில் விழுந்தது கூட அவருக்கு தெரியவில்லை. கரைக்கு வந்தபோதுதான் கைக்குழந்தை தவறிய விபரம் தெரிந்து கதறியழுதார். குழந்தையை மீட்க முடியவில்லை.

இதுவரை கிளாலிக் கடல் ஏரி படகுப் போக்குவரத்தைப் புலிகள் இலவசமாகவே நடத்தி வருகின்றனர்.

கிளிநொச்சியில் வந்து தங்கியுள்ள மக்களை தடி கம்புகள் வெட்டிச் சேகரிக்கு மாறு புலிகள் அமைப்பினர் கூறியுள்ளனர். கொட்டில்கள் அமைத்து தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கே அவ்வாறு கூறப் பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் உள்ள மக்களிடம் நெல் இருக்கும், அதனைவைத்து இடம் பெயர்ந்த மக்களின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யலாம் என்று கருதப்பட்டது. ஆனால், விதைப்புக் காலம் ஆரம்பமானதால் நெல் கையிருப்பு வன்னி மக்களிடம் பெரும்பாரும் தீர்ந்துவிட்டது.

# பலத்த சோதனை

சமீபத்தில் மட்டக்களப்பு அரச செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் கடும் சோதனையின் பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

# யாழில் இருவர் சுட்டுக் கொலை

## உளவாளிகள் என்று புலிகள் தெரிவிப்பு

(வர்மா)

கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பகுதியில் இரண்டு பேருக்கு புலிகள் மரண தண்டனை விதித்தனர்.

சாவகச்சேரி மீன் சந்தைக்கு அருகில் வைத்து ஒரு இளம்பெண் புலிகளால் கைது செய்யப்பட்டார்.

அவர் ஒரு உளவாளி என்றும், அவரிடம் ஒரு 'வோக்கிடோக்கி' தொடர்புச் சாதனம் இருந்ததாகவும் புலிகள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நுணாவில் பகுதியிலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமும் ஒரு 'வோக்கி டோக்கி' இருந்ததாகப் புலிகள் தெரிவித்தனர். இருவருக்கும் பொது மக்கள் முன்னிலையில் புலிகள் மரண தண்டனை விதித்தனர். இருவரும் தமிழர்கள்.

உளவாளிகள் பலர் ஊடுருவியுள்ளதால் புலிகள் அமைப்பினர் பலத்த சந்தேகம் கொண்டுள்ளனர்.

யாழ்-குடாநாட்டில் தென்மராட்சி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து தமது இரகசிய நிலைகளை புலிகள் இடமாற்றும் போது ஊரடங்கு சட்டம் பிறப்பித்து விட்டே இடம் மாற்றினார்கள்.

ஷெல் தொழிற்சாலைகள், மற்றும் ஆயுத தளபாடங்கள், வானொலி நிலைய உப கரணங்கள், லேத் மெஷின்கள், அச்சுக் கூடங்கள் போன்றவை ஒரே நாளில் பல நூறு வாகனங்கள் மூலமாக இடம் மாற்றப் பட்டன.

மக்கள் நடமாட்டமிருந்தால் தமது வாகனத் தொடர்கள் செல்வது தடைப்படும் என்பதாலும், தமது இரகசிய இடங்கள் அடையாளம் காணப்படும் என்பதாலுமே ஊரடங்குச் சட்டத்தைப் புலிகள் அமைப் பினர் பிரகடனப் படுத்தியிருந்தனர்.

# வெளியேறுமாறு உத்தரவு?

மட்டக்களப்பு வாவியின் கரையோரத்தில் உள்ள மக்களை தற்காலிகமாக மூன்று கிலோ மீற்றர் தூரம் விலகியிருக்குமாறு பாதுகாப்புக் காரணங்களுக்காக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

பொதுமக்களுக்குச் சொந்தமான தோணிகள், வள்ளங்கள் என்பவற்றையும் வாவிக் கரையிலிருந்து அப்புறப்படுத்து மாறும் கூறப்பட்டுள்ளதாம்.

வாவியின் மறுகரையில் இருந்து புலிகள் வந்து தாக்க கூடும் என்று எதிர்பார்த்தே அவ்வாறான உத்தரவு போடப்பட்டிருக் கலாம் என்று கருதப்படுகிறது. மாவீரர் தினத்தை முன்னிட்டு பாதுகாப்பு படையினர் உஷார் நிலையில் உள்ளனர்.

புலிகளது அரசியல் துறையின் துணைத் தலைவர் கரிகாலன் தற்போது கிழக்கு மாகாணத்தில் தங்கியுள்ளார். சமீபத்தில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் சந்தானமும் கரிகாலனின் உத்தரவுப் படியே கடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

# வைத்தியசாலையும் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி தென் மராட்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. வைத்திய உபகரணங்களும் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் பெரியாஸ்பத்திரி தற்காலிகமாக இயங்கிவரு கிறது. பெரியாஸ்பத்திரி டாக்டர்கள் சிலர் யாழ்ப்பாணம் சுபாஸ் விடுதியில் தங்கி யுள்ளனர். தினமும் ஆஸ்பத்திரி வரவு இடாப்பில் கையொப்பம் இடவேண்டு மென்பதால் அவர்கள் யாழ்ப்பாண நகரி லேயே தங்கிவிட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்துள்ளது. யாழ்-பல்கலைக்கழக துணைவேந்தரின் முடிவின் பேரிலேயே பல்கலைக் கழகம் இடம்மாற்றப்பட்டது.

இடமாற்ற முடிவையடுத்து யாழ்-பழ்கலைக்கழக மருத்துவபீடத் தலைவர் அதிருப்தி தெரிவித்ததாக கூறப்படுகிறது. ஆனால், மருத்துவ பீடத் தலைவர் தற் போதைய போர் தீவிரமாவதற்கு முன்பு புலிகள் அமைப்பின் தீவிர ஆதரவாளராக செயற்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

# முகமூடிகளோடு தோன்றினார்கள்

## வெளியேறாமல் தடுக்க வேலி

யாழ்-குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி தவிர்ந்த பகுதிகளில் இருந்து பொதுமக்கள் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு புலிகள் அமைப்பினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தனர்.

அவ்வாறு அறிவித்தும் 30 வீதமான மக்கள் வெளியேறாமல் இருந்தனர். கோயில் களிலும், பாடசாலைகளிலும் புகலிடம் தேடும் எண்ணத்தோடு அவர்கள் இடம்பெயராமல் இருந்தனர்.

திடீரென்று முகமூடிகளோடு அவர் களை உடனடியாக வெளியேறுமாறு கூறி னார்கள். "நாம் சண்டையிடப் போகிறோம். நீங்கள் போய்விடுங்கள்", என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதனையடுத்து வெளியேறாமல் இருந்த வர்களும், மூட்டை முடிச்சுக்களோடு வெளி யேறிவிட்டனர்.

குறுகிய நேர அவகாசத்தில் வெளியேற வேண்டியிருந்தமையால் பல குடும்பத்தினர் தமது அங்கத்தவர்களை தென்மராட்சியில் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

தென்மராட்சியில் இருந்து மீண்டும் யாழ்ப்பாண நகருக்குள் மக்கள் திரும்பிச் செல்லாமல் தடுக்க புலிகள் அமைப்பினர் தடுப்பு வேலிகளை அமைத்துள்ளனர்.

கடும் அடிபாடு நடந்து கொண்டிருப் பதால் யாரும் திரும்பிச் செல்ல அனுமதி யில்லை என்று கூறப்பட்டுள்ளது.

# மாவீரர் தினமும் வதந்திகளும்

இம்மாதம் 21ம் திகதி முதல் 27ம் திகதிவரை புலிகளது மாவீரர் தினமாகும். கடந்த காலங்களைப் போல இம் முறை யாழ் குடாநாட்டில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படும் நிலை காணப் படவில்லை.

வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் மாவீரர் தினக் கொண்டாட்டங்களை நடத்த புலிகள் அமைப்பினர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மாவீரர் தின ஏற்பாடுகளைச் செய்யுமாறு புலிகள் அமைப்பினரால் கூறப்பட்டுள்ளது. மாவீரர் தினத்தின் இறுதிநாளான 27ம் திகதி புலிகள் இயக்கத்தில் முதன் முதலில் பலியான சங்கர் என்னும் சத்தியநாதனின் நினைவு நாளாகும். 27.11.82இல் சத்தியநாதன் மரணமானார்.

நவம்பர் 26ம் திகதி வே.பிரபாகரனின் பிறந்தநாளாகும்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது புலிகளது வழக்கமாகும். அதனால் தலைநகரிலும், கிழக்கு மாகாணத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் பல்வேறு வதந்திகளும் பரவி வருகின்றன.

# நடந்ததும்–வதந்தியும்

**13.11.95** அன்று திருமலை நகரசபைக் கருகில் துப்பாக்கிப் பிரயோகச் சத்தங்கள் கேட்டன. உடனே வதந்தி நகரெங்கும் பரவிவிட்டது. சகரசபைத் தலைவர் சுடப் பட்டுவிட்டதாகவே வதந்தி பரவியது. நகர சபைத் தலைவரின் நண்பர்கள் சிலர் போனில் தொடர்பு கொண்டு விசாரிக்க, நகரசபைத் தலைவர் சொன்ன பதில்; "இதுவரை எனக்கு எதுவும் நடக்கவில்லை"

திருமலை நகருக்குள் புலிகளது 'பிஸ்டல் குரூப்' ஒன்று நடமாடிவருவதாக கூறப் படுவதால் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டதும் வதந்திகள் பரவிவிடுகின்றன.

படையினரின் துப்பாக்கிப் பிரயோகமே நகரசபைத் தலைவர் பற்றிய வதந்தி பரவக் காரணமாம்.

# பயணிகள் படும்பாடு பாரீர்

## அதிகாரிகளே! கண்கள் திறமின்

கல்முனை பஸ் நிலையத்தின் மூலம் நீண்ட குறுகிய தூர பஸ் சேவைகள் நாளாந்தம் நடை பெறுவதால் இந் நிலையம் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்கிறது.

தினமும் ஆயிரத்திற்கு மேற் பட்ட பிரயாணிகள் இவ் பஸ்நிலையத்தில் பிரயாண நிமித்தம் கூடுகின்றனர். இவர்கள் பல வித இன்னல்களை எதிர் நோக்கவேண்டியுள்ளது.

இங்கு பஸ் புறப்படும் நேர சூசி இல்லாமை பொது மலசல கூடமின்மை போன்றவற்றோடு இவ் பஸ் நிலையத்தில் தனியார் வேன்களும் ஓட்டோக்கள் ஆக்கிரமிப்பும் இரவு பகலாக கட்டாக்காலி மாடுகளின் தொல்லையும் பிரயாணிகளை பெரிதும் பாதிக்கிறது.

இது சம்பந்தமாக பல புகார்கள் அவ்வப் போது வெளிவந்த போதிலும் இதனை கண்டும் காணாமலும் அதிகாரிகள் அசட்டையாகவே இருக்கின்றனர்.

எனவே இனியும் காலம் தாழ்த்தாது இவ் பஸ் நிலையத்தின் அவல நிலையைப் போக்க கிழக்குப் பிராந்திய போக்கு வரத்துச் சபையும், போக்கு வரத்து அமைச்சும் உடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எம்.சி.கலீல், கல்முனை.05.

# புகார் பெட்டி

# கார்ட்டூன் மூலை




நன்றி - கல்கி

# மறுக்கப்படும் கொடுப்பனவுகள்

(வாழைச்சேனை நிருபர்)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு 1995 ஏப்ரல் மாதம் முதல் 1995 டிசம்பர் வரைக்கும் (9 மாதங்கள்) கஷ்டப்பிரதேசக் கொடுப்பனவாக சம்பளத்தில் 25% இனை வழங்குமாறு அரசு அறிவித்துள்ளதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்குச் சுற்றறிக்கை வந்தவுடனே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இந்த விசேட கொடுப்பனவு கல்வித் திணைக்களம் உட்பட பல திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமை குறித்து சம்பந்தப்பட்ட ஊழியர்களும் ஆசிரியர்களும் கவலை தெரிவிக்கிறார்கள். குறிப்பாக அதிக ஊழியர்களை உள்ளடக்கிய கல்வித் திணைக்கள ஊழியர்களது நிலைமையே மிகப் பரிதாபமாக உள்ளது.

வட-கிழக்கு மாகாண சபையிலிருந்து உரிய நிதி ஒதுக்கீடு கிடைத்தால்தான் தம்மால் வழங்க முடியுமென திணைக்களத் தலைவர்கள் ஊழியர்களிடம் தெரிவித்துள்ளனர்.

# இணைப்புக்கு தடை

புத்தளம் மாவட்டத்தின் பல கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வீடுகளுக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டு பிரகாசமாக காட்சி அளிக்கின்றது.

மின்சாரம் வழங்கப்பட்ட வேளையில் மின்சாரம் பெறாத சில வீடுகளுக்கு மின்சாரம் பெற மின்சார சபைக்கு அறிவிக்கப் பட்ட போது, அவர்கள் மின் இணைப்பு வயர் இல்லை என்று கூறியுள்ளனர். இக்குறையை தீர்ப்பதற்கு இலங்கை மின்சார சபை கவனம் எடுக்குமா?

எம்.ஏ.ஏ.யுனூத்,கொத்தாந்தீவு.

# மாலையானதும் மயங்கும் மின்சாரம்

(அம்பாறை மாவட்ட நிருபர்)

நிந்தவூர்ப்பகுதியில் அடிக்கடி ஏற்பட்டுவரும் மின்சாரத்தடை காரணமாக மின்பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்துவருகின்றனர்.

ஏனைய அயல் கிராமங்களிலெல்லாம் சீரான மின்விநியோகம் இருக்கும் போது நிந்தவூர்ப் பகுதியில் மட்டும் இத்தகைய மின்தடைகள் ஏற்படுவதன் "மர்மம்" என்னவென்று மின் பாவனையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கல்முனை மின்பொறியியலாளர் பிரிவுக்கு உட்பட்ட நிந்தவூரில் அண்மைக்காலமாக மின்தடை, குறைந்த அளவிலான மின்னோட்டம் போன்ற மின்சாரச் சீர்கேடுகள் அடிக்கடி ஏற்பட்டவண்ணமிருக்கின்றன.

குறிப்பாக மின்பாவனை கூடிய இரவு ஆறு மணிக்குப்பின்னர் மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டு, சில சமயம் இரவு பதினொரு மணிவரையும் இருளில் மூழ்கிக்கிடக்க வேண்டிய அவலம் ஏற்படுகின்றது.

# தேவை ஒரு தமிழ் தெரிந்தவர்

பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள லுணுகலை நகரில் இயங்கி வரும் கிராமிய வங்கியில் தமிழ் தெரிந்தவர்கள் எவருமின்றி இப்பகுதியில் வாழும் தமிழ்,முஸ்லிம் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். இந்த நகரைச் சுற்றிவர தோட்டபுற மக்களே வாழ்கிறார்கள்.

தமிழ் மொழி அரசகரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டும் இன்னும் அமுல் படுத்தப்படவில்லையா? இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் இம்மக்களின் குறையை நிவர்த்தி செய்வார்களா என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

எல்.பி.சந்திரகுமார்,ஹொப்டன்.

# கடன் உதவி மறுப்பு

"வடக்கு மாகாண நிர்மாணத் திணைக்கள ஊழியர்கள் பலர் பத்துமாத இடர் உதவிக் கடன் கோரி விண்ணப்பித்து வருடக்கணக்கில் காத்திருந்தும் இக்கடன் வழங்கப்படாமல் மறுக்கப்படுகின்றது. தொடர்ந்து திருகோணமலை தலைமைக் காரியாலயத்திற்கு சென்று விசாரித்தால் பணம் ஒதுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகின்றது. ஆனால் தலைமைக் காரியாலய ஊழியருக்கும், அமைச்சைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் மாத்திரம் ஒழுங்காக வழங்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இப்பார பட்சத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர்ந்து நிவர்த்திப்பார்களா என்று ஊழியர்கள் அங்கலாய்க்கின்றனர்."

க.தேவன்-கல்முனை,மட்டக்களப்பு

# திருத்த வேண்டிய பஸ்தரிப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு எதிரில் உள்ள பஸ்தரிப்பிடம் புனரமைக்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றது. தினமும் நூற்றுக் கணக்கான மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் பயன்படுத்தும் இத்தரிப்பு மோசமான நிலையில் உள்ளது. கூரைகள் இன்றியும் இருக்கைகள் இன்றியும் காணப்படுவதால் பிரயாயணிகள் பெரும் சிரமம் அடைகின்றனர். எனவே இதனை புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும்.

ஏ.கங்காதரன், செங்கலடி.

# "ரஜினியின் அலை வீசுகிறது புது எழுச்சி தோன்றிவிட்டது"

தமிழக முன்னாள் அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் தமிழ்நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்.

எம்.ஜி.ஆர்.அண்ணா தி.மு.க தலைவர் திருநாவுக்கரசுவும் ஆர்.எம்.வீரப்பனும் மீண்டும் இணைந்துள்ளனர். எம்.ஜி.ஆர் உயிருடன் இருந்தபோது திருநாவுக்கரசு ஜெயலலிதாவின் தீவிர விசுவாசியாக இருந்தவர். ஆர்.எம்.வீரப்பன் ஜெயலலிதாவின் எதிர்ப்பாளராக இருந்தவர். பின்னர் ஜானகி அணியில் இருந்த வீரப்பன் ஜெயலலிதாவோடு இணைந்து கொண்டார். திருநாவுக்கரசுவுக்கும் ஜெயலலிதாவுக்கும் ஏற்பட்ட பிரச்சனையால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட திருநாவுக்கரசு தனிக்கட்சி தொடங்கினார். கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் தனித்து நின்று வெற்றியீட்டினார்.

தற்போது ஆர்.எம்.வீரப்பனும், திருநாவுக்கரசுவும் ரஜினியின் முயற்சியால் ஒன்றிணைந்துள்ளனர்.

இதேவேளை இந்தியப் பிரதமர் நரசிம்மராவை ரஜினிகாந்த் சந்தித்த செய்தி பெரியளவில் பேசப்பட்டது. ஆனால் சந்திப்பின்போது ரஜினிகாந்த் பிடிகொடுக்காமல் நடந்து கொண்டார். அரசியலில் ஈடுபடும் தனது முடிவு குறித்து திட்டவட்டமாக எதையும் அவர் தெரிவிக்க வில்லை.

ஆனாலும் ரஜினியை எப்படியாவது அரசியலுக்கு கொண்டுவர பலத்த முயற்சி



நடைபெற்றுவருகிறது.

தமிழ்நாட்டில் ரஜினி அலை வீசுவதாகவும், புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளதாகவும் ஆர்.எம்.வீரப்பன் தெரிவித்துள்ளார்.

ரஜினி அரசியலுக்கு வரவேண்டும். தமிழ்நாட்டில் மூன்றாவது அரசியல் அணி ஒன்று அவசியமாக இருக்கிறது என்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் அடிக்கடி சொல்லி வருகிறார்.

ரஜினி தற்போது ரிஷிகேஷ் சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். பத்து நாட்களில் திரும்பிவிடுவார்.

# மத்திய மாகாணத்தில் சாகித்திய விழா

(கண்டி. நிருபர்)

மத்திய மாகாண இந்து கலாசார கல்வி(தமிழ்) அமைச்சு டிசம்பர் மாதம் 16, 17 ஆம் திகதி தமிழ் சாகித்திய விழா ஒன்றினை நுவரெலியாவில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இந்த கலாசார விழாவின் முக்கிய நோக்கம் மத்திய மாகாணத்தில் கலை இலக்கிய நடவடிக்கைகளை மேம்படுத்தவும், மறைந்து வரும் மலையக பாரம்பரிய கலைகளுக்குப் புத்துயிரளிக்கவும், கலை, இலக்கியவாதிகளை ஊக்குவிப்பதுமே முக்கிய குறிக்கோளாகும். மலையகத்தில் நாடகக் கலையை ஊக்குவிப்பதற்காக கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் நாடகவிழாக்களை ஏற்பாடு செய்து, சிறந்த நாடகங்களை இறுதிநாள் மேடையேற்றப்படுவதுடன் விருதும் வழங்கி கௌரவிக்கப்படும்.

மத்திய மாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக சிறந்த நூல்களை தெரிவு செய்து விருது வழங்கி கௌரவிக்கப் படுவார்கள்.

அதன் முதற் கட்டமாக இந்த சாகித்திய விழாவின்போது 1993, '94ம் ஆண்டின் மத்திய மாகாண எழுத்தாளர்களின் சிறந்த நூல்களை தெரிவு செய்து விருது வழங்கப்படும்.

கலை, இலக்கியம், பத்திரிகைத்துறைகளில் பெரும் பங்களிப்பு செய்துள்ள முன்னோடிகளான மூத்த பெரியார்களை கௌரவித்தல்.

சாகித்திய விழாவை முன்னிட்டு "இலக்கிய மலர்" ஒன்று மத்திய மாகாண எழுத் தர்ளர்களின் ஆக்கங்களைக் கொண்டு வெளி யிடப்படும். சாகித்திய விழாவின் போது எழுத்தாளர் ஒன்று கூடல், நூல் கண்காட்சி, பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறலாம்.

நுவரெலியாவிலும் அட்டனிலும் நடைபெறவிருக்கும் இவ்விழாவுக்கு ம.மா. தமிழ் கல்வி அமைச்சர் திரு.வீ. புத்திரசிகாமணி தலைமை தாங்குகிறார். அமைச்சர்கள் லக்ஷ்மன் ஜெயக்கொடி, எஸ்.தொண்டமான் உட்பட மலையக எம்பீக்கள் பிரதி அமைச்சர்கள் ஆகியோர் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

# புதிய நியமனம்

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சபைக்கு முதன் முறையாக தமிழ் பேசும் வைத்தியர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுறவு மாகாண சபைகள் உள்ளூராட்சி, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொடவிடம் மட்டு.மாவட்டப் பா.உ. அலிஸாஹிர் மௌலானா விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்த நியமனத்திற்கான அங்கீகாரத்தை அமைச்சர் வழங்கியிருந்தார்.

மேற்படி சபையில் இதுவரை காலமும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் நியமிக்கப்படாதது குறித்தே மௌலானா எம்.பி. தனது வேண்டுகோளில் தெரிவித்திருந்தார்.

இதன்படி யாழ் பல்கலைக்கழக சித்த வைத்தியப் பிரிவின் டாக்டர் எஸ்.பவானி, ராஜகிரிய சுதேச வைத்திய நிறுவனத்தின் யூனானி மருத்துவ திணைக்களத்தைச் சேர்ந்த டாக்டர் திருமதி. எஸ்.எஃப்.தாஸிம் ஆகியோரே நியமிக்கப் பட்டுள்ளோராவர்.


## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=

தங்க பஸ்பம் கலந்தது 990/=

வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398



## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)

P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD

162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13

T.P. 342463, 342464

FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி

(J.D.G.A.N.)

P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD

இல 31.32.33

தினச்சந்தை கட்டிடம்

நு வெரலியா.

T.P. 052 2508 3093,

FAX 0094523093 EXT 28

கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்வற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல: T95, மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு.

## தேவை

நிறுவனவம் ஒன்றிற்கு தமிழ் தட்டச்சாளர்கள் தேவைப்படுகின்றனர். தகுந்த தகைமைச் சான்றிதழ்களுடன் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல:1772, கொழும்பு.





# அரசியல் தீர்வில் அமெரிக்கத் தலையீடு!

## பிரபாவின் அடுத்த எதிர்பார்ப்பு

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**நாரதர்**

இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமல்ல என்று மீண்டுமொரு தடவை அமெரிக்கா சொல்லியிருக்கிறது.

படையினரின் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த பின்னர் அமெரிக்க ஜனாதிபதியின் பேச்சாளர் வாய்திறந்திருக்கிறார். எனவே-கிளின்டனின் கருத்தையே அவர் கூறியிருப்பதாக கருதலாம். ராஜதந்திரம் கருதி தமது பேச்சாளர்கள் மூலம் சில சமயங்களில் கருத்து வெளியிடுவது வல்லரசுகளின் வழக்கமாகும்.

அதேசமயம், அமெரிக்காவின் பாராளுமன்றமான காங்கிரஸ் புலிகளை சாடியுமிருக்கிறது. போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்டமைக்கான பொறுப்பை புலிகள்மீதே காங்கிரஸ் சுமத்தியிருக்கிறது.

அரசியல் தீர்வு முயற்சிகளில் சகல தரப்புக்களும் பங்குகொள்ளவேண்டும் என்று கூறியிப்பது மூலம் புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் என்பதை காங்கிரஸ் மறுத்துமிருக்கிறது.

ஆனால் கிளின்டனின் பேச்சாளர் விடுத்த அறிக்கையில் புலிகளது கெரில்லாத் தாக்குதல் திறன் குறித்து மறைமுக வியப்பும் தொனிக்கிறது.

அமெரிக்க காங்கிரசும், கிளின்டன் நிர்வாகமும் விடுத்த அறிக்கைகளில் சற்றே முரண்பாடு தெரிந்தாலும், அமெரிக்காவின் நலன்தான் முக்கியம் என்பதில் அவற்றுக்கிடையில் முரண்பாடு இருக்க முடியாது.

தெற்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நலன் என்று பார்க்கும் போது முற்று முழுதாக புலிகள் இயக்கம் பலவீனமாகிவிடுவதை அமெரிக்கா விரும்பப் போவதில்லை.

இந்தியாவுக்கும்-புலிகளுக்குமிடையிலுள்ள தீராப் பகை அமெரிக்காவின் நலனுக்கு உதவக்கூடியது. இலங்கையின் இனப் பிரச்சனையின் முக்கிய பங்காளியாக இருந்த இந்தியா இன்று வேண்டாத விருந்தாளியாக மாறியதற்கு காரணமும் அந்தப் பகைதான்.

இந்தியா வேண்டப்பட்ட விருந்தாளியாக இருந்தால் இன்று அமெரிக்காவுக்கு இங்கே வேலை இருந்திருக்காது. "நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று இந்தியா ஒரே வார்த்தையில் சொல்லியிருக்கும்.

தற்போது உலகெங்கும் பிரச்சனைகளைத் தீர்க்கும் பொலிஸ்காரனாக மாறியிருக்கும் அமெரிக்காவுக்கு இலங்கைப் பிரச்சனையில் தலையிட இருக்கக்கூடிய ஒரே ஒரு தடை இந்தியாதான்.

புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விரோதத்தால் அந்தத் தடையும் இல்லாமல் போய்விட்டது. இதில் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விடயம் யாதெனில், புலிகளைத் தவிர ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்துமே இந்தியாவின் மத்தியஸ்தம் மீண்டும் ஏற்படுவகை விரும்புகின்றன.

ஆனாலும் ஒரு மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. 1986ற்கு முன்புவரை இந்தியா மட்டுமே மத்தியஸ்தம் செய்ய முடியும் என்று கூறிவந்த தமிழ் கட்சிகள் இப்போது இந்தியாவும் மத்தியஸ்தம் செய்யலாம். அமெரிக்கா மத்தியஸ்தம் செய்தாலும் எதிர்ப்பில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றன. அமெரிக்கா இலங்கையில் காலூன்றிவிடும். அதனால்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று முன்பு ஒரு போடு போட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப், இப்போது பத்தோடு பதினொன்றாக நின்று "மூன்றாவது மத்தியஸ்தம் தேவை" என்று பொது வாகவே கூறியிருப்பது நல்ல உதாரணம்.

எனினும், புலிகள் முற்றாக பலவீனமாகிவிட்டால், இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் தலையீட்டுக்கான முக்கிய தடை விலகியதாகிவிடும்.

எனவே-அமெரிக்காவின் நலன் என்ற பக்கத்தில் நின்று பார்த்தால் புலிகள் முற்றாகவே பலவீனமாவதை அமெரிக்கா விரும்பப்போவதில்லை.

அதேசயம், புலிகளோ அல்லது இலங்கை அரசோ வெளிச்சக்திகளது உதவி தேவையில்லை, நம்மால் மட்டுமே முடியும் என்று அசுரபலம் பெறுவதையும் அமெரிக்கா விரும்பப்போதில்லை. அதனால் புலிகள் சற்றுப் பலவீனமாகி இரு தரப்புமே சலிப்படையும் நிலையில் யுத்த நிலவரம் இருப்பதையே அமெரிக்கா விரும்பும்.

புலிகளைப் பொறுத்த வரையில் முன்னர் இந்தியாவிடமும் அவர்கள் எதிர்பார்த்தது நேரடியான தலையீட்டையல்ல. இந்தியப் படை தேவையில்லை என்று பிரபாகரனே பல தடவைகள் கூறியிருந்தார்.

மூன்றாவது சக்தி ஒன்று நேரடியாக தலையிட்டால் தமிழீழம் என்பது சாத்தியமாகாது. ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வுதான் காணப்படும். அதனை ஏற்கும் நிர்ப்பந்தமும் ஏற்படும் என்பது பிரபாகரனின் நம்பிக்கையாகும்.

இந்தியா நேரடியாகத் தலையிட்ட போது மாகாண சபையை ஏற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தம் புலிகளுக்கும் ஏற்பட்டது. பின்னர் போர் மூலம் அந்த நிர்ப்பந்தத்தை புலிகள் லிலக்கிக் கொண்டார்கள். தற்போதைய நிலையில் பிரபாகரன் விரும்பக்கூடியதும் வெளிச்சக்திகளது நேரடித் தலையீடல்ல.

அமெரிக்காவிலும், கனடாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் புலிகளின் கிளைகள் ஊர்வலங்களை நடத்துகின்றன.

எந்தவொரு ஊர்வலத்திலும் வெளிச்சக்திகளின் நேரடித் தலையீட்டுக்கு கோரிக்கை விடுக்கப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

தமிழீழத்தையும், புலிகள் அமைப்பையும் அங்கீகரிக்குமாறுதான் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிடம் புலிகள் அமைப்பும் அதன் தலைவர் பிரபாகரனும் இரண்டுவிதமான எதிர்பார்ப்புக்களை வைத்திருக்கிறார்கள். ஒன்று புலிகளுக்கு உதவாவிட்டாலும் இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொள்ளாமல் இருப்பது.

இரண்டு, புலிகளுக்கு அரசியல் இராணுவ ரீதியாக உதவி செய்வது. தேவையானால் ஒரு படி மேலே வந்து போர் நிறுத்தம் மற்றும் நிவாரண நடவடிக்கைகளை கண்காணிக்கும் பாத்திரம் வகிக்கலாம்.

அதுதான் புலிகளின் நிலைப்பாடு. ஒருவேளை நிலமை புலிகளின் கைகளை விட்டுப் போகுமானால் பேச்சுவார்த்தை என்பது கட்டாயமான நிர்ப்பந்தமானால் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை புலிகள் ஏற்கக்கூடும். நேடியாக அரசோடு பேசினால் புலிகள் பலவீனமாகித்தான் பேச்சுக்குச் செல்கிறார்கள் என்று கருதப்படும். வெளிநாட்டு மத்தியஸ்தம் இருந்தால் உலக நாடுகளது விருப்பம் காரணமாக பேச்சுக்குச் செல்கிறோம் என்று புலிகள் கூறக்கூடியதாக இருக்கும். அப்படியான நிலையில், தனி ஒரு நாட்டின் மத்தியஸ்தத்தை கோராமல் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளது மத்தியஸ்தத்தை புலிகள் கோரக்கூடும்.

தமிழீழம் என்பதை உலக நாடுகள் எதுவும் அங்கீகரிக்காத நிலையில் எந்தவொரு வெளிநாட்டு மத்தியஸ்தமும் 'தமிழீழம் புலிகளின் தாகம்' என்ற நிலைப்பாட்டுக்கு சாதகமாக அமையப்போவதில்லை.

எனவே-நேரடித் தலைமீடுகளை பிரபா விரும்பப்போவதில்லை. தமது பலத்தை தக்க வைத்துக்கொள்ளக்கூடிய சில காய் நகர்த்தல்களையே பிரபாகரன் விரும்புவார்.

1987ல் படையினரால் வடமாராட்சியில் ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடத்தியிருந்தால் தற்போது ஏற்பட்டுள்ள நிலைதான் அன்றும் ஏற்பட்டிருக்கும்.

இந்தியா உணவுப்பொட்டலங்களை வீசியதோடு தலைமீடு ஆரம்பித்து, இராணுவ நடவடிக்கை தடைப்பட்டது. எனினும் இந்தியத் தலைமீடுதான் இராணுவ நடவடிக்கை தடைப்படக் காரணம் என்பதை அப்போது புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

தெல்லிப்பளையில் இராணுவ முகாம் மீது முதலாவது கரும்புலி மில்லர் வெடிகுண்டு நிரப்பிய லொறியோடு சென்று மோதினார். படை நடவடிக்கைகள் முதலில் தடைபட அதுவும் ஒரு காரணம். என்றாலும், படையினர் தம்மை சுதாகரித்துக் கொண்டு மீண்டும் முன்னேற ஆயத்தம் செய்தனர்.

இந்தியத் தலைமீடுதான் ஒப்பரேஷன் லிபரேஷனுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

புலிகள் எதிர்நோக்கிய முதலாவது நெருக்கடி ஒப்பரேஷேன் லிபரேஷன்தான்.

அப்போது இந்தியத் தலைமீடு புலிகளுக்கு தேவையாக இருந்தது. ஆனாலும் இந்தியாவின் படை வரவேண்டும் என்று புலிகள் எதிர்பார்க்கவில்லை.

இலங்கை அரசு தனது இராணுவ நடவடிக்கைகளை உக்கிரப்படுத்தாதவகையில் இந்தியா பார்த்துக்கொண்டால் போதும் என்றளவில்தான் புலிகளது எதிர்பார்ப்பும் இருந்தது. பின்னர் பிரேமதாசா அரசாங்கத்தின் உதவியைப் புலிகள் பெற்றபோதும் இந்தியப் படையை வெளியேற்றும் நிர்ப்பந்தம் என்றளவில் மட்டுமே அதனைப் பயன்படுத்தினார் பிரபாகரன். படையினர் வடக்கு-கிழக்கில் தமது முகாம்களை விஸ்தரிப்பதை புலிகள் விரும்பவில்லை.

தற்போது மூன்றாவது நெருக்கடியை புலிகள் எதிர்நோக்கியுள்ளார்கள். இக்கட்டத்தில் புலிகள் எதிர்பார்ப்பது படைகளின் நடவடிக்கை தொடர்வதை நிறுத்தக்கூடிய வெளியுலக நிர்ப்பந்தங்களை மட்டுமே. தென்மாராட்சியை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்த வெளியுலகம் உதவுமானால் அதுவும் புலிகளுக்கு ஒரு சாதகம்தான். படையினர் குடாநாடு முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதை அது தடுக்கும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி அகதிகளை மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப வெளியுலகம் உதவ வேண்டும் என்ற கோரிக்கையிலும் இரண்டு பக்கங்கள் உள்ளன.

ஒன்று மனிதாபிமானப் பக்கம். மற்றயது இராணுவ தந்திரப் பக்கம்.

அகதிகள் திரும்பி வரலாம் என்று அரசு சொல்லுமானால், படையினர் திரும்பிச் சென்றால்தான் மக்கள் திரும்புவார்கள் என்று மக்களின் சார்பில் புலிகள் சொல்லுவார்கள். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்.

அதற்கு வெளியுலகம் ஆதரவாக குரல் கொடுப்பதையே புலிகள் எதிர்ப்பார்க்கிறார்கள். அரசோடு பேச்சு நடத்துமாறு வெளியுலகம் சொன்னாலும் தற்போது இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது பகுதிகளுக்கு திரும்புவதை முன்நிபந்தனையாக புலிகள் விதிக்கலாம்.

சுருக்கமாகச் சொல்வதானால் இடம் பெயர்ந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சனை என்ற ரீதியில் வெளியுலக அனுதாபத்தைப் பெறுவதும், அதனை தமது அரசியல் இராணுவ நோக்கங்களுக்கும் சாதகமாக்கிக் கொள்வதுமே புலிகளது தற்போதைய இராஜதந்திர எதிர்பார்ப்பாக இருக்கிறது. தற்போதைய இராணுவ நடவடிக்கை புலிகளை யாழ் குடாநாட்டில் பெரும் பகுதியிலிருந்து வெளியேற்ற முடிந்தாலும், புலிகளை மக்களிடமிருந்து வெளியேற்ற முடியாது. அதற்கேற்பவே புலிகள் மக்களை யும் நகர்த்தியிருக்கிறார்கள்.

போர் ஒரு பக்கம், புத்திசாலித்தனமான காய் நகர்த்தல்கள் மறு பக்கம். விடை காண முடியாத புதிரான காலகட்டத்தில் தற்போது வடபுல நிலவரம்.

□□

கொழும்பு இராணுவ தலைமையகம் முன்பாக நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல் முயற்சியால் புலிகளைவிட அரசுக்கே லாபம்.

வடக்கில் இருந்து உத்தரவு எதுவும் வாாதநிலையில் கொழும்பில் உள்ள புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் செயற்படுகிறார்களா? என்று சில விமர்சகர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இராணுவத் தலைமையகத்திற்கு புலிகள் குறிவைப்பதோ, அல்லது புலிகளது தலைமையகத்தை படையினர் குறிவைக்கத் தேடுவதோ போரில் எதிர்பார்க்க வேண்டிய சம்பவங்கள்தான்.

ஆனால், பொதுமக்கள் மத்தியில் தற்கொலைத் தாக்குதல் நடத்தி பெண் கரும்புலி ஒருவர் பலியானது எவ்வகையிலும் நியாயம் சொல்ல முடியாத நடவடிக்கையாகிவிட்டது.

தற்கொலைத் தாக்குதல் குறித்து ஏற்பட்ட வியப்புக்களையும் இலக்கில்லாமல் தாக்குதல் நடத்தி பலியாகும் நடவடிக்கைகள் குறைக்கத் தொடங்கியுள்ளன.

சாதாரண முறையில், வழக்கமான உத்திகள் மூலம் எட்ட முடியாத இலக்குகளுக்கு கடைசி முயற்சியாகவே தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்படுவது வழக்கம்.

கைக்குண்டுகளுக்கு பதிலாக மனிதக் குண்டுகளை வீசும் சாதாரண நடவடிக்கையாக தற்கொலைத் தாக்குதல் மாறிவருவது மனித உயிர்கள் குறித்த அலட்சிய மனோபாவத்தையே குறிப்பதாகிவிடுகின்றன.

ஏற்கெனவே-வடக்கில் நடைபெறும் போரில் பொதுமக்களுக்கு ஏற்படும் உயிரிழப்புக்கள் குறித்த செய்திகளோ, புகைப் படங்களோ வெளியாக முடியாத நிலை இருக்கிறது. வடபுலப் போர் நிலவரம் பற்றி படை அதிகாரிகள் வெளியிடும் தகவல்களை நம்பியே செய்தி நிறுவனங்கள் செயற்பட வேண்டியிருக்கிறது.

பொதுமக்கள் பாதிப்படையும் வகையிலான ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டுவீச்சுக்கள் நடத்த வேண்டாம் என்று பொதுவாக கோரிக்கைகள் விடப்படும் போதும், அவ்வாறு நடைபெற்றதா என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் வடக்கிலிருந்து வெளியே வரவில்லை.

இந்நிலையில், கொழும்பில் சாதாரண பொதுமக்கள் மீது நடைபெற்ற குண்டு வெடிப்பு அரசுமீது புலிகள் சுமத்தும் குற்றச்சாட்டுக்களையும் சேர்த்து தகர்த்து விட்டது.

புலிகள் கொடூரமானவர்கள் என்று அரசாங்கம் வெளியுலகம் முன்பாக நிரூபிக்கக்கூடிய ஆதாரங்களை தலைநகரில் வைத்து புலிகளே உருவாக்கிக் கொடுத்ததாகிவிட்டது.

இதனால் இழப்பு புலிகளுக்கு மட்டுமல்ல, சாதாரண தமிழ் மக்களது பாதிப்புக்கள் குறித்த அனுதாபங்களும் அடிபட்டுப் போய்க்கொண்டிருக்கின்றன.

யாரைக்கண்டிப்பது என்று தெரியாமல் வெளியுலகம் தலையைச் சொறிந்து கொள்ள வேண்டியதாகிவிட்டது.

ஒரு தனிநபரால் உள்ளே பிரவேசிக்க முடியாதளவுக்கு இராணுவத் தலைமையகம் பாதுகாப்பாக இருப்பது தெரிந்த விசயம்.

எனவே-உள்ளே சென்று தாக்குவதோ, அல்லது முக்கிய இராணுவத் தலைவர்களை குறிவைப்பதோ முதலில் சென்ற கரும்புலியின் நோக்கமல்ல என்பது தெளிவு.

ஆனால், இன்னொரு கரும்புலி சற்று தூரத்தில் தயார் நிலையில் நின்றது ஏன்? என்று யோசிக்க வேண்டியுள்ளது.

முதல் குண்டுவெடிப்பையடுத்து சம்பவம் இடம் நோக்கி இராணுவ தலைமையகத்திற்குள் இருந்து முக்கிய அதிகாரிகள் வரக்கூடும். அந்த நேரத்தில் கூட்டத்தோடு கூட்டமாக புகுந்து தற்கொலைத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கலாம்.

அல்லது, முதல் குண்டு வெடித்து தலைமையக நுழைவாயிலில் நின்ற படையினர் பலியாக, உள்ளளே ஊடுருவி இரண்டாவது தாக்குதலை நடத்தலாம். சேதம் எப்படி யிருந்தாலும் இராணுவத் தலைமையகத்திற்குள் ஊடுருவ முடிந்தது என்று தமது திறனை வெளிப்படுத்துவதே நோக் கமாக இருந்திருக்கலாம்.

ஆனால், நுழைவு வாயிலில் முதலாவது மனிதக் குண்டு வெடித்த போதும், இருவர் காயமடைய ஏனையோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கி விட்டனர். தலைமையகத்தின் உள்ளே இருந்தும் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படத் தொடங்கிவிட்டன.

அதுதவிர, சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு யாரும் செல்ல முடியாதவாறு உடனடியாக பாதைத் தடை போடப்பட்டு விட்டது.

எனவே-காத்திருந்த மற்றொரு கரும்புலி திரும்பிச்செல்ல வேண்டும். திரும்பிச் சென்றால் பொலிசாரது சோதனையில் மாட்டவேண்டி ஏற்படலாம் என்று நினைத்தோ என்னவோ நின்ற இடத்திலேயே வெடித்திருக்கிறார்.

, எப்படியிருந்தாலும், இராணுவ தலைமையகத் தாக்குதல் திட்டமிட்டு, இலக்குகொன்றைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலல்ல. தாக்குதல் ஒன்றை நடத்திக் காட்டி தாம் பலவீனமாகிவிடவில்லை என்று காட்ட முற்பட்டிருக்கலாம். அப்படியான தாக்குதலில் வி.ஐ. பிக்கள் யாராவது சிக்கினால் லாபம்தான் என்று தப்புக் கணக்குப் போட்டிருக்கலாம்.

கணக்குகள் பிழைத்த போது பொதுமக்கள் இலக்காக மாற்றப்பட்டமை. எல்லாவற்றையும் தப்புக் கணக்காக்கி விட்டது.

பாதுகாப்பு பிரதியமைச்சரை குறிவைத்தார்களோ என்று ஒரு சந்தேகம் கிளப்பப்பட்டது. ஆனால் பாதுகாப்பு பிரதியமைச்சர் அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்தார். எனவே-அந்தச் சந்தேகத்தை கழித்துவிடலாம். தவிர, இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்ற இடங்களுக்கு உடனடியாக முக்கிய தலைவர்கள் செல்வதும் வழக்கமல்ல.

## அதிரடி அய்யாத்துரை




யாழ்ப்பாணத்தின் அதிகாரமுள்ள அதிபர் டிஸ்மிஸ் என்று செய்தி வந்ததல்லோ பாருங்கோ விஷயத்தைக் கேள்விப்பட்டவுடனை மனுசா ஆடிப் போனாலும் அவர் எதிர்பார்த்த முடிவு தானாம். "சொன்னாலும் குற்றமடா, சொல்லாவிட்டாலும் குற்றமடா" எண்டு பாடுற நிலைதான் பாருங்கோ அவரின் நிலையும். நிலவரம் சொன்னால் மேலிடம் கோபிக்குது. நிலவரத்தை சொல்லாட்டி தம்பிமார் மேலுக்கு அனுப்பிப் போடுவினம். கவலைக்கிடமான நிலைமை தானே.

கடந்தவார கொழும்பு குண்டு வெடிப்பு விஷயத்திலை 12.45 மணிச் செய்தியிலை வானொலி 9 பேர் பலி எண்டு சொல்ல, ஒரு மணிக்கு ரூபாவாகினியிலை 19 பேர் பலி எண்டு சொல்ல எனக்குத் தலை சுற்றிப் போட்டுது. பிறகு மாலைச் செய்தியிலை ரூபாவாகினியிலை 10 பேர்தான் பலி எண்டு சொன்னவை. செத்தவை உயிர் பெற்று வந்த அதிசயம் ஏதும் நடந்து போட்டுதோ? அதே நேரத்திலை ரூபாவாகினியிலை இப்படியும் ஒரு செய்தி, "விஷமிகள் சிலர் தவறான தகவல்களை பரப்பிவருகிறார்கள்." இது யாரை மனசிலை வைச்சு சொல்லப்பட்ட செய்தியானாலும், 'சேம் சைட் கோல்'போட்ட மாதிரியல்லோ அமைஞ்சுபோச்சு.

வெகுஜன சபையைப் பகிஷ்கரித்தது எண்டு கூட்டான கட்சி அறிக்கைவிட்டதல்லோ. பிரதிநிதிகள் சபைக்குள் போன கதை தெரியாமல் சில பத்திரிகைகளும் செய்தியைப் போட்டவை. நான் சொன்னதை நம்பாட்டிலும் பகிஷ்கரிப்பு எண்டு அறிவிக்கப்பட்ட நாளில் கூட்டான கட்சிப் பிரதிநிதிகளுக்கு தலா 200 ரூபா கணக்கிலை விழுந்ததை மறைக்க முடியாதுங்கோ. வெகுஜன சபை பிரதிநிதிகளுக்கு சம்பளத்தைவிட மேலதிகமாக கூட்டத்திற்கு போகும் நாளுக்கு எண்டு தனியாக 200 ரூபா கொடுக்கப்படும். ஒரு நாள் அப்செண்ட் எண்டாலும் 200 ரூபா துண்டு. அதைவிடவும் மனம்வரேல்லை. வாழ்க, பொதுநலம்.

தேனகத்தில் ரெண்டு எழுத்தாரால் கடத்தப்பட்டவர் பிரேதச வாதத்திலை பிரபலம் தேடுறவா எண்டு முந்தியே ஒரு கதை. கிழக்கின் தமிழ் வெகுஜனப் பிரதிநிதி ஒருவரோடு நல்ல நெருக்கமாம். பிரதிநிதிக்கு திக் திக். அதுதான் ரெண்டு எழுத்தாரை சமாளிக்க சில ஆவேச அறிக்கைகளை ரெடி பண்ணிக் கொண்டிருக்கிறாராம்.

குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டாலும் கேட்டுது, ரெண்டு எழுத்தார் புகுந்திட்டினம் எண்டு தனியார் பாதுகாப்பு நிறுவனப் பொறுப்பாளர் உயிரை விட்டுப்போட்டார். அனுதாபமான விஷயம் எண்டாலும், அவர் எப்படி பாதுகாப்பு நிறுவனத்திற்கு பொறுப்பாக இருந்தார் எண்டதுதான் உறுத்தலாய் இருக்குது.

வெடியோசை கேட்டவுடனை ஒரு தனியார் செய்தி நிறுவனம் முந்திக் கொண்டு செய்தி கொடுக்கும் ஆசையிலை என்ன செய்தது தெரியுமோ? அதிரடித் தாக்குதலாக்கும் எண்டு நினைச்சுக்கொண்டு தனக்கு தெரிஞ்ச ஆயுதங்களின் பெயர்களையெல்லாம் போட்டு, சண்டை நடந்து கொண்டிருக்கு எண்ட மாதிரி உலகமெல்லாம் செய்தியனுப்பிப் போட்டுதாம்.

வெளிநாட்டு வானொலிச் சேவை ஒண்டுக்கு புரளி கிளப்பிறதிலை பொல்லாத ஆசை. தலைநகரில் தனியார் வைத்திய சாலையில் குண்டு வெடிச்சது எண்டு செய்தி வெளியிட்டுப்போட்டுது. அதோடு அந்த வானொலியை நான் 'வெறுத்தாச்'.

யாழிலிருந்து தலைநகர் பக்கம் வரும் மடல்கள் சில நேரம் உடைத்து பார்க்கப்படுகிறதாம். ஒரு மடலில் 'வேலையை முடித்து விட்டு வரவும்' எண்டு ஒரு வாசகம் இருந்தது பெரிய தொல்லையாய் போச்சுது. அது என்ன வேலை எண்டு விளக்கம் கொடுக்க சம்பந்தப்பட்டவர் சரியாக் கஷ்டப்பட்டுப் போனாராம்.

நல்லைக் கந்தனுக்கு ஒரேயடியாக அரோகரா. அதாவது பாருங்கோ, முதலாளி கோவிலை பெரிய பூட்டுப் போட்டு பூட்டிப் போட்டாராம். "திறந்திருந்தா சனம் வந்து உள்ளே இருந்திடும். பூட்டவோ தம்பிமார்?" எண்டு கேட்டவராம். "உடன் பூட்டுங்கோ"எண்டு உத்தரவு கிடைச்சதாம். கந்தனுக்கு அரோகரா.

அறிவுரை மாதிரியான ஒரு குட்டிக் கவிதை.

"பாறையைப் போன்று
கடினமாக இரு.
உன்னால்
சிற்பமாக முடியுமென்றால்!
மரத்தைப் போன்று
மென்மையாக இரு,
உன்னால்
தெப்பமாக முடியுமென்றால்!"
(ராஜசேகர்)

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் 53

அற்புதன் எழுதுவது



**செ**ன்னையில் புலிகள் அமைப்பின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டுக்கு குண்டு வைத்தது இலங்கை அரசின் உளவாளிகளும் மொசாட்டும் இணைந்து செய்த சதி என்றே புலிகள் உடனடியாகக் குற்றம் சாட்டியிருந் தார்கள்.

அதன் பின்னர்தான் கந்தசாமி நாயுடு மீது சந்தேகம் ஏற்பட்டது. கந்தசாமி நாயுடு பற்றிச் சில பின்னணி விபரங்கள் கூறவேண்டும்.

பிரிவினர் பார்வையிட்டபோது அவர் அடிக் கடி இரண்டு பேரைச் சந்தித்த விடயம் தெரியவந்தது.

ஒருவர் மணைவைத் தம்பி, மற்றவர் தற்போது சென்னையில் மதுரா ட்ராவல்ஸ் உரிமையாளராக உள்ள வி.கே.ரி.பாலன். இருவரும் இலங்கையிலிருந்து சென்று சென்னையில் குடியேறியவர்கள்.

கந்தசாமியுடன் சேர்த்து அந்த இருவரும் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருந் தனர்.

பின்னர் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப் படாத நிலையில் கந்தசாமி நாயுடு விடுதலை

# சென்னையில் நடந்த உளவு வேலைகள்

## சிறுபான்மைத் தமிழர்

கந்தசாமி நாயுடு இந்திய வம்சா வளியைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்தில் வசித்தவர்.

யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்னும் அமைப் புக்கு தலைவராக இருந்தவர் சி.சுப்பிர மணியம்.

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை?" என்று காசி ஆனந்தன் கவிதை எழுதியிருந்தார். அதனைக் கூட்டணி மேடைகளில் பேச்சாளர்கள் மறந்து விடாமல் பயன்படுத்துவார்கள்.

ஆண்ட பரம்பரை என்பது உயர்சாதி. அந்தப் பரம்பரை மீண்டும் ஆள வந்தால் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் உதைக்கப்படுவார்கள் என்று சிறுபான்மை தமிழர் மகாசபை பீதியூட்டிக் கொண்டிருந்தது.

சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்க ளையே சிறுபான்மைத் தமிழர் என்ற பதத்தால் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி போன்றவை அழைத்து வந்தன. சிறு பான்மைத் தமிழர் மாகாணசபை என்பதும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவுதான்.

அப்போது சிறீலங்கா சுதந்திரக் கட் சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியில் இருந்தது.

தமிழர்கள் மத்தியில் சிறுபான்மைத் தமிழர், பெரும்பான்மைத் தமிழர் என்ற பிரிவினை நிலவுவதை ஐக்கிய முன்னணி அரசாங்கமும் விரும்பியிருந்தது.

அதனால் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரான சி.சுப்பிர மணியத்திற்கு நியமன எம்.பி. பதவி கொடுக்கப்பட்டது.

சி.சுப்பிரமணியத்தோடு நெருக்கமாக இருந்த திரு.கந்தசாமி நாயுடுவுக்கு சுப்பிர மணியம் பொலிஸ் சேவையில் வேலை பெற்றுக் கொடுத்தார்.

## அனுதாபியா?

கூட்டணியின் செயலாளர் நாயகம் அமரர் அமிர்தலிங்கத்தின் பகாதுகாப்பு அதிகாரியாகவும் திரு. கந்தசாமி கடமை யாற்றினார். அதன் பின்னர் இலங்கையின் தேசிய உளவுப் பிரிவான **NIB** க்கு மாற்றப்பட்டார்.

பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு.தொண்டமான் தனது பாதுகாப்பு அதிகாரியாக கந்தசாமி நாயுடுவை நியமிக்குமாறு ஜே.ஆரிடம் கேட்டுக்கொண்டார். அதனால் **NIB** யிலிருந்து விடுவித்து. அமைச்சர்

செய்யப்பட்டார்.

## மர்மம்

கந்தசாமி நாயுடுவின் இந்திய விஜயமும், இயக்கங்களின் உறவைத் தேடுவதில் ஆர்வம் காட்டியதும் சந்தேகத்திற்குரியதாகவே கருதப்பட்டது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனாதான் சில காலம் ஜே.ஆரின் பாதுகாப்பு ஆலோசகராக இருந்தவர்.

இந்தியாவிலுள்ள போராளி அமைப்புக் களைக் கண்காணிக்க கந்தசாமி நாயுடுவையும் அவரே அனுப்பி வைத்ததாகக் கூறப்பட்டது.

ஆனால் கந்தாசாமி நாயுடு இலங்கை திரும்பியபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் வரை தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

கந்தசாமி நாயுடு தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உபதலைவராக இருந்து வருகிறார்.

காலித்துறைமுக அபிவிருத்தி திட்டக்

இயக்க உறுப்பினர்கள் தம்மை பின்தொடர்வதாகத் தெரிந்தால் உடனே ரவுடிகளிடம் காட்டிவிடுவார்கள்.


இயக்க உறுப்பினர்களை சிங்கள இனத் தைச் சேர்ந்தவர்கள் என்றும், தம்மை தாக்க வருவதாகவும் ரவுடிகளிடம் சொல்லிவிட்டு உளவுத்துறையினர் நழுவிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன.

ரவுடிகளிடம் மாட்டிக்கொண்டு தம்மை விடுவித்துக்கொள்ள இயக்க உறுப்பினர்கள் தடுமாறிய சந்தர்ப்பங்களும் இருந்தன.

## டபுள் ஏஜன்ட்

இதற்கிடையே ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக் கத்தில் இருந்த உறுப்பினர் ஒருவரை தேசிய புலனாய்வுப் பிரிவு தமது ஆளாக மாற்றிக்கொண்டது.

அவ்வாறு மாற்றப்பட்டவரின் பெயர் மவுசூக். சென்னையில் இருந்து கொழும்பு வந்தபோது மவுசூக் கைது செய்யப்பட்டார். அவரை விடுதலை செய்ய வேண்டுமானால் தமக்கு தகவல் தருபவராக மாறவேண்டும்




இந்திய சஞ்சிகையொன்றில் வெளிவந்த் காட்டூன்

ஏற்றுக்கொண்டால் மக்கள் எம்மை நிரா கரித்து விடுவார்கள்" என்று தலைவர்கள் கூறினார்கள்.

"எனினும் இந்தியாவின் சமரச முயற்சி களுக்கு தடையாக இருக்க மாட்டோம்" என்றும் தெரிவித்தார்கள்.

அதன்பின்னர் இந்திய அதிகாரி களுடன் புதுடில்லியில் வைத்து இயக்கத் தலைவர்கள் பேச்சு நடத்தினார்கள்.

இலங்கை அரசு தனது புதிய யோசனை ஒன்றை இந்தியாவுக்கு அனுப் பியிருந்தது. இந்திய அதிகாரிகள் மூலமாக அந்த யோசனை இயக்கத் தலைவர்களிடம் முன்வைக்கப்பட்டது.

புதிய யோசனை என்று சொல்லப் பட்டபோதும், திம்புப் பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் அதற்கும் பெரியவேறுபாடுகள் இருக்கவில்லை.

வடக்கு மாகாணத்திற்கும், கிழக்கு மாகாணத்திற்கும் இரண்டு தனித்தனி சபைகள் அமையும். அது தவிர, கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலை நகரம் மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் இருக்கும். மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள் விரும்பி னால் பிரிந்து மாவட்ட சபைகளாக செயற் படலாம்.

மாகாண சபைகளும், மாவட்ட சபை களும் மத்திய அரசின் பூரண கட்டுப் பாட்டிலேயே இருக்கும். அதுதான் புதிய யோசனையின் முக்கிய அம்சங்கள்.

## நிராகரிப்பு

நான்கு இயக்க கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணி **(ENLF)** அந்த யோசனையை நிராகரித்தது.

இலங்கையில் இரு தேசிய இனங்கள் உள்ளன. அவையிரண்டும் தனித் தனியாகப் பிரிந்து இரு நாடுகளாக அமையும் தகுதி கொண்டவை. அதன் அடிப்படையில் முன் வைக்கப்படும் யோசனைகளை பற்றியே எம்மால் விவாதிக்க முடியும். வேறு யோசனைகளை ஆராய முடியாது என்று நான்கு இயக்கக் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறிவிட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய

பரஸ்பரம் விட்டுக்கொடுத்து இடைக்காலத் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். பின்னர் போராட்டத்தையும் தொடரலாம் என்று இந்தியா எமக்கு ஆலோசனை கூறலாம். இது தற்கொலைக்கு ஒப்பானது என்பதை நாம் அறிவோம்.

தமிழிழப் போராட்டத்தை எம்மால் கைவிட முடியாது. ஆனால் இந்தியாவின் நல்லுறவை முறித்துக்கொள்ள நாம் விரும்பவில்லை. இடைக்காலத் தீர்வு என்ற பொறியிலிருந்து இந்தியாவின் நல்லுறவை முறிக்காமல் தப்பிக் கொள்வதே புத்திசாலித்தனம்.

பேச்சுவார்த்தைகளில் இருந்து ஒதுங் குவதே அறிவுடமை. அற்ப ஆசை களுக்காக பொறியில் வீழ்பவர் விழட்டும். எமது இலட்சியத்திற்காக எந்த எதிர் விளைவு ஏற்பட்டபோதும் அதனைத் தாங்கி எமது வழியில் நடப்பதே சிறந்தது.

அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஊடுருவலையும், அவற் றின் ஆதிக்கத்தையும் தடுக்கவும், பேரின வாத சிறீலங்கா இந்தியாவின் தெற்கில் அதன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லாமல் இருக்கவும் தமிழீழம் உருவாகு வதே சிறந்ததாகும்.

இவ்வுண்மையை ஏற்றுக்கொண்டு இந்தியா எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

அமையப்போகும் தமிழீழம் இந்தியா வுக்கு நட்புக்கரம் நீட்டி அதற்கு உறு துணையாக அமையும். அதன் பாதுகாப் புக்கு பலமாக அமையும். தமிழ் மக் களும், அவர்களது தமிழீழமும் இந்தியா வால் புறக்கணிக்க முடியாதவை. அது மாத்திரமல்ல, ஒன்றிலிருந்து ஒன்று அவற்றின் நலன்கள் பிரிக்கப்பட முடியா தவை.

**இந்தியாவின் நட்பு எமது போராட் டத்துடன் ஒன்றிப் போனது. ஆயினும் அந்த நட்பை இழந்து போயினும், நாம் நமது மக்களுக்காக, நமது மண்ணில் தொடர்ந்து போராடத்தான் போகிறோம்.**

எமது தலைவர் பிரபாகரன் கூறியது

# "தமிழீழத்தை கைவிடுவது தற்கொலைக்கு ஒப்பானது"

## "வெளிச்சக்திகளை நம்பி போராடவில்லை"

## புலிகள் வெளியிட்ட முக்கிய அறிக்கை



ரொமேஷ் பண்டாரி

தொண்டமானின் பாதுகாப்பு அதிகாரியாக திரு.கந்தசாமி நாயுடு நியமிக்கப்பட்டார்.

1984ம் ஆண்டளவில் கந்தசாமி நாயுடு தமிழ் நாட்டுக்குச் சென்றார்.

சென்னையிலிருந்த ஈழப் போராளி அமைப்புக்கள் பலவற்றோடு திரு.கந்தசாமி நாயுடு தொடர்புகளை வைத்திருந்தார். இயக்கங்களின் அனுதாபி என்று கருதப் பட்டார்.

சென்னையில் அன்ரன் பாலசிங்கம் வீட்டுக்கு குண்டு வைக்கப்பட்டதையடுத்தே கந்தசாமி நாயுடு மீது சந்தேகம் ஏற்பட்டது.

இந்தியாவின் 'றோ' உளவுப் பிரி வினரால் கைது செய்யப்பட்டு கந்தசாமி நாயுடுமீது இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

சென்னையில் மதீனா கடற்கரையில் தி.மு.க.தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி கலந்து கொண்ட கூட்டத்தில் குண்டு வைத்து மேடையைத் தகர்க்க முனைந்தமை.

அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டில் குண்டுவைத்தமை என்பவைதான் கந்தசாமி மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களாகும்.

திரு.கந்தசாமியின் டயறியை உளவுப்

குத்தகை கந்தசாமி நாயுடு பிரதிநிதித்துவம் செய்யும் 'பிரிட்டிஷ் சைனீஸ் கொன்கோட்டியல்' என்னும் நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் உளவு

சென்னையில் இருந்தே ஈழப் போராளி அமைப்புக்களின் தலைவர்கள் இயங்கியதால் இலங்கையின் தேசிய புலனாய்வுப் பிரிவான **NIB**யும் அங்கு கவனம் செலுத்தி வந்தது.

சென்னையிலுள்ள இலங்கையின் உதவித் தூதரகத்தில் **NIB** தனது அதிகாரி ஒருவரை வைத்திருந்தது.

1972ம் ஆண்டுமுதல் அவ்வாறு ஒரு உளவுத்துறை அதிகாரி நியமிக்கப்படுவது தொடர்ந்தது.

1985ம், 86ம் ஆண்டுகளில் அப்துல் மஜீத் **NIB** அதிகாரியாக கடமையாற்றி வந் தார். உதவித் தூதரக முதலாவது செயலாளர் என்ற பொறுப்பின் பெயரில் அவர் செயற் பட்டு வந்தார். (அப்துல் மஜீத்தான் கடந்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே. கட்சியின் வேட்பாளர் பட்டியலில் போட்டி யிட்டவர். பொலிஸ் சேவையில் இருந்து விலகியே போட்டியிட்டார்.)

சென்னையில் போராளி அமைப்புக்களது நடமாட்டங்களை கவனிக்க இலங்கை உளவுத் துறையினர் செய்த முயற்சிகளில் சுவாரசிய மான சம்பவங்களும் இருக்கின்றன.

போராளி இமைப்புக்களது உளவுப் பிரிவுகளும், அரசின் உளவுப்பிரிவினரை மோப்பம் பிடித்துத் திரிந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் மக்கள் ஆய்வுப் பிரிவு (உளவுப் பிரிவு) சென்னை விமான நிலையத்தில் தனது உறுப்பினர் களைப் போட்டு, கொழும்பில் இருந்து வருபவர்களை கவனித்து வந்தது.

சென்னையில் சன நெருக்கம் மிகுந்த பகுதிகளில் உள்ள தங்கு விடுதிகளில்தான் உளவுத்துறையினர் தங்குவார்கள். அப் பகுதிகளிலுள்ள ரவுடிகளையும் பணம் கொடுத்து கைக்குள் போட்டு வைத்துக் கொள்வார்கள். தங்களை வியாபாரிகள் என்றுதான் அவர்களுக்கு சொல்லி வைத்திருப் பார்கள்.

என்று புலனாய்வுப் பிரிவினர் நிபந்தனை போட்டார்கள்.

மவுசூக் உடன்பட்டார். விடுதலை செய் யப்பட்டு மீண்டும் சென்னைக்குத் திரும்பினார்.

பின்னர் என்ன நினைத்தாரோ தெரிய வில்லை, தனது புதிய பாத்திரம் குறித்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்மநாபாவிடம் கூறிவிட்டார்.

இலங்கை உளவுப்பிரிவுக்கு தகவல் கொடுப்பதுபோல நடித்துக்கொண்டு, உள வுப்பிரிவுத் தகவல்களை தமக்கு தருமாறு பத்நாபா யோசனை கூறினார்.

டபுள் ஏஜன்ட் மாதிரி மவுசூக் செயல்பட வேண்டும். தேசிய புலனாய்வுத் துறையின் ஆளாக இருந்து கொண்டு, ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்க ஆளாகவும் நடந்துகொள்ள வேண்டும். பின்னதற்கே விசுவாசமாக இருக்க வேண்டும் என்று பத்மநாபா கூறியிருந்தார்.

எனினும் மவுசூப் பின்னர் நடந்து கொண்ட முறைகள் சந்தேகமாக இருந்தன. இறுதியில் அவர் தமிழ்நாட்டிலிருந்து தப்பி கொழும்புக்கு ஓடிவிட்டார்.

மவுசூக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வர். அவரை அப்துல் மஜீத்தான் பயன்படுத் தினார் என்று நம்பப்பட்டது.

## ராஜீவ் சந்திப்பு

இப்போது பேச்சுவார்த்தை முயற்சிகளின் தொடர்ச்சியைக் கவனிக்கலாம்.

திம்புப் பேச்சுவார்த்தை முடிவடைந்த பின்னர் 1985ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை நான்கு இயக்கக் கூட்டமைப்பின் தலைவர்கள் சந்தித் தனர்.

பிரபாகரன், பத்மநாபா, சிறீசபாரத் தினம், பாலகுமார் ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். அதற்கு இந்தியாவின் ஆதரவு என்றும் உண்டு என்று தெரிவித்த ராஜீவ் காந்தி, தீர்வுக்கான முதல் படியாக இடைக் கால ஏற்பாடொன்றுக்கு இயக்கங்கள் சம் மதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

"அவ்வாறான இடைக்காலத் தீர்வை

யோசனைகளைக் குறித்து தனது கருத்தை ஒரு அறிக்கையாகச் சமர்ப்பித்தது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்தல், உள்ளூர் சட்டமும் ஒழுங்கும், நிலக் குடியேற்றம் தொடர்பான கருத்துக்களை கூறிய கூட்டணி மாநில சபை தொடர்பான விட்டுக் கொடுக்கமுடியாத கொள்கைகள் சிலவற்றையும் குறிப்பிட்டிருந்தது.

புளொட் அமைப்பு தனியான ஒரு நிலைப்பாட்டை எடுத்தது. புதிய யோசனைக்கு திருத்துங்கள்கூறி சுவிற்சர்லாந்து முறையிலான சமஷ்டித்திட்டத்தை சார்ந்த யோசனையை இந்தியாவிடம் சமர்ப்பித்தது.

இவ்வாறான மூன்று நிலைப்பாடு களையும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் பண்டாரி செவி மடுத்தார்.

## பகாமாஸ் மாநாடு

தமிழர் விடுதலையைக் கூட்டடணியால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைவிட ஏனைய இயக்கங்களின் நிலைப்பாடும், யோசனை களும் கடுமையாக இருந்தன.

அதேவேளையில் பொதுநலவாய நாடு களின் மாநாடு பகாமாஸில் நடைபெற விருந்தது. அம் மாநாட்டில் வைத்து ஜே.ஆர் ஜெயவாத்தனாவுடன் ராஜீவ் காந்தி இலங்கைப் பிரச்சனை பற்றி பேசுவதாக இருந்தது.

எனவே பகாமாஸ மாநாட்டுக்கு கூட்டணி யின் அறிக்கையையும், அதற்கான திருத்தத் தையும் ராஜீவ் காந்தி எடுத்துச் சொல்வார் என்று ரொமேஷ் பண்டாரி கூறினார்.


அரசின் யோசனையையோ கூட்டணியின் திருத்தத்தையோ தாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான்கு இயக்க கூட்டமைப் புத் தலைவர்கள் கூறிவிட்டார்கள்.

## புலிகளின் அறிக்கை

பகாமாஸ் மாநாடு குறித்தும் இடைக்கால தீர்வை ஏற்குமாறு இந்தியா வலியுறுத்தியது தொடர்பாகவும் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் முக்கிய மானவை.

அதனைக் கீழே தருகிறேன்.

"நாம் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு,



ராஜீவ் காந்தி

போல, தமிழீழம் அமையத்தான் போகி றது. அதனை உலகத்தில் எந்த சக்தியா லும் தடுத்து நிறுத்த முடியாது. எந்த வெளிச் சக்திகளையும் நம்பி எமது போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. எமது இலட்சியத்தை அடையும் வரை போராடிக் கொண்டே இருப்போம்" (ஆதாரம்- விடுதலைப் புலிகள். ஜனவரி. 1986)

இதுதான் தமது பத்திரிகை மூலமாக புலிகள் அமைப்பினர் தமிழ் மக்களுக்கு தெரிவித்த செய்தியாகும்.

## ராஜீவின் நிலைப்பாடு

திம்புப் பேச்சுக்கள் முறிவடைந்தமை குறித்தும், இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்தும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்த கருத்துக்களும் முக்கியமானவை.

குவைத் நாட்டிலிருந்து வெளிவரும் 'அராப் டைம்ஸ்', அல்பெசயாஷா பத் திரிகைகளுக்கு ராஜீவ்காந்தி ஒரு பேட்டி வழங்கியிருந்தார். அதில் தனது கருத்துக் களை அவர் தெரிவித்திருந்தார்.

அதன் விபரங்களை வரும் வாரம் தருகிறேன்.

(தொடர்ந்து வரும்)

# ஐ.நா.வின் கவனத்தைப் பெற்றுள்ள -இலங்கை-

## அலசுவது — இராஜதந்திரி

**"பாலும் தேனும் பிரவகிக்கக்கூடிய பிரதேசத்தில் இரத்தமும் கண்ணீரும் பெருகச் செய்ய வேண்டாம்" இவ்வாறு கூறியவர் வேறு யாருமல்ல; அண்மையில் தனது இனத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஷாக் ராபின் அவர்களே இதனைக் கூறியிருந்தார்.**

சர்வதேச அரங்கில் பல்வேறு அழிவுகள், அவலங்களைக் கண்டதே இஸ்ரேலிய- பாலஸ்தீனப் பிரச்னையாகும்.

காலஞ்சென்ற இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஷாக் ராபினே முன்னின்று இஸ்ரேலியப் படைகளை வழிநடத்தி இஸ்ரேலியப் பிரதேசங்களை விஸ்தரித்திருந்தார்.



இஸ்ரேலிய இராணுவத்தின் பிரதம ஜெனரலாக இருந்த இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஷாக் ராபின் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாலஸ்தீனர்களால் ஒரு பயங்கரவாதி என்றே யிட்ஷாக் ராபின் சில வருடங்களுக்கு முன்னர் வர்ணிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காகப் போராடிய யாசீர் அரபாத்தை இஸ்ரேலியர்களும் ஒரு பயங்கரவாதியாகவே கருதினர்.

எனவே இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனர்களும் ஒருவரையொருவர் பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்ட நிலையில் மிக மோசமான பகைமை பாராட்டி வந்தனர்.

துப்பாக்கி வேட்டுக்கள், குண்டு வெடிப்புக்கள், மற்றும் பல்வேறு சமரங்களில் விமானக் குண்டுவீச்சுக்கள் பெருமளவிலான படையெடுப்புக்கள், கெரில்லாத் தாக்குதல்கள் என்று இருதரப்பினரும் கீரியும் பாம்பும் போல மூர்க்கத்தனமாக இரத்தவெறி பிடித்த நிலையில் பகைமை கொண்டிருந்தனர்.

இயேசுபிரான் அவதரித்த பெத்லஹேம் நகரம்கூட இப்பயங்கரவாதக் கெடுபிடியினால் அல்லோல கல்லோலப்பட்டிருந்தது.

இஸ்ரேலைச் சூழவிருந்த நாடுகள் அனைத்துமே இஸ்ரேலுடன் பகைமை கொண்டிருந்தன.

இவ்வாறு பன்னெடுங்காலம் மத்திய கிழக்கில் ஒரு பாரிய பிரச்னையாகக் கொழுந்துவிட்டெரிந்த இஸ்ரேலிய- பாலஸ்தீனப் பிரச்னை இன்று அதன் உக்கிரப் போக்குத் தணிந்த நிலையில் நீடித்த ஒரு சமாதானத்தை நாடியதாக இருக்கிறது.

சண்டையிடத் தீர்மானித்தால் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டே இருக்கலாம்; இதனால் அழிவும், அவலமும் மட்டுமே மிஞ்சும். சமாதானம் என்பது வெறுமனே ஒரு கானல் நீராகவே இருக்குமென்பதனை காலம் கடந்தே இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனர்களும் உய்த்து உணர்ந்தனர்.

இதனையடுத்தே அவர்கள் தம்மிடையேயான சர்ச்சைகளை ஒரு முடிவுக்குக் கொணடுவர முன்வந்தவர்களாக சமரச முயற்சிகளில் ஈடுபட்டு கடந்த ஆண்டில் சமாதான ஒப்பந்தமொன்றையும் செய்து கொண்டனர்.

ஒருவரையொருவர் பயங்கரவாதிகளாகக் கண்ட யாசீர் அரபாத்தும், யிட்ஷாக் ராபினும் தம்மிடையேயான பகைமையைத் துறந்து ஆரத்தழுவினர்.

பாலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்குமிடையே தோன்றிய இப்புதிய உறவு, யாசீர் அரபாத்தையும், கொலையுண்ட இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஷாக் ராபினையும், நோபல் சமாதானப் பரிசைப் பெற்றுக் கொள்ளவும் வழியமைத்திருந்தது.

இருந்தபோதிலும் இரு தரப்பிலும் தீவிரவாதிகள்- கடும்போக்காளர்கள் இருக்கவே செய்தனர். இஸ்ரேலியர்கள், பாலஸ்தீனர்களது சுயாட்சி உரிமையை ஏற்றுக்கொண்ட பின்னரும், பிரச்னைகள் தொடரவே செய்தன.


தமக்குக் கூடுதல் சுயாட்சி வேண்டுமென பாலஸ்தீனர்களும், இஸ்ரேல் அது விஸ்தரித்திருந்த பிரதேசங்களிலிருந்து விலகக்கூடாதென இஸ்ரேலியக் கடும் போக்காளர்களும், எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்தனர்.

இந்த எதிர்ப்புக்கள் அண்மைக் காலங்களில் இஸ்ரேலிய பாலஸ்தீனப் பிரேதசங்களில் பல்வேறு வடிவங்களிலும் வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டிருந்தன.

ஆயினும் இஸ்ரேலியத் தலைவர்களோ அல்லது பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்தோ தாம் ஆரம்பித்த சமாதானப் பயணத்தை முறித்து விடவில்லை; தொடர்ந்து பேச்சுக்களை நடத்தினர். தம்மிடையேயான சர்ச்சைகளை விரிவாக ஆராய்ந்தனர்.

இத்தகைய சூழ்நிலையிலேயே கடந்தமாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த மறைந்த இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஷாக் ராபின், அங்கு வைத்துக் கருத்து வெளியிடுகையில் "தேனும் பாலும் பிரவாக மெடுக்கக்கூடிய பூமியில், இரத்தமும் கண்ணீரும் பெருகுவதற்கு அனுமதிக்கக் கூடாது" என்று பாலஸ்தீன, இஸ்ரேலிய கடும் போக்காளரை நோக்கிக் கூறியிருந்தார்.

**"பாலும் தேனும் பிரவகிக்கக்கூடிய பிரதேசத்தில் இரத்தமும் கண்ணீரும் பெருகச் செய்யவேண்டாம்"**



இக்கருத்தின் மூலம் பாலஸ்தீன- இஸ்ரேலிய சமாதான முயற்சிகள் எவ்வகையிலும் குழம்பிவிடக்கூடாதென்ற ஆதங்கம் யிட்ஷாக் ராபினின் உள்ளத்தில் குடி கொண்டிருந்ததை உணரமுடிந்தது.

கண்ணீரும், குருதியும் தனது நாட்டில் ஓடக் கூடாது என்று யிட்ஷாக் ராபின் விரும்பினார்.

ஆனால் அவர்மீது விழுந்த வேட்டுக்கள் அவரது குருதியை இஸ்ரேலின் தலைநகரான ரெல் அவிவ்வில் சிந்தச் செய்திருந்ததுடன், லட்சக்கணக்கான இஸ்ரேலியர்களையும் ஓவென்று வாய்விட்டழுது கண்ணீர் சொரியவும் வைத்திருந்தன.

எனவே ராபினுக்கு விழுந்த வேட்டுக்கள் மூலம் சமாதானத்தை அடைவதென்பது எத்துணை சங்கடமானது என்பது புலனாகியுள்ளது.

"தேனும் பாலும் பிரவாகமெடுக்கக்கூடிய பூமியில் இரத்தத்தையும் கண்ணீரையும் ஓடச் செய்யாதீர்கள்" என்று ராபின் உதிர்த்த வார்த்தைகள் இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்கும் மட்டுமல்ல உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும், அனைத்து நாடுகளுக்கும் ஒரு தாரக மந்திரமாகவே இருப்பதை உணரமுடிகின்றது.

இஸ்ரேலியர்கள் ஒரு காலத்தில் மூர்க்கத்தனமாக தமது எல்லைகளை விஸ்தரித்து, பாலஸ்தீனர்களை விரட்டியடிப்பதன் மூலம் தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர்.
இந்த நடவடிக்கை ஓர் இன அழிப்பாக இருந்தது. ஆயினும் பாலை நிலமாகவும், வரண்ட பூமியாகவும் இருந்த இஸ்ரேலை, இஸ்ரேலியர்கள் வளங்கொழிக்கும் சுவர்க்கபுரியாக்கினர். இஸ்ரேலில் இன்று விளையமுடியாத பயிரே இல்லை என்று கூறுமளவுக்கு அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் முழு உலகுக்குமே ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

இந்நிலையில் இன்று இனவாதக் குத்துவெட்டுக்களால் 'குருதிஆறு' ஓடிக் கொண்டிருக்கும் இலங்கையிலும் யுத்தத்தை நடத்துவோர்- கொலையுண்ட இஸ்ரேலியப் பிரதமர் உதிர்த்துச் சென்ற தாரக மந்திரத்தை கவனத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இலங்கை - இஸ்ரேலைப் போன்ற ஒரு வரண்ட பூமியல்ல; மருதம், முல்லை, நெய்தல், குறிஞ்சி என்ற வளம் பொருந்திய நிலவளங்கள் இலங்கையில் பரந்து வியாபித்துள்ளன.

ஆயினும் இத்தகைய மகோன்னத பூமியில் அன்பும் பண்பும், நீதியும் நேர்மையும் கொண்டவர்களாக வாழ்வதை விடுத்து, ஒருவரை ஒருவர் பிடித்துத் தின்னும் அசுரர்களாக இலங்கையர்கள் இருப்பது துரதிஷ்டமானதாகவே இருக்கின்றது.

இலங்கையின் இன்றைய கொந்தளிப்பு நிலை என்பது, சர்வதேச கவனத்தைப் பெற்றிருக்கின்றது.

ஐ.நா. செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி, வடக்கே நிலவும் பூதாகரமான மனிதாபிமானப் பிரச்னைகளைக் கருத்திற் கொண்டவராக வடபகுதியில் இடம் பெற்றுள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு சர்வதேச ஸ்தாபனங்கள் உதவியளிக்க முன்வர வேண்டுமென்று அழைப்பு விடுத்திருந்தார்.

ஐ.நா. ஸ்தாபனம் கடந்த அக்டோபர் மாதம் தனது 50வது ஆண்டுப் பூர்த்தியைக் கோலாகலமான முறையில் கொண்டாடியிருந்தது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்பது ஜயவர்த்தனபுரவில் இருக்கும் பாராளுமன்றமோ அல்லது காலிமுகத்திடலில் இருக்கும் ஜனாதிபதி செயலகம் போன்றேதா அல்ல.

அது ஓர் உலக அரங்கு; உலகத் தலைவர்களும் இராஜதந்திரிகளும் அங்கு இடையறாது தோன்றுகின்றனர். இலங்கையில் நடப்பவற்றை விட மோசமான நிகழ்வுகள், அனர்த்தங்களை விவாதித்து முடிவுகளை எடுக்கும் ஓர் உலகளாவிய நிறுவனமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் விளங்குகின்றது.



எனவே ஐ.நா.ஸ்தாபனம் தனது 50 வது வருடப் பூர்த்தியைக் கொண்டாடிய நிலையிலேயே அங்கு இலங்கைத் தமிழர்களின் பிரச்னையும் எதிரொலித்துள்ளது. அந்த எதிரொலி ஐ.நா.செயலாளரின் காதுகளையும் எட்டியுள்ளது.


**ஐ.நா. சபை-கோட்டையிலிருக்கும் பாராளுமன்றம் போன்றதோ அல்லது காலிமுகத்திடலில் இருக்கும் ஜனாதிபதிச் செயலகம் போன்றதோ அல்ல.**

இந்நிலையில் 'ஒரு முழுப்பூசணியை ஒரு கோப்பை சோற்றினுள் மூடி மறைக்க முடியாது' என்ற நாடோடிப் பழமொழியை இலங்கையின் ஆட்சியாளர்களும் அறிந்துகொள்ள வேண்டும்.

தமக்கு ஏற்றவிதத்திலும், தமக்கு வாய்ப்பான விதத்திலும் இலங்கையில் வேண்டுமானால் அனைத்தையும் மூடி மறைக்கலாம்.

ஆனால் வெளி உலகம் அனைத்தையும் உன்னிப்பாக கவனித்து வருகின்றதென்பதனையே போரில் குதித்துள்ள இருதரப்பும் உணர வேண்டும்.

"சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது" என்ற பிரபலமான கூற்றுக்கு அமைய தனது மனச்சாட்சிக்கு இடமளித்து நடக்கவேண்டியதே இன்று யுத்தத்தில் குதித்துள்ளோரின் தலையாய கடமையாகின்றது.




புலிகள் வெளியிட்ட காட்டூண்

## பணமும்-படைக்கலமும்

வடபுலப் போரில் தற்போது படைத்தரப்பின் கைகள் மேலோங்கியிருப்பதற்கு படைக்கல சக்தியும் ஒரு முக்கிய காரணம் என்று புலிகள் கூறிவருகின்றனர்.

'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் வெளியான கட்டுரையிலிருந்து ஒரு பகுதி இது;

"மக்களிடமிருந்து மீட்பு நிதி பெற்று 4 வருடங்கள் முடிவடைந்து விட்டன. இந்த 4 வருட காலத்தில் புலிகள் இயக்கம் பெருமளவு வளர்ந்து விட்டது. அதன் ஆட்பலம் அதிகரித்து விட்டது. பல படையணிகள் புதிதாக உருவாக்கப்பட்டு விட்டன. அதனால் அதற்கதற்கே உரித்தான ஆயுத வகைகளின் தேவையும் அதிகரித்து விட்டதால் நிதித் தேவையின் அளவும் பெருகி விட்டது.

போரின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் விடயங்களில் படைக்கல சக்தியும் ஆயுத பலமும் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆனால் இவற்றை இலவசமாக எங்கும் பெற்று விட முடியாது. பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்தே இவற்றைக் கொள்வனவு செய்யமுடியும்."

# 10

# விமானத்தோடு கொல்

எழுதுவது-ரசிகன்



**1974** ஒக்டோபர் மாதத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் மத்தியில் பிளவுகள் ஏற்பட ஆரம்பித்தன.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பீ.எல்.ஓ.) இஸ்ரேலுடன் ஒரு இணக்கத்திற்கு வந்தது.

மேற்குக் கரையிலும், காஸா பிரதேசத்திலும் பாலஸ்தீனர்களின் ஆட்சியை நிறுவுவது, பிரச்சனைக்குரிய பிரதேசங்களை இஸ்ரேலுக்கு விட்டுக்கொடுப்பது என்ற முடிவுக்கு யாசீர் அரபாத் சம்மதித்தார்.

இதனை அடுத்தே ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்ற யாசீர் அரபாத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

**"எனது ஒரு கை துப்பாக்கி ஏந்தியிருக்கிறது. மறுகை சமாதானத்தைக் குறிக்கும் ஒலிவ் இலையைப் பிடித்திருக்கிறது. ஒலிவ் இலை கீழே விழுந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்"** என்று உலகத் தலைவர்கள் முன்னால் முழக்கமிட்டார் அரபாத்.

பாலஸ்தீன -இஸ்ரேல் உடன்பாட்டை இஸ்ரேலிய ஆளும்கட்சிக்குள் பலர் எதிர்த்தனர். பாலஸ்தீன இயக்கங்களுக்குள்ளும் எதிர்ப்பு சூடு பிடித்தது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் (பி.எல்.ஓ.) ஓர் அங்கமாக இருந்த பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (பி.எஃப்.எல்.பி.) வெளியேறியது.

இஸ்ரேலுடன் சமாதானத்தை விரும்பாத பாலஸ்தீன இயக்கங்களுக்கு ஈராக் மறைமுகமாக உதவி செய்தது.

பாலஸ்தீன-இஸ்ரேலிய பேச்சு வார்த்தைகளை குழப்பியடிக்கும் திட்டம் ஒன்று தயாரானது.

ஈராக் தலைவர்களும், பி.எஃப்.எல்.பி. தளபதி வாடி ஹாட்டாடும் சந்தித்துப் பேசி திட்டம் வகுத்தார்கள்.

▫▫▫

**தி**ட்டம் பயங்கரமானது

ஐரோப்பிய நாடுகளில் இருந்து புறப்படும் இஸ்ரேலிய விமானங்களை தகர்த்தெறிய வேண்டும். வெறும் விமானங்களை அல்ல, பயணிகள் நிறைந்த விமானங்களையே தாக்க வேண்டும்.

தாக்குதல் நடவடிக்கைக்கான பொறுப்பு மௌகார் பெல்லிடம் ஒப்படைக்கப்பட்டது.

கார்லோஸுக்கு இரண்டாவது இடம் கொடுக்கப்பட்டது.

தன்னிடம் பொறுப்பு ஒப்படைக்கப் படாமையால் கார்லோஸுக்கு வருத்தம் ஏற்பட்டது.

கார்லோஸைப் பொறுத்தவரை மௌகார் பெல் திறமையானவன் அல்ல என்பதுதான் அபிப்பிராயம்.

திட்டத்தை துல்லியமாக முடிக்கும் விவேகம் மௌகார்பெல்லிடம் துளியும் கிடையாது என்று கார்லோஸ் திட்டவட்டமாக நம்பினான்.

எனினும் தளபதி வாடி ஹாட்டாட்டின் கட்டளையை மீற முடியவில்லை. தவிர, தானே வலியச்சென்று, 'என்னிடம் பொறுப்பைத் தாருங்கள்' என்று கேட்பதற்கும் கார்லோஸின் கௌரவம் இடம் கொடுக்கவில்லை.



"ஃபிரான்ஸில் இருந்து புறப்படும் இஸ்ரேலிய 'எல்-அல்' விமானத்தை பயணிகளோடு சேர்த்துத் தகர்த்துவிட வேண்டும்.

"ஃபிரான்ஸின் ஓர்லி விமான நிலையத்தில் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்" என்று வாடி ஹாட்டாட் உத்தரவிட்டார்.

கார்லோஸின் முகத்தில் வழக்கமான உற்சாகம் தெரியவில்லை. தளபதி வாடி ஹாட்டாட் கார்லோஸை கூர்ந்து நோக்கினார்.

தனியாக அழைத்து, தோளில் தட்டி, "உன் திறமையில் எனக்கு அமோக நம்பிக்கை இருக்கிறது. தனியாளாய் நின்று சாதிப்பது அசாத்தியத் திறமை. தெரியும். எனக்குத் தெரியும். உன் திறமைக்கு நிறைய தீனி வைத்திருக்கிறேன். இப்போது மௌகார் பெல்லுடன் சேர்ந்து வேலைசெய்."

தாக்குதல் திட்டத்தோடு மௌகார் பெல்லும், கார்லோஸும் ஃபிரான்ஸுக்குப் பறந்தார்கள்.

▫▫▫

**டி**சம்பர் மாதம் தாக்குதல் நடத்த முடியவில்லை. ஓர்லி விமான நிலையத்தில் வேலை நிறுத்தம் ஒன்று நடைபெற்றதால் திட்டம் தள்ளிப்போனது.

கார்லோஸ் ஃபிரான்ஸ் அழகிகளோடு காலத்தைக் கடத்தினான்.

அழகிகளின் இல்லங்களே கார்லோஸின் பாதுகாப்பான தங்குமிடங்களாக மாறியிருந்தன.

ரூ ரௌலியர் வீதியில் இருந்த இல்லத்தில் மாணவிகளைத் தேடிவரும் காதலர்களான ஃபிரான்ஸ் உளவுத்துறையைச் சேர்ந்தவர்கள் பலரை கார்லோஸ் அறிமுகமாக்கிக் கொண்டார்.

மரியா லாரா, நான்சி சாஞ்செஸ் என்னும் இரு மாணவிகளும் கார்லோஸின் காதலிகளாக இருந்து, கார்லோஸுக்கு உல்லாசம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

கார்லோஸை அதிகமாக கவர்ந்து கொள்வதில் காதலிகள் இருவருக்குமிடையில் போட்டி நிலவியது.

ஒரு வாரத்தில் அதிக நாட்கள் கார்லோஸ் தங்களில் யாருடன் தங்குகிறான் என்று போட்டி நடந்து கொண்டிருந்தது. போட்டியால் கார்லோஸுக்கு லாபம். இருவரும் ஒருவரை யொருவர் மிஞ்சும் வகையில் கார்லோஸை சுகப்படுத்திக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையே மாஸ்மெலா வீட்டிலும் கார்லோஸ் தங்கிக் கொள்வான்.

⁂

**1975** ஜனவரி மாதம்

தாக்குதல் திட்டம் உயிர் பெற்றது.

ஓர்லி விமான நிலைய ஓடு பாதையில் தவழ்ந்து 'எல்.அல்' விமானம் மேலெழும் முன்னர் தாக்குதல் நடக்க வேண்டும்.

R.P.G.7 ஐ இயக்குவதில் தேர்ச்சிபெற்ற லெபனான்காரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். விமான நிலைய பாதுகாவலர்கள் குறுக்கிட்டால் சுட்டுத் தள்ளுவதற்கு மற்றொரு லெபனான்காரர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஏ.கே.47 துப்பாக்கியை பயன்படுத்த வேண்டும்.

பாகம் பாகமாக ஃபிரான்சுக்குள் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட R.P.G.7 ஒன்றாக இணைக்கப்பட்டது.

பேஜோ 504 காரில் லெபனான்காரர் இருவரும் புறப்பட்டனர்.

அவர்கள் சென்ற காரை பின்தொடர்ந்து சிம்கா 110 ரக கார் சென்றது. அதில் கார்லோஸ் இருந்தான். நடவடிக்கையைக் கண்காணிக்கும் பொறுப்பு கார்லோஸுக்கு.

விமான நிலையத்தில் எல்.அல். விமானம் 136 பயணிகளையும், 7 ஊழியர்களையும் தனது வயிற்றுக்குள் நிரப்பிக் கொண்டு ஓடு பாதையில் முன்னேறத் தொடங்கியது.

அதே சமயம் விமான நிலைய தடுப்புக்கு அப்பால் நின்று நோட்டமிட்ட பேஜோக் கார் சீறிக் கிளம்பி, விமான நிலைய தடுப்பு வேலியை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தது.

விமான நிலைய ஓடு பாதையின் அருகே காரை நிறுத்திவிட்டு இருவரும் குதித்தனர். ஏற்கனவே திட்டமிட்டதுபோல விமான நிலையத்திற்குள் இருந்த ஒரு கட்டிடம்மீது தாவி ஏறினார்கள்.

R.P.G.7 ஐ தோளில் இருத்தி விமானத்தை நோக்கி குறிவைத்து விசையை அமுக்க, ரொக்கட் பறந்து விமானத்தை நெருங்கி.....

ஆனால்... விமானத்திலிருந்து ஒரே ஒரு அடி தூரம் உயர விலகிப் பறந்து, சற்றுத் தூரத்தில் நின்ற யூகோஸ்லாவிய DC7 விமானத்தை முத்தமிட்டது.

யூகோஸ்லாவிய விமானம் வெடித்துச் சிதறியது. அதற்குள் எவருமே இருக்கவில்லை.

அதற்கிடையே எல்.அல். விமானம் தப்பிக்கொண்டு மேல் எழத் தொடங்கியது.

முதல் குறி தவறியபோதும் இரண்டாவது தடவையாக ரொக்கட் லோஞ்சரால் எல்.அல் மீது குறிவைக்கப்பட்டது.

இரண்டாவது தடவையாக பறந்து வந்த ரொக்கட் விமானத்தை தொடாமல் விலகி, மறுபுறம் இருந்த கட்டிடம் மீது விழுந்தது.

எல்.அல் விமானத்தின் விமானி புத்திசாலித்தனமாக செயற்பட்டு, விமானத்தைக் கிளப்பிக் கொண்டு பறந்து விட்டார்.

தாக்குதல் தோல்வியில் முடிவதை வெளியே காரில் இருந்து கவனித்துக் கொண்டிருந்தார் கார்லோஸ்.

திடீர் தாக்குதலால் அதிர்ச்சியடைந்த விமான நிலையம் உஷாராவதற்கு இடையில் பேஜோ காரில் இருவரும் தப்பி வெளியேறினார்கள்.

அவர்களைத் தொடர்ந்து கார்லோஸின் காரும் பறந்தது.

பேஜோவை திடீரென்று நிறுத்தி விட்டு, பின்னால் வந்த கார்லோஸின் காரில் இருவரும் ஏறிக்கொண்டனர்.

தாக்குதல் தோல்விதான். ஆனால் தாக்குதல் குழு தப்பிவிட்டது.

பேஜோ காரும், அதற்குள் இருந்த R.P.G.7 ரொக்கட் லோஞ்சரும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன:

⁂

**மீ**ண்டும் அதே இடத்தில் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று மௌகார் பெல் கட்டளையிட்டான்.

"எப்போது?" இது கார்லோஸ்.

"இன்னும் ஒரு வாரத்தில்!" இது மௌகார்பெல்.

கார்லோஸுக்கு கோபம் வந்து விட்டது.

(தொடர்ந்து வரும்)

---

# ஹலோ டாக்டர்

"வணக்கம் டாக்டர்!"

"வணக்கம். கையில் பிளாஸ்ரர் போட்டிருக்கிறீர்களே என்ன நடந்தது?"

"சமைக்கும் போது மனைவிக்கு ஒத்தாசையாக உதவினேன் பாருங்கள், கத்தி கையை நறுக்கிவிட்டது."

"நல்ல கணவராக நடந்துகொள்ள நினைத்தது கத்திக்குப் பிடிக்கவில்லையாக்கும். மருந்து கட்டாமல் பிளாஸ்ரர் போட்டிருக்கிறீர்களே!"

"ஏன் டாக்டர், பிளாஸ்ரர் காயத்தை மாற்றாதா?

"இல்லை. காயம் ஆறும் வரை பிளாஸ்ரர் ஒரு தற்காப்புக் கவசமாக உதவுகிறது. வெளியே இருந்து கிருமிகள், தூசி முதலியவை காயத்தில் புகாதவாறு பிளாஸ்ரர் பாதுகாப்பளிக்கிறது. பிளாஸ்ரர் பாவிப்பதால் ஒரு கெடுதியும் இருக்கிறது."

"என்ன கெடுதி டாக்டர்?"

"காயம்பட்ட இடத்தில் தோல் இளகி, ஈரப்பசையைத் தக்கவைத்து, வேறு புதிய நோய்கள் தொற்றிக்கொள்ளவும் வாயிலாக அமைந்துவிடுகிறது. வெட்டுக் காயத்தை ஆற்றிவிடும் என்று கடைகளில் விற்கப்படும் பிளாஸ்ரரில் உள்ள மருந்து உண்மையில் காயத்தை மாற்றுவதற்கு பெரிதாக உதவாது. காயம் ஆறுவதை தாமதப்படுத்தியும் விடுகின்றது!"

"காயம்பட்டால் மருந்து கட்டு. பிளாஸ்ரரைப் போட்டுவிட்டு அலட்சியமாக இருக்காதே என்கிறீர்கள்"

"அது மட்டுமல்ல, உடலில் ஏற்படும் சிறு காயங்களை உடலின் இயற்கையான குணப்படுத்தும் திறன் ஆற்றிவிடுகிறது."

"புரியும்படியாகச் சொல்லுங்கள்"

"வெட்டுக்காயம் ஏற்படும்போது உடனே இரத்தம் வெளியாகிறது. அந்த இரத்தம் அந்த இடத்திலுள்ள கிருமிகளையும், தூசிகளையும் கழுவித் தள்ளிவிடுகிறது. வெளியே வந்த இரத்தம் சிறிது நேரத்தில் அந்த இடத்திலேயே உறைந்து விடுவதால், கிருமிகள் உள்ளே போகாமல் தடுத்துக் கொண்டிருக்கும். இரத்தத்தில் உள்ள துப்பரவாக்கியான வெள்ளை இரத்த அணுக்கள் விரைந்து சென்று காயத்தின் உட்பகுதியில் உள்ள குப்பைகளை விழுங்கி கரைத்துவிடுகிறது."

"எனவே சிறு சிராய்ப்புக்காயங்கள் தாமாகவே குணமாகிவிடுகின்றன. சரிதானே டாக்டர். இனி, அடுத்த கேள்வி. அடிக்கடி எக்ஸ்ரே எடுப்பதால் எலும்புகளுக்கு பாதிப்பு ஏற்படுமா டாக்டர்?



"எலும்புகளுக்கு பாதிப்பு ஏற்படவாய்ப்பில்லை. இரத்தம்தான் பாதிக்கப்படும். இரத்தப் புற்றுநோய்கூட ஏற்படலாம்."

"எய்ட்ஸ், கசரோகம், புற்றுநோய், ஆஸ்துமா போன்ற வியாதிகள் உள்ளவர்களுக்கு அருகில் நின்று வேலை செய்தால், அவர்கள் விடும் மூச்சுக்காற்றில் நோய்கள் பரவும் வாய்ப்புண்டா டாக்டர்?"

"எய்ட்ஸ், புற்றுநோய், ஆஸ்துமா இவை மூன்றும் மூச்சுக்காற்றில் பரவுவதில்லை. கசரோகம் ஒன்றுதான் மூச்சுக்காற்று மூலம் பிறருக்குப் பரவக்கூடியது. என்றாலும் இதனைக் தவிர்க்க வழி இருக்கிறது. கச நோயாளிகளுக்கு மிக அருகில் நின்று வேலை செய்யக்கூடாது. நோயாளி இருமும்போது தன்னுடைய முகத்தை கைக்குட்டையால் அவர் மறைத்துக் கொள்ளவேண்டும். இருமும் போது வெளியேறும் சளியை தனிப்பாத்திரம் ஒன்றில் சேகரித்து,தீயிட்டு எரித்து மண்ணில் புதைத்துவிட வேண்டும். இன்றுள்ள நவீன மருந்துகளால் காசநோயை 100 சதவீதம் குணமாக்கிவிடலாம்."

"ஓ.கே.டாக்டர் ஓ.கே. எல்லா நோய்களுக்கும் சந்தேகம் கேட்க, சிகிச்சை செய்ய டாக்டரிடம் வருபவர்கள், செக்ஸ் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு மட்டும் சந்தேகம் கேட்க வெட்கப்படுவது ஏன்?"

## யாருக்கும் வெட்கமில்லை?

"நம் நாட்டிலும் அதில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. மேலை நாடுகளில் 'செக்ஸ்' குறைபாடுகளுக்கு உடனே சம்பந்தப்பட்ட டாக்டரை அணுகி குறைகளைச் சொல்லி விளக்கம் கேட்கிறார்கள்."

"அப்படியா?! யாருக்குமே அங்கு வெட்கமில்லைப்போல் இருக்கிறது."

"இதில் என்ன வெட்கம் இருக்கிறது. சரியாக சாப்பிடமுடியவில்லை என்றால் டாக்டரிடம் போவதில்லையா. கை,கால் சரியாக இயங்கவில்லை என்றால் போவதில்லையா. பெண்டாக்டர்களிடம் செல்லும் பெண்கள் தங்கள் கணவருக்கு இதுதான் குறைபாடு. அதற்கு என்ன செய்யலாம் என்று கேட்கிறார்கள். விளக்கம் கிடைக்கிறது. பயனும் விளைகிறது. அதுபோல் ஆண்களும் ஆண்டாக்டரிடம் சென்று தமது குறைப்பாட்டைச் சொல்லி விளக்கம் பெற்றுக்கொள்கிறார்கள். அதைவிடுத்து லேகியம், தங்கபஸ்பம், போதைமருந்து என்று அலைந்து உடலை கெடுத்துக் கொள்வதில்லை. மனதுக்குள் பூட்டிவைத்து புழுங்குவதுமில்லை."

"நல்ல கருத்து. இன்று இதுபோதும். வருகிறேன் டாக்டர்."

---

# ரஜனிகாந்த் பயோடேட்டா

| | |
|---|---|
| இயற்பெயர்- | சிவாஜிராவ் கெய்க் வரட் |
| பிறந்ததேதி- | 12.12.1950 |
| பிறந்த இடம்- | பெங்களூர் (கர்நாடக மாநிலம்) |
| ராசி- | சிரவண நட்சத்திரம் மகர ராசி. |
| தற்போதைய வசிப்பிடம்- | 6.ஜோர்ஜ் அவெனியூ கஸ்தூரி எஸ்டேட், 2வது தெரு, போயஸ்கார்டன், சென்னை 06. |
| உடனிருப்போர்- | மனைவி லதா மகள்கள் ஐஸ்வர்யா, சவுந்தர்யா. |
| உயரம்- | 5 அடி 9அங்குலம் |
| எடை- | 70 கிலோ |
| கண்களின் நிறம்- | கருப்பு |
| முடியின் நிறம்- | கருப்பும்-மஞ்சளும் கலந்தது. |
| பிடித்த குணம்- | புறம்பேசாதிருத்தல். |
| பிடித்த உடை- | கருப்பு-பழுப்பு நிற ஆடை, மற்றும் வெள்ளை நிற ஆடைகள். |
| பிடித்த பானம்- | பழரசங்கள்-மோர். |
| பிடித்த உணவு- | சூடான, காரமான சிக்கன்-மட்டன் வகைகள். |
| மகிழ்ச்சியான அனுபவம்- | தனிமையில் இருப்பது. |
| விரும்புவது- | பிறருக்கு உதவுதல் |
| சோகமான அனுபவம்- | பஸ்நடத்துநர் வேலையை விட்டது. |




| | |
|---|---|
| மிகப்பெரிய வருத்தம்- | தாயன்பை பூரணமாக உணரமுடியாமல் போனது. |
| லட்சியம்- | தொடர்ந்து சாதனைகள் படைத்துக்கொண்டு இருப்பது. |

---

# நரசிம்மராவின் நாவல்

சுயசரிதை எழுதிய இந்தியாவின் பிரபல புள்ளிகள் பலத்த சர்ச்சைகளில் சிக்கியதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்திய முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன், இந்திய தேர்தல் ஆணையாளர் சேஷன் ஆகியோர் சர்ச்சைகளில் மாட்டிக்கொண்டு திணறினார்கள்.



தற்போது ஒரு வி.ஐ.பி. நாவல் எழுதிக்கொண்டிருக்கிறார். அவர் வேறு யாருமல்ல, இந்தியப் பிரதமர் நரசிம்மராவ்தான்.

புன்னகை சிந்தாதவர்,வயதானவர், பழமைவாதி, எனவே நாவலும் சலிப்பாக இருக்குமோ என்று நினைத்துவிடாதீர்கள். மனிதர் புகுந்து விளையாடி இருக்கிறார். உதாரணத்திற்கு நாவலில் ஒரு கட்டம்:

"அவனும், அவளும், இடையில் மௌனம். சூழவும் இருள். ஒருவரை ஒருவர் நெருங்கினார்கள். அவள் மடி விரித்தாள். அவன் சாய்ந்தான். அவள் அவனது தலைமுடியைக் கோதிவிட்டாள். நெற்றியில் முத்தமிட்டாள். பின்னர் இருவரும் இடம்மாறிக்கொண்டார்கள். அவளது உயர்ந்து தாழும் மார்புகளின் அசைவுகளை அவன் உணர்ந்தான். அவள் அவன் மார்பில் முகம் புதைத்தாள். அவர்களது தேகங்கள் பரஸ்பரம் அறிமுகம் செய்துகொண்டன. ஒவ்வொரு அணுவும் கூடிக்கலந்து அனுபவித்து உணரக்கூடிய செயல் அது."

இவ்வாறு விபரித்துக் கொண்டு போகிறார் மனிதர்.

தனது நாவலுக்கு மறுபாதி என்று பெயர் வைத்துள்ளார் நரசிம்மராவ்.

அரசியல் பற்றியும், அரசியலில் பெண்களும் பயன்படுத்தப்படுவது பற்றியும் சுவாரசியமாக தனது நாவலில் சொல்லியிருக்கிறாராம் நரசிம்மராவ். இந்திராகாந்தி, நேரு, ராஜீவ் தொடர்பான அபிப்பிராயங்களையும் வெளிப்படையாக சொல்லியிருக்கிறாராம். விரைவில் வெளியிடும் வகையில் நாவல் தயாராகிவிட்டது.

# அய்யோ அய்யோ அய்யய்யோ!

**தகவல் பெட்டி**

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் இந்தப் பெரிய அம்மணி. பெயர் வண்டா பெரின். வயது 31. எடை தான் கொஞ்சம் அதிகம் 507 இறாத்தல் மட்டும். தான் ஒன்றும் பாரமில்லை பூமாதிரித்தான் என்று காட்ட நினைத்து குட்டிச் சைக்கிளில் ஊரை வலம் வந்தாராம். வீடு திரும்பும்போது சைக்கிளின் கதி? கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைதானாம். தற்போது அவுஸ்திரேலிய சைக்கிள் தயாரிப்பு நிறுவனம் ஒன்று அம்மணிக்காக பிரத்தியேக சைக்கிள் ஒன்றை தயாரித்து வருகிறதாம்.



# சாரதிகள் கவனிக்க



சவூதியில் உள்ள ஜெட்டா நகரில் கிளிக் செய்யப்பட்டது இக் காட்சி. வீதியின் அலங்கார வளைவுகளில் கார்கள் பாய்ந்து ஓடும் சாகசக் காட்சி என்று நினைத்துவிடாதீர்கள். எல்லாமே கார் பொம்மைகள். உல்லாசப் பயணிகளுக்கு குஷி கொடுக்கும் காட்சி. நவீன கார்களில் செல்வோரும் முன்பு நவீன வசதியற்ற கார்களில் நிதானமாகப் பயணம் செய்ததை நினைவூட்டவும் இவை உதவுமாம். ஏனென்றால் சிலருக்கு நவீன கார்களை ஓட்டும்போது தலை கால் புரியவில்லையல்லவா! ஜெட்டாவில் உள்ள அமிர் ஃபாஹெட் தெரு, வலி அல் அஃட் தெருச் சந்திப்பில் இக் காட்சி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

# மனிதன் பாதி—மிருகம் மீதி

வித்தியாசமான கோணங்களில் புதுசு புதுசாக எதையாவது செய்யாவிட்டால் சிலருக்கு இருப்பே கொள்ளாது. அவர்கள்தான் சாதனையாளர்கள். புகைப்படப் பிடிப்பாளர் கிறிஸ்தோபர் றொகேர்ஸ் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். பன்றிப் பண்ணையொன்றில் இப்படி ஒரு வித்தியாசமான காட்சியை 'சூட்' பண்ணி விட்டார். பன்றிப் பண்ணை தொழிலாளி ஒருவர் கடமையைச் செய்கிறார். பன்றியார் புதினம் பார்க்கிறார் சட்டென்று பார்த்தால் மனிதன் பாதி, பன்றி பாதிபோல வியப்பான காட்சியாக தெரிகிறதல்லவா. பன்றித் தொழுவங்களில் பன்றியோடு பன்றியாக வாழும் தொழிலாளர்களின் அவல நிலையையும் இக்காட்சி சித்தரிப்பதாக கிறிஸ்தோபர் கூறுகிறார்.



மேல் நாடுகளில் மனிதர்களுக்கு மட்டுமல்ல நாய் மற்றும் செல்லப்பிராணிகளுக்கும் மது மற்றும் உணவு விடுதிகள் இருப்பது தெரிந்த செய்திதான்.

படத்தில் போதையில் சுருண்டுகிடக்கும் மிஸ்டர் நாயாரின் எஜமானி பெரும் கோடீஸ்வரி. மதுபான விடுதியொன்றில் குடிக்கும் போட்டியில் தனது செல்ல நாயாரை களத்தில் இறக்கினார் கோடீஸ்வரி. நாயாருக்கு நான்கு வயதுதான். ஆனால் தனது சக நாய் நண்பர்கள், நண்பிகள் முன்னிலையில் வீரம் காட்ட மூக்கு முட்ட குடித்துத் தள்ளிவிட்டார். தலைகால் புரியாமல் தரையில் உருளும் போது 'விடுதி' உரிமையாளர் தமாசாகப் போட்டோ எடுத்துவிட்டார். புகைப்படத்தில் பார்த்தவர்கள் பாராட்டியதால் போஸ்டராக அடித்து விற்பனை செய்து காசு பண்ணிவிட்டார். போஸ்டருக்கு நல்ல கிராக்கி. நாயாரின் பெயர் டியூக். சம்பவம் நடந்தது ஃபிரான்ஸ் நாட்டில்.

# உதட்டில் மட்டும் மறுப்பு

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அணுகுண்டு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு போதனைகள் எல்லாம் ஊருக்குத்தான் உபதேசம்! சமீபத்தில் லிபோர்ஜட்டில் நடைபெற்ற அகில உலக விமானக் கண்காட்சியில் அதிகமாக இடம்பெற்றிருந்தது அதிநவீன போர் விமானங்களும், ஏவுகணைகளும்தான்! இங்கே ஒரு ஐரோப்பியர் இயக்கிக் காட்டுவது அதி நவீன லேசர் ஏவுகணையாகும்! இப்போது சொல்லுங்கள் உலகின் பல பாகங்களில் நடக்கும் ஆயுதப் போருக்கு யார் காரணம் என்பதை?



# குடிக்காதே தம்பி குடிக்காதே



# மினி சினி

*'மிஸ்டர் மெட்ராஸ்' 'மிஸ்டர் ரோமியோ' படங்களைத் தொடர்ந்து புதிய படமொன்றிற்கு 'மிஸ்டர் தேவராஜ்'என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தில் கதாநாயகனாக ஜெயராம் நடிக்கிறார்.

*தீபாவளிக்கு வெளியான 'குருதிப்புனல்' படத்தில் கமலுக்கு ஜோடியாக நடித்திருந்த கௌதமி, இதைத் தொடர்ந்து சரவணன் தயாரித்து நடித்து வரும் 'விஸ்வநாத்' படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

*டி.சிவா தயாரிப்பில் சரத்குமார் நடிக்கும் 'அரவிந்தன்' படத்தில் 'காந்தி' படத்தில் கஸ்தூரிபாயாக நடித்த ரோஹிணி ஹட்டங்காடி அம்மா வேடத்தில் நடிக்கிறார்.

*அம்பாலயா தேவிபாலச்சந்திரன் தயாரித்து இயக்கவிஜயகுமாரின் மகன் அருண்குமார் நடிக்கும் படம் 'லவ்ஸ்டோரி'. இந்தப் படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் 'இது நம்ம பசங்க'.

*ராதா-சங்கீதா நடிக்கும் 'செந்தூரம்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகும் சங்கமன், 'கோடி பறந்தது' உட்பட பல படங்களில் பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியுள்ளார்.

*'தேவா'படத்தின் மூலம் அறிமுகமாகிய சுவாதி நடித்து அடுத்து வெளிவரவிருக்கும் படம் 'வசந்த வாசல்'. இதைத் தொடர்ந்து சுவாதி தமிழில் 'வான்மதி' என்ற படத்திலும், ஜெயராமுக்கு ஜோடியாக மலையாளப்படமொன்றிலும் நடித்து வருகிறார்.

*கே. பாலசந்தரின் 'ஒரு வீடு இருவாசல்' என்ற படத்தின் மூலம் அறிமுகமானவர் யாமினி. இவர் அண்மையில் தனது பெயரை கண்மணி என்று மாற்றி வைத்திருந்தார். தற்போது கண்மணி என்ற பெயரையும் ரீத்து ஷில்பா என்று மாற்றிவிட்டார்.

*'கருத்தம்மா'ராஜஸ்ரீ மலையாளத்தில் நடித்த 'த்ரீ மேன் ஆமி' பெரிய வெற்றியைப் பெறவே தற்போது ராஜஸ்ரீயின் கையில் மூன்று புதிய மலையாளப் படங்கள்.

*தமிழில் வெற்றி பெற்ற'நாட்டாமை'தெலுங்கில் 'பெத்தராயுடு' என்ற பெயரில் தயாராகி அங்கும் வெற்றி பெற்றது. இப்போது 'நாட்டாமை' கன்னடத்தில் தயாராகவுள்ளது.

*பிரபுதேவா நடிக்கும் இந்திப் படத்தை இயக்குபவர் பிரபல இந்தி இயக்குநரான ராஜ்குமார் சந்தோஷி. இவர் இந்தியில் மீனாட்சி சேஷாத்திரி நடித்த 'டாமினி'(தமிழில் 'பிரியங்கா') படத்தை இயக்கியவர்.

## பூர்த்தியாகும் பூஞ்சோலை

கங்கை அமரன் இயக்கத்தில் அவரது மகன் வெங்கட்பிரபு நடித்துவரும் பூஞ்சோலை படம் முடிவடையும் நிலையில் உள்ளது. இசை இளையராஜா. 'பூஞ்சோலை' வெற்றியடைந்தால் வெங்கட் பிரபுவை வைத்து மற்றொரு படத்தையும் சூட்டோடு சூடாக தயாரித்து முடிக்கும் திட்டத்தோடு இருக்கிறார் கங்கை அமரன்.

## 'நடிப்பதும் கஷ்டம்தான்'

நடிப்பதும் கஷ்டமான காரியம் தான் என்று சொல்லி தனது பாணியில் விளக்கம் தருகிறார் சத்தியராஜ். விளக்கத்தைக் கேளுங்கள்.

"இரவு பனிரெண்டுமணிக்கு காதலியாக நடிப்பவரை சிரித்த முகத்துடன் கட்டிப்பிடித்து நடிக்கும் படி இயக்குநர் கூறுவார். சிரிப்பு வராவிட்டாலும் வரவழைத்துக் கொண்டு நடித்துக் காட்டவேண்டும். இயக்குநராவது அதைவிடக் கஷ்டம். இடுப்பளவு தண்ணீருக்குள் படப்பிடிப்பு நடத்துகொண்டிருக்கும்போது கதாநாயகன் பேசுகிற வசனம் சரியில்லா விட்டால் அதைவிடப் பிரமாதமாக வசனம் சொல்லித்தரவேண்டும்.

நான் இயக்குநரானதில் தெரிந்து கொண்ட பாடம், என் போன்ற பிஸியான நடிகர்களுக்கு இயக்குநர் ஆசை வரவே கூடாது" என்று கூறியுள்ளார் சத்தியராஜ். அனுபவம் பேசுகிறது.

## மம்தாவுக்கு எதிர்ப்பு

மம்தா குல்கர்னி கவர்ச்சியின் எல்லையை ஒரேயடியாகத் தாண்டி ஆபாசமாக நடிக்கிறார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. 'சப்சே படா கில்லாடி' என்னும் படத்தில் அக்ஷய் குமார்மீது மம்தா புரளும் காட்சி வரும் போது திரையரங்கில் பெண்கள் கண்களை மூடிக்கொண்டார்களாம். அதனைக் கேள்விப்பட்ட மம்தா சூடாகி விட்டார். சில பெண்களுக்கு தாழ்வு மனப் பான்மை. அதுதான் என்மீது பாய்கிறார்கள். குற்றம் சொல்லிக் கொண்டே நான் நடிக்கும் காதல் காட்சிகளை ஓரக் கண்ணால் ரசிக்கிறார்கள் என்று பதிலடி கொடுத்திருக்கிறார்.

## நெப்போலியன் டென்ஷன்

நெப்போலியன்-வினிதா நடித்துள்ள 'மாமனிதன்'படம் கடந்த வாரம் திரைக்கு வந்து விட்டது. தனது மார்க்கெட்டை தீர்மானிக்கப்போகும் படமென்பதால் வசூல் நிலவரத்தை டென்ஷனோடு கவனித்துக் கொண்டிருக்கிறார் நெப்ஸ்.

## வளர்ப்பு மகன்

தமிழக முதல்வர் ஜெயலலிதா சுதாகரனை வளர்ப்பு மகனாகத் தத்தெடுத்தார். அதோடு வளர்ப்பு மகன்'என்ற வார்த்தையும் பிரபலமாகிவிட்டது.

இயக்குநர் ஆர்.கே. செல்வமணி தனது புதிய படம் ஒன்றுக்கு 'வளர்ப்பு மகன்' என்று பெயர் சூட்டியுள்ளார். உண்மைச் சம்பவங்களை வைத்து படமெடுக்கும் செல்வமணி 'வளர்ப்பு மகன்' படத்தில் யாரை வம்புக்கு இழுக்கப் போகிறாரோ?

## ரம்பாவால் முடியுமா?


ரம்பாவுக்கு தமிழ் பட வாய்ப்புக்கள் தேடிவருவதால் தெலுங்குப் படவுலகுக்கு டாட்டா காட்டலாமா என்று யோசித்து வருகிறார். பாலகிருஷ்ணாவின் ஜோடிகளில் ஒருவராக வீராதி வீரன் படத்தில் படு கவர்ச்சியாக நடித்துள்ளார் ரம்பா. செங்கோட்டை படத்தில் அர்ஜுன் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார். நக்மா, ரோஜா, மீனா ஆகியோர் தமிழ் படவுலகில் இருப்பதால் தன்னால் இங்கு நிலைக்க முடியுமா என்றும் யோசிக்கிறாராம் ரம்பா.

## ரவீனாவுக்குப் பரிசு

'சாது' படத்தில் அர்ஜுன் ஜோடியாக நடித்தவர் ரவீனா ராண்டன். அதன் பின்னர் தமிழ்படவுலகப் பக்கம் தலையே காட்டவில்லை. இந்திப் படவுலகில் கிசு-கிசுவுக்கு குறைவில்லாத நடிகைகளில் ஒருவர் ரவீனா. அக்ஷய் குமாரை திருமணம் செய்து கொண்டார் என்று ஒரு செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. தற்போது மற்றொரு செய்தி, ரவீனாவுக்கு ஆடம்பரமான கார் ஒன்றை வாங்கிக் கொடுத்திருக்கிறார் ஒரு பிரபல தொழிலதிபர். படப்பிடிப்பு முடிந்தவுடன் தொழிலதிபரின் பங்களாவில்தான் தங்குகிறாராம் ரவீனா.

## மக்கள் ஆட்சியில் கோபம்

[illegible]



கோவிந்தா-கரிஷ்மா கபூர்



பாலகிருஷ்ணா-ரம்பா படம்-வீராதி வீரன்



ரவீனா ராண்டன்

## கரிஷ்மாவின் காதல்

கரிஷ்மா கபூருக்கும்-கோவிந்தாவுக்கும் நல்ல நெருக்கம். இணைபிரியாக் காதலர்கள் என்பது பரவலான வம்பு. கல்யாணமானவர், மனைவியின் பெயர் சுனிதா. ஒரு பெண் உண்டு. கல்யாணமானவர் என்றால் இதெல்லாம் நடிகைகளோடு கிசுகிசுக்கப்படுவது கோவிந்தா. அதனால் ஒரு செய்தி. சமீபகாலமாக கரிஷ்மாகபூரை சந்திப்பது என்பது ஒரு செய்தி. கோவிந்தா. அதனால் வெறுத்துப்போன அண்ணன் வருகிறார் கோவிந்தா. கோபப்படுகிறார். இந்த மற்றொரு கண்டாலே போல மாறிவிடுகிறார்கள். மாறுவது போல கரிஷ்மா பற்றி இதற்கிடையே சல்மான்கானையும், பரவியிருக்கிறது. கன்னாவையும் துரத்திக் கொண்டிருக்கிறாராம் கரிஷ்மா கபூர்.

## ஆசை நாயகியின் ஆசை

தற்போது தமிழ் இளைய தலைமுறையை கவர்ந்திருப்பது ஆசை படம்தான். திருப்பது விடியோ... பிரபலமாகி விட்டது. ... புக்களும் கிடைத்திருக்கின்றன. கவர்ச்சியாக நடிக்க வாய்ப்புக்கள் வந்த வாய்ப்புக்கள் சில ... விட்டதால் ... திரும்பிவிட்டன. ... நடிகையாக பெயரெடுக்கவே ஆசை என்கிறார் சுவலட்சுமி. சத்யஜித்ரேயின் படமொன்றில் நடித்தவர் அல்லவா. அதுதான் வித்தியாசமாக நிலைக்குமா? இருக்கிறார். உறுதி நிலைக்குமா?

## மாமன் மகள் ரெடி

சத்யராஜ்-மீனா நடித்துள்ள 'மாமன் மகள்' படப்பிடிப்புக்கள் யாவும் முடிவடைந்து விட்டன. விரைவில் திரைக்கு வருகிறது. நகைச் சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து கலகலப்பான படமாக உருவாக்கியிருக்கிறார்கள்.

## வளரும் செல்வன்

விஜயகாந்த்-ரோஜா நடிக்க பாரதிராஜா இயக்கும் தமிழ்ச் செல்வன் ஆரம்பித்து படப்பிடிப்புக்கள் ... பெயர் மாற்றப்படலாம் என்று தகவல். பின்னர் பெயரைப் பார்த்துக் கொள்ளலாம் என்று படப்பிடிப்பைத் தொடங்கிவிட்டார் பாரதிராஜா.


## கவர்ச்சி தேவைதான் நக்மா வாக்குமூலம்

கவர்ச்சியாக நடிப்பதில் கொடிகட்டிப் பறந்துகொண்டிருப்பவர் நக்மா. கவர்ச்சி பற்றி நக்மா சொல்வதைக் கேளுங்கள். "தெலுங்குப் படங்களில் பாடல் காட்சிகளில் விதம் விதமான உடைகளில் கொஞ்சம் செக்ஸியான அசைவுகளைக் காட்டுவதால் கவர்ச்சியாக நடிப்பதாக நினைத்துவிடுகிறார்கள். ஆனாலும் இது தவிர்க்க முடியாத ஒன்று. பாடல் காட்சிகளுக்காக இப்படி நடித்தே தீரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடுகிறது. ஒரு மாற்றம் தேடித்தான் ரசிகர்கள் படம் பார்க்க வருகிறார்கள். அவர்களை மகிழ்விப்பது நமது கடமை." நக்மா புத்திசாலி.

# சினிவிசிட்

## ஊர்மிளா சீசன்

'ரங்கீலா' படம் செமர்த்தியான வசூலை அள்ளிக் குவித்துக் கொண்டிருக்கிறது. போதும் என்று இயக்குநரே சொல்லுமளவுக்கு கவர்ச்சி காட்டியிருக்கிறார் ஊர்மிளா. 'ரங்கீலா' பட வீடியோ கசட்டுக்கள் தமிழ்நாட்டிலும் மலிந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஊர்மிளா சீசன் தொடங்கிவிட்டதால் படத் தயாரிப்பாளர்கள் பார்வையெல்லாம் ஊர்மிளாவை நோக்கித் திரும்பியிருக்கிறது. தமிழ் படத் தயாரிப்பாளர்களும் ஊர்மிளாவை தூண்டிலோடு துரத்துகிறார்கள். கமலோடு 'இந்தியன்' படத்தில் நடித்து முடிக்கும்வரை வேறு தமிழ் படங்களை ஒப்புக் கொள்வதில்லை என்ற முடிவோடு நடித்துக் கொண்டிருக்கிறார் ஊர்மிளா.



அர்ஜுன்-ரோஜா
படம்-ஆயுத பூஜை



ராம்கி-குஷ்பு
படம்-இரட்டை ரோஜா

## முகப்பில்

ரஜினிகாந்த்
இந்தி நடிகை
ஆயிஷா ஜீல்கா


## சபலசாமி

அரவிந்தசாமிக்கு புதையல் படத்தில் பெண்களைக் கண்டால் அசடு வழியும் சபலபுத்தியுள்ள பாத்திரம். மம்முட்டியும் நடிப்பதால் தனது பாத்திரம் நன்றாக வரவேண்டும் என்று அடிபாடோடு நடிக்கிறார் அரவிந்தசாமி. படத்தில் இரண்டு ஹீரோக்கள். ஏற்கனவே தளபதி படத்தில் மம்முட்டியோடு நடித்திருந்தவர் அரவிந்தசாமி. அதனால் இருவரும் நல்ல நண்பர்கள்.

## சாமியாராக ஆசை

'கல்லூரி வாசல்' படத்தில் பிரசாந்த் ஜோடியாக நடித்துக்கொண்டிருப்பவர் பூஜாபட். இந்தி நடிகையான பூஜாபட்டுக்கு மதுவென்றால் கொள்ளைப் பிரியம். எப்போதும் சிகரெட் பிடித்துக் கொண்டிருப்பார். ஆண் நண்பர்களும் அதிகம். தற்போது எல்லாவற்றிலும் சலிப்பு ஏற்பட்டு விட்டதால் பெண் சாமியாராக மாறப்போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார் பூஜாபட்.





மம்தா குல்கர்னி

## 'மாண்புமிகு மாணவன்'

சரத்குமார் நடித்த 'கூலி' படத்தை தயாரித்த பட நிறுவனம் புதிதாகத் தயாரிக்கும் படம் 'மாண்புமிகு மாணவன்' கதாநாயகனாக விஜய் நடிக்கிறார். பம்பாயில் இருந்து புதுமுக நடிகை ஒருவரை இறக்குமதி செய்யப் போகிறார்கள். தமிழுக்கு புதுமுகமாகவும் ஆனால் இந்தியில் ஏற்கனவே பிரபலமாகவும் உள்ள நடிகையாகத் தேடிக்கொண்டிருக்கிறார் எஸ்.ஏ.சந்திரசேகரன். அவர்தான் படத்தின் இயக்குநர். விஜய் நடித்து வெளியாா் இயக்கும் படங்கள் பிரமாதமாக அமைவதில்லை. தற்போது ஓடிக்கொண்டிருக்கும் 'சந்திரலேகா' படமும் பெரியளவில் ஹிட்டாகவில்லை. அதனால் விஜய் நடிக்க அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரன் 'மாண்புமிகு மாணவன்' படத்தை இயக்குகிறார். டிசம்பர் மாதம் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது. படத்தின் கதையை எழுதுபவர் ஷோபா. விஜயின் அம்மா. ஷோபாதான் 'நண்பர்கள்' படத்தின் மூலமாக மம்தா குல்கர்னியை அறிமுகம் செய்தவர். அதாவது நடிகையாக்கியவர். மம்தா இப்போது இந்தித் திரையுலகை ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறார்.

## ஆகஸ்ட் 15

இந்தியா சுதந்திரம் பெற்றது ஆகஸ்ட் 15இல். அர்ஜுன்-பம்பாய் இறக்குமதி மோனிகா நடிக்க ஆர்.வி.உதயகுமார் இயக்கும் படத்திற்கும் 'ஆகஸ்ட் 15' என்றுதான் பெயர் வைத்திருக்கிறார்கள். தனிக்கைக் குழுவால் ஏதாவது பிரச்சனை வரலாம் என்பதால் முன் கூட்டியே அனுமதி வாங்கிவிட்டார் ஆர்.வி.உதயகுமார். அர்ஜுனுக்கும் 'ஆகஸ்ட் 15' பிடித்தமானது. ஏனெனில் அர்ஜுனின் பிறந்தநாளும் 'ஆகஸ்ட் 15'.

## ஹாலிவுட் நியூஸ்

சில்வெஸ்டர் ஸ்டாலோன் நடித்து கடைசியாக வெளிவந்த படம் 'த ஸ்பெஷலிஸ்ட்'. தற்போது புதிய படமொன்றில் நகைச்சுவை கலந்த அதிரடி நாயகனாக நடிக்கப் போகிறார். படத்தின் பெயர் 'எக்ஸஸிங் பெக்கேஜ்'. இதில் நடிக்க கிட்டத்தட்ட நம்மூர் பெறுமதிப்படி இருபது கோடி சம்பளம் வாங்கியிருக்கிறார் ஸ்டாலோன். கதாநாயகியை சாகசம் செய்து மீட்பதுதான் கதை. பிரமாண்டமாக கட்டுத் தரப்போகிறார்கள்.

## சூப்பர் ஸ்டாரின் புதிய வேடம்

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் வெளிநாடு செல்லும் அவசரம் மத்தியிலும் சந்திக்க நேரம் ஒதுக்கிய முக்கிய நபர் ரஜினி.

நரசிம்மராவ்-ரஜினி சந்திப்பு ஒரு முக்கிய திருப்பம் என்று கருத்துச் சொல்லியிருக்கிறார் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்.

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள பஞ்சாயத்து தேர்தலில் காங்கிரஸ் கட்சியோடு கூட்டுச் சேர்ந்திருக்கிறது வீரப்பன் அணி. எனவே தேர்தல் பிரசாரத்திற்கு ரஜினிகாந்த் களத்தில் இறக்கப்படலாம் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

இதுவரை தனது திரைப்படங்களில் அரசியல் அதிரடி வசனங்களைப் பேசிவந்த ரஜினி, தேர்தல் மேடைகளில் இறங்கினால் கூட்டம் திரளும் என்று நிச்சயமாகத் தெரிகிறது. ஆனால் புதிய பாத்திரத்தை ஏற்க ரஜினி முன்வருவாரா என்பதுதான் கேள்வி. ஆர்.எம்.வீரப்பனால் கூட அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

ரஜினியை பாட்ஷாவாக்கிய வீரப்பன் அவரை அரசியல் தலைவராகவும் காட்டத்தான் போகிறார் என்று ரஜினி ரசிகர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்து படைத்த சாதனையை ரஜினி என்ற மூன்றெழுத்தும் படைக்கும் என்று நம்பிவிட்ட காங்கிரஸ் ரஜினியை அரசியலுக்கு கொண்டுவர தயாராகிவிட்டது. முன்னர் எம்.ஜி.ஆர் தனிக்கட்சி தொடங்கவும் காங்கிரஸ் ஆட்சிதான் திரைமறைவில் உதவியது. தி.மு.க அரசையும் டிஸ்மிஸ் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிறக்கப்போவது ஆணா—பெண்ணா?

## கைகொடுக்கும் சீனக் காலண்டர்

| | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| JAN | F | M | F | M | F | M | M | F | M | F | M | F | M | M | M | F | M | M | F | M | F | M | F |
| FEB | M | F | M | F | M | M | F | M | F | M | F | M | F | F | F | M | F | M | M | F | M | F | M |
| MAR | F | M | F | F | M | F | M | M | M | F | M | F | F | M | M | M | M | F | M | M | F | M | F |
| APR | M | F | M | F | F | M | M | F | F | M | F | F | F | F | F | M | F | M | F | M | M | M | M |
| MAY | M | F | M | F | M | M | F | F | F | F | F | M | F | F | F | F | F | F | M | F | M | M | F |
| JUN | M | M | M | F | F | F | M | M | M | F | F | M | F | F | F | F | F | F | F | M | F | F | M |
| JUL | M | M | M | F | F | M | M | F | F | M | M | M | F | F | F | F | F | F | F | F | M | F | M |
| AUG | M | M | M | F | M | F | F | M | M | M | M | M | F | F | F | M | F | M | F | M | F | M | F |
| SEP | M | M | M | F | F | M | F | M | F | M | M | M | F | F | F | F | F | F | M | F | M | F | M |
| OCT | M | M | F | F | F | M | F | M | F | M | M | F | F | F | F | F | F | F | M | M | F | M | F |
| NOV | M | F | M | F | F | M | F | M | F | F | F | F | M | F | F | F | M | M | M | F | M | F | M |
| DEC | M | F | M | F | F | F | F | M | F | M | F | F | M | M | M | M | M | M | M | M | F | F | F |

நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் பயனாக, பிறக்கப் போகும் குழந்தையை ஆணா பெண்ணா என்று கண்டு பிடிப்பது இப்போது சாதாரண விஷயமாகி விட்டது. 'ஸ்கேன்' செய்தால் உடனே தெரிந்து விடும்.



ஆனால் 'ஸகேன்' செய்வதால் பக்க விளைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உண்டு என்று கூறப்படுகிறது. மேலும் ஸ்கேன் செய்ய வசதி இல்லாதவர்கள் என்ன செய்யமுடியும்?

கவலை வேண்டாம். இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு 'சீனக் கலண்டர் முறை' இருக்கிறது. 700 ஆண்டுகளுக்கு முன்பு சீன விஞ்ஞானிகள் கண்டறிந்த முறை இது.

18 வயதிலிருந்து 40 வயதிற்குட்பட்ட பெண்கள் இந்தக் கலண்டர்கள் மூலம் பிறக்கப்போகும் குழந்தை என்னவென்று அறிந்து கொள்ள முடியும். மேலே கலண்டரில் கிடையாக 18இலிருந்து 40 வரை இருப்பது பெண்களின் வயதைக்குறிக்கிறது. செங்குத்தாக மாதங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. வயதையும் கருத்தரித்த மாதத்தையும் வைத்து அதற்கு நேராக உள்ள வரிசையில் பார்த்தால், ஆண் குழந்தையா? அல்லது பெண் குழந்தையா என்பது தெரிந்து விடும்.

'M'ஆண் குழந்தையையும் (MALE), 'F' பெண்குழந்தையையும் (FEMALE) குறிக்கிறது.

உதாரணமாக பெண்ணின் வயது 26,கருத்தரித்த மாதம் ஜூன் என்றால் ஆண் குழந்தை.

இந்தக் கலண்டரின் மூலப் பிரதி சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள விஞ்ஞான மையத்தில் இருக்கிறது. 99 சதவீதத்தினருக்கு இந்தக் கலண்டர் முறை கனகச்சிதமாகப் பொருந்தியிருக்கிறது என்பது ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கருவுற்ற பெண்களே, கலண்டரைப் பார்த்து உங்கள் சிசு, ஆணா, பெண்ணா என்பதை தெரிந்து கொள்ளுங்கள். இது சரியாக இருக்கும் பட்சத்தில் சீனர்களை வாழ்த்துங்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## கனவு வந்ததோ?



கனவு என்றால் என்ன?


எப்படி ஏற்படுகிறது என்று பலரும் பல கோணங்களில் ஆராய்ச்சி செய்துவிட்டார்கள். உளவியல் மேதை பிராய்டு என்ன சொன்னார் என்றால், "நமது அன்றாட வாழ்க்கையின் சிதைந்த பிரதிபலிப்புக்களே கனவுகளாக வருகின்றன" என்று சொன்னார்.

பிராய்டு சொன்னது சரியல்ல, நமது ஆழ் மனதின் ஆசைகள் மட்டும் கனவுகளாக வருவதில்லை என்கிறாகள் நவீன விஞ்ஞானிகள். நமக்கு ஏற்படும் அனுபவங்களுக்கும், எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. கனவுகளை வைத்து நமது உள், மனதின் சிக்கல்களை, முரண்பாடுகளை அறிந்து அவற்றைக் களைய முடியும் என்கிறார்கள்.

கனவுகளுக்கும் ஆண் கனவு,பெண்கனவு என்ற வேறுபாடு இருக்கிறதாம், ஆண்கள் பொரும்பாலும் வெளிப்புற நடவடிக்கைகள் பற்றிக் கனவு காண்கிறார்கள். பெண்கள் உணர்வுபூர்வமான கனவு காண்கிறார்கள்.

## காதல் தோல்வியால் கவலையா?

'காதல் தோல்வி' என்பது இன்றைய நாளில் சர்வ சாதரணமாகிவிட்டது! நீங்கள் விரும்பிய பெண்ணை மணமுடிக்க முடியாவிட்டால் உடைந்து போய் விடுகிறீர்கள்! இதயம் நொறுங்கி விடுகிறது.



அந்தச் சோகம்-உங்களை விட்டு விலக நெடுங்காலம் பிடிக்கலாம். ஆனாலும்-காதல் தோல்வியின் சோகம் சொல்லிக் கொண்டு எவ்வளவு நாள் இருக்க முடியும்? மீண்டு வாருங்கள்.

இதோ சில வழிகள். முயன்று பாருங்கள் பழைய நிலைக்கு வந்து விடுவீர்கள்.

1. எப்போதும் ஏதாவது ஒரு செயலைச் செய்து கொண்டு 'பிஸி'யாக இருங்கள். ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கும் போதுதான் சோக நினைவுகள் வெளி வரும்.
2.'பளிச்'சென்று உடையணிந்து தோற்ற மளியுங்கள்.
3. கடைகளுக்குச் செல்லுங்கள். உங்கள் நெருங்கிய நண்பர், நண்பிகளுடன். நீங்கள் நீண்ட நாட்களாக வாங்க விரும்பிய சட்டை, கடிகாரம், செருப்பு இப்படி எதுவாயினும் வாங்க.
4. சுய முன்னேற்றம் பற்றிய புத்தகங்கள்-புகழ்பெற்ற நாவல்கள் வாங்கி படியுங்கள்.
5. உங்களுக்குப் பிடித்த பாடல்களைக் கேளுங்கள். சோகப் பாடல்களைத் தவிர்த்து விடுங்கள்.
6. எப்போதும் நண்பர்களுடன் இருங்கள். விருந்துக்குச் செல்லுங்கள்.
7. சோக நினைவுகளைச் சுமந்து, சுய இரக்கம் கொண்டு திரியாதீர்கள்.
8. இந்தத் திருமணம் நடைபெறாதது இருவருக்கும் ஏதோ விதத்தில் நல்லது என்று நம்புங்கள்.
9. உங்களுக்கான சரியான துணை காத்திருக்கிறார் என்பதை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்.

# சினிமாவும்—காதலும்



கதாநாயகி திமிர் பிடித்தவள். பஞ்சாயத்தில் கதாநாயகனை அவள் சவுக்கால் அடிப்பாள். அதை வாங்கிக் கொண்ட கையோடு கதாநாயகன் அவளுக்கு பலவந்தமாய் தாலி கட்டுவான். தன் விருப்பத்தற்கு மாறாக கட்டப்பட்ட தாலிக்கு என்ன புனிதமும், மரியாதையும் இருக்க முடியும்?

இன்னொரு படத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுகிறார் ஹீரோ.(திருமாங்கல்யம்) அவள் எழுந்து அழுகிறாள்.

கடைவீதி கலகலக்கும் என்று விடலைப் பையன்களோடு சேர்ந்து பாடி கூத்தடித்த ரோடு சைடு ரோமியோ ஒரு ஹீரோ. அவர் கட்டாய தாலி கட்டினாலும் அது புனிதமானது. அப்படிச் செய்த பின் அவர் முறுக்கிக் கொண்டாலும் ஹீரோயின் கெஞ்சுவாள்.

காதலன் திரும்ப வருவதற்குள் காதலிக்கு தாலி கட்டிவிட்டால் (அவள் விருப்பத்திற்கு மாறாக) பின் அவள் தன் மனைவியாக வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை என்று ஒரு படம். "என் காதலியைக் கட்டாயத் திருமணத்திலிருந்து மீட்பேன்" என்று சொல்லத் தெரியாத ஹீரோ, **"வெள்ளைப் புறா ஒன்று போனது கையில் வராமலே"** என்று பாடுகிறார்.

இப்படி காதல் என்பது வேறு, கல்யாணம் என்பது வேறு என்றே இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. காதலி வேறு, அவள் அந்தஸ்த்து வேறு. மனைவி வேறு, அவள் அந்தஸ்த்து வேறு.

**'காதல் என்பது எதுவரை**
**கல்யாணக் காலம் வரும்வரை!'**

அப்படியென்றால் அதற்குப் பின் என்ன? காதல் என்பது கல்யாணத்தின் பின்னரும் பலப்படவேண்டிய விஷயம். அது கல்யாணத்தோடு முடிந்து போகும் என்பது எத்தனை வருத்தத்திற்குரிய விஷயமாகும்.

ஆக, காதல் என்பதை ஒரு பெண்ணின் உணர்ச்சி குறித்த விஷயமாகவோ, வாழ்க்கை குறித்த விஷயமாகவோ பார்க்காமல், திரும்பத் திரும்ப அது ஆணின் ஆசை குறித்த விஷயமாகவும், மானப் பிரச்சனையாகவும், எல்லாவற்றுக்கும் மேலாக 'தாலிக்கு கட்டுப்பட்டவள் பெண்' என்பதே பிரதானமாகவும். பெண்ணின் விருப்பத்தை பொறுத்ததே தாலி என்பது உதாசீனப்படுத்தப்பட்டும் வந்திருக்கிறது.

உன் விருப்பத்திற்கு உடன்படவில்லையா, நீ அவளுக்கு தாலி கட்டு. ஊர் கூட்டித் தாலி கட்டிவிட்டால் அதில் பெண்ணின் விருப்பம் ஏதாவது இருக்கிறதா என்ன? என்கிறது இன்னொரு சினிமா.

இதன் காரணமாகவே நம் சமூகத்தில் காதலிக்கும் ஆண்களில் ஒரு சாரார் அது நிறைவேறாது போனால் ஒன்று தாடி வளர்த்து சோகமாகிறார்கள். இல்லை, வற்புறுத்தி கல்யாணம் செய்ய முயற்சிக்கிறார்கள். அதுவும் இல்லை யென்றால், எனக்கு கிட்டாதது வேறு எவருக்கும் கிட்டக் கூடாது என்று முடிவு செய்கிறார்கள்.

**'மணந்தால் மாகாதேவி இல்லையேல் மரணதேவி!'** அது சரி, எல்லாவற்றுக்கும் சினிமாதான் காரணமா? சினிமாதான் காரணம், வேறு இல்லை என்று கூறிவிட முடியாது. பிறப்பு, வளர்ப்பு சூழ்நிலை எல்லாமே காரணம்.

ஆனால், காதல் என்பது வீட்டில் பேசப்படுவதோ, விவாதிக்கப்படுவதோ இல்லை. அதற்கு இத்தனை பெரிய முக்கியத்துவம் கொடுப்பது திரைப்படமும், இலக்கியமும்தான். அதை நேர் செய்ய வேண்டிய மிகப் பெரிய கடமை நம் கையில் இருக்கிறது.

**-சுமதி-**
**துக்ளக்.**

# கூந்தலைக் கவனியுங்கள்



★தேங்காயைத் துருவி சிறிதளவு தண்ணீர் சேர்த்து நன்றாக அரைத்து, அந்த விழுதை தலையில் தேய்த்து வைத்து,ஒரு மணிநேரம் கழித்து சீயாக்காய்த்தூள் தேய்த்துக் குளிர்ந்த நீரில் தலையை அலசி விடவும். வாரம் இரண்டு முறை அதைப் போல் செய்து வரவும்.

★ செவ்வரத்தம் இலைகளையும், கொஞ்சம் ஊற வைத்த வெந்தயத்தையும் நன்றாக அம்மியில் வைத்து அரைத்து, அந்த விழுதை தலைமுடி முழுவதும் படும்படி நன்றாகத் தேய்த்து,ஒரு மணிநேரம் ஊறவைத்த, சீயக்காய் கொஞ்சம் கலந்து அத்துடன் முழுகவும். இந்த முறையை வாரம் மூன்று முறை செய்து வரவும்.

★முதல் நாளைய சோறு வடித்த கஞ்சி,புளித்த தயிர், அத்துடன் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறு முதலியவைகளை நன்றாகக் கலந்து தலையில் தேய்த்து,ஒரு மணிநேரம் ஊறவிட்டு, குளிர்ந்த நீரில் குளிக்கவும். இம்முறையை வாரத்தில் மூன்று அல்லது நான்கு முறை செய்யவும்.

# சிரிக்கும் குழந்தைகள்

சிரிக்கும் குழந்தைகளுக்கு சுறு-சுறுப்பு,மூளை வளர்ச்சி அதிகம் உள்ளதாக இருக்கும் என்று ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



குழந்தை பிறந்து முதல் ஆறு மாதத்தில் தொடுகின்ற பொருட்களைப் பார்த்து குழந்தை சிரிக்கும். ஏதாவது சப்த்தம் கேட்டால் சிரிக்கும்.

அடுத்த ஆறு மாதத்தில் இந்த சிரிப்பு குறைந்து அறிவு பூர்வமானதாக இருக்கும்.

இப்படிக் குழந்தையின் சிரிப்பை வைத்து அதன் அறிவாற்றலை அளக்கும் முறையை அமெரிக்காவிலுள்ள வோஷிங்டன் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் திருமதி சூசன் ஸ்மைக்கர் கண்டுபிடித்திருக்கிறார்.

# சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது சுகந்தினி

## மாம்பழ ஜாம்

**தேவையானவை:**

நார் இல்லாத பெரிய பழுத்த மாம்பழம்-5
சீனி-1 கிலோ
சிட்ரிக் அசிட்-1 மேசைக்கரண்டி
மஞ்சள் கலர் பவுடர்- அரை தேக்கரண்டி
மாங்கோ எஸன்ஸ்-1 தேக்கரண்டி

**செய்முறை:**

மாம்பழத்தை நறுக்கி சதைப்பற்றை மாத்திரம் எடுத்துக் கொள்ளுங்கள். நறுக்கிய துண்டுகளை ஒரு பாத்திரத்தில் போட்டு பழத்துண்டுகள் நனையும் அளவு தண்ணீர் விட்டு அடுப்பில் வையுங்கள். நன்றாக வெந்ததும் மசித்துக் கூழாக்குங்கள். கூழையும், சீனியையும் சேர்த்து அடுப்பில் வையுங்கள். கூழும் சீனியும் சேர்ந்து நன்றாக கொதிக்கத் தொடங்கியதும் சிட்ரிச் அசிட்டைப் போட்டுக் கலந்து விடுங்கள். நன்றாகக் கொதித்து சீனியும் கூழும் ஒன்றாக இணைந்தவுடன் அடுப்பிலிருந்து இறக்கி விடுங்கள். பின்னர் கலர் பவுடர், மாங்கோ எஸன்ஸ் விட்டு நன்றாகக் கலக்குங்கள். ஓரளவு சூடு ஆறிய பிறகு போத்தல்களில் ஊற்றி மூடிப் பாதுகாத்து உபயோகித்துக் கொள்ளலாம்.

# குத்து விளக்கில் ஐந்து முகம்

குத்து விளக்கில் ஐந்து முகங்கள் இருப்பது ஏன்? அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத்தன்மை ஆகிய ஐந்து குணங்களை குறிப்பவையே அவையாகும். இவை ஐந்தும் பெண்களுக்கு மட்டுமே உரியதாக கூறப்பட்டாலும் குடும்பத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்க வேண்டிய பொதுக் குணங்கள் என்பதே பொருத்தமாக இருக்கும்.

# ஸ்போட்ஸ் கிரிக்கெட் துணுக்ஸ்



இன்றைய அவுஸ்திரேலிய கிரிக்கெட் குழுவின் கப்டன் மார்க் டெய்லர், பாவம் ஒரு நாள் போட்டிகளில் மட்டும் 25 முறை 12வது ஆட்டக்காரராக இருந்திருக்கிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் குழுவினரைப் பொறுத்தவரை 20 பேர் மட்டுமே 50க்கும் அதிகமான டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளனர். இதில் லேட்டஸ்ட்டாகச் சேர்ந்திருப்பவர் அம்புரோஸ். மிக அதிக டெஸ்ட்களில் விளையாடியவர் முன்னாள் கப்டன் விவியன் றிச்சட்ஸ். இவர் 121 போட்டிகளில் ஆடியுள்ளார்.

சிம்பாப்வே இதுவரை 12 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே ஆடியுள்ளது. இதில் ஒரு டெஸ்ட்டில் மட்டும் சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக வென்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியினரில் 4 பேர் மட்டுமே இதுவரை 250க்கும் அதிகமான விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளனர். சமீபத்தில் நாலாவது நபராகச் சேர்ந்துள்ளவர் கோட்னி வோல்ஷ்.


# பொறி வைக்கும் பந்து வீச்சு

## கும்ளே வீழ்த்திய 100 இல் 10

அனில் கும்ளே தன்னைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ள தகுதியானவர்தான்.

21 டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட்டுக்களை சரித்துவிட்டு, கும்ளே சொன்னார், "முதல் விக்கெட்டும்,நூறாவது விக்கெட்டும் லேசுப்பட்டவையல்ல. இரண்டு பெரும் வீரர்களின் விக்கெட்டுக்கள் அவை". என்றார்.

விக்கெட்டுக்களை வீழ்த்துவதைவிட, வீழ்த்தப்பட்டது யார் என்பது பெருமைக்கு கனம் சேர்த்துவிடுகிறது.



அனில் கும்ளே டெஸ்ட் போட்டியில் நுழைந்த பின்னர் முதலில் வீழ்த்தியது இங்கிலாந்து வீரர் அலன் லாம்ப்பை. கும்ளேயின் பந்து வீச்சுக்கு அலன் பதிலடி கொடுத்து கொண்டிருந்தபோது, இரண்டாவது ஓவரில் தோல்வி காத்திருந்தது. லாம்ப்பை பொறிக்குள் சிக்கவைத்தார் கும்ளே. அதுதான் கும்ளேயின் முதல் விக்கெட். முதல் முத்தம் மாதிரி அதனை மறக்காமல் இருக்கிறார் கும்ளே.

கும்ளேயின் நூறாவது விக்கெட் மார்ட்டின் குறோ. சமீபத்தில் பெங்களூரில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் கும்ளேக்கு கிடைத்த நல்ல பரிசு அது.

"மார்ட்டின் குறோவுக்கு டெண்டுல்கர் பந்து வீசியபோது கவனித்துக் கொண்டிருந்தேன். மார்ட்டின் குறோ எத்தகைய ஆட்ட முறையைக் கையாளுகிறார் என்பது தெரிந்துவிட்டது. 'ஓஃப் ஸ்டம்ப்' முறைதான் சரியான பொறி என்று தீர் மானித்துக்கொண்டு, பந்தை வீசினேன். மார்ட்டின் குறோ மாட்டிக்கொண்டார். டெண்டுல்கரின் கைகளுக்குள் பந்தினைக் கொடுத்து விட்டு வெளியேறினார்" என்று விபரித்திருக்கிறார் அனில் கும்ளே.

"99 வது விக்கெட்டுக்கும், நூறாவது விக்கெட்டுக்கும் இடையே இடைவெளி சற்று அதிகம்தான், ஒப்புப்கொள்கிறேன்" என்றும் சொல்கிறார் கும்ளே.

தனது டெஸ்ட் வரலாற்றில் வீழ்த்திய 100 விக்கெட்டுக்களில் கும்ளே குறிப்பிட்டுக் கூறும் பத்து விக்கெட்டுக்கள் இவைதான்.

1.அலன் லாம்ப் (இங்கி) 2.ரொபின் ஸ்மித் (இங்கி)3.ஜோன்டி ரோட்ஸ் (தெ.ஆ) 4.அர்ஜுன ரணதுங்கா.(இல) 5.கிரஹாம் ஹிக்(இங்கி) 6.ஸ்ருவேட் வில்லியம்ஸ் (மே.இ.தீ.) 7.கென் ரூதர்போர்ட (நியூசி) 8.மஹாநாமா (இலங்)9.ரிச்சார்ட் பிளாக்(இங்கி) 10.மாட்டின் குறோ (நியூசி)

'அர்ஜுன ரணதுங்க, மஹாநாம ஆகியோரை வீழ்த்தியது பற்றி கும்ளே பின்வருமாறு விபரித்துள்ளார்.'

"கொழும்பில் இடம்பெற்ற ஆட்டத்தில் அர்ஜுன ரணதுங்கா சகல பந்துகளையும் வேகமாக அடித்துக் கொண்டிருந்தார். பின்புறமாக, மிக மெதுவாக பந்தை வீசினேன். அவர் அடித்தபோது 'ஸ்குவாயர் லெக்'குக்குப் பந்து போனது. அது அவரை வீழ்த்த நான் வைத்த பொறி.

மஹாநாமவுக்கு மெதுவான சில பந்துகளை வீசிவிட்டு, திடீரென்று வேகமாக ஒரு பந்தை வீசினேன். அது 'ஷோட்லெக்'காக முடிந்து, மஹாநாம ஆட்டமிழந்தார்" என்கிறார் கும்ளே.

கிரிக்கெட்டில் மூளைக்கும் கடும் வேலையிருக்கிறது. எதிராளியை ஏமாற்றி பொறிக்குள் சிக்கவைப்பது முக்கியம். விளாசும் ஆசையை ஏற்படுத்திவிட்டு சட்டென்று மடக்கும் உத்தி அவசியம். கும்ளே மூளையைப் பயன்படுத்தி சாதனைச் சிகரத்தில் ஏறத் தொடங்கியிருக்கிறார்.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 13

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

★ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
★ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
★ பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
★ முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



# தேன் கிண்ணம்



## சமாதானம் முளைக்காது

உலகம் மூலைமுடுக்கெல்லாம்
போரை உடுத்திக்கொண்டு
சமாதானம் பேசுகிறது!
♦♦
ஆயுதப் பிசாசு
அப்பாவி உயிரைக்
குடித்துக் குடித்துக்
கொளுத்துக் கிடக்கிறது!
♦♦
துப்பாக்கிகளால் எல்லையிடப்பட்ட
வேலிகளுக்குள் மனிதவாழ்க்கை
சுருண்டு கிடக்கிறது.
♦♦
சமாதானப் புறா
சிறகொடிந்து, கறுப்புச் சாயம்
பூசிக் கொண்டு ஒரு மூலையில்
ஒளித்துக் கிடக்கிறது!
♦♦
அகதிமுகாம்கள் மட்டும்தான்
இங்கே அகலமாக்கப்படுகிறது....
மீளக்குடியேறியவர்களும்
மீண்டும் மீண்டும் அகதிகளாய்...
♦♦
பணத்தை விழுங்கி விழுங்கி
யுத்தம் இன்னும்
சங்கிலிப் பின்னல்களாய்
நீண்டுகொண்டு போகிறது....!
♦♦
போர்த் துகில் உரியப்படும் வரை
இப்பூமியில் சமாதானம்
சரித்திரத்திற்கும் முளைக்காது.

காரைதீவு, - எஸ். நாகராஜன்


## தேநீர்

தேயிலை செடிகளுக்கு
தினமும் நீரூற்றி
தேய்ந்த உள்ளங்களின்
தெளிந்த இரத்தம்.
❦❦
மாடாய் உழைத்த
மனித உடலை
கசக்கிப் பிழிந்த
கனியுப்புத் தொகுதி
❦❦
வெயில் மழை பாராது
வயிற்றுப் பசிக்காக
வாடி உழைத்தோரின்
வடி கட்டிய வியர்வை
❦❦
காட்டை அழித்து
நாட்டைக் காக்கும்
கடின உழைப்பாளியின்
கண்ணீர் துளிகள்.

எஸ்.கோடீஸ்வரன், பொகவந்தலாவ



## காதல் பரிசு



புலவர்களுக்கு
ஒரு போட்டி நடந்தது....
எதைப்பற்றியும் எழுதலாம்
என்பதே விதிமுறை!
❣❣
ஒருவன்
போர்க்களத்தில்
கவிதை செய்தான்.
❣❣
இன்னொருவன்
இயற்கையை கவிதையாக்கினான்.
❣❣
வேறொருவன்
பூவைப்பற்றி எழுதினான்.
❣❣
பிறிதொருவன்
பூமிக்குள் கவிதை கண்டான்.
❣❣
உணர்ச்சிகளின் மறுபதிப்பே
கவிதை என்றார்கள்.....
❣❣
நான்
உன்னைப்பற்றி எழுதினேன்!
என்
கண்ணீருக்கு பரிசு கிடைத்தது!!

அ.டக்ளஸ் ஜெயசேகரன், வவு/ இறம்பைக்குளம்

## காதல் வழிந்தோட......



கண்ணீர்
கண்களைக் கழுவிவிட
சுடுண்டு படுத்தவாறு
இருண்ட வானத்தைப் பார்த்துக்
குருடாகிக் கிடந்தேன்!
–•–
நிலா வரவில்லை!
துண்டுகளாகச் சிதறி
தொடுவான
மலைகளின் அடியில்
விழ்ந்திருக்குமோ....?
–•–
அவனின் உறுதிகளுக்கு
மாற்றமாகவே
அனைத்தும் நடந்த பின்னர்
இதுவும் நிகழலாம்;
நான் திகைப் படையேன்!
–•–
கண்ணீரிற்
கலங்கிய பார்வையில்
ஏராளம் நட்சத்திரங்கள்
எட்டி நின்று ஏதேதோ கூறின!
–•–
"எறிகற்களை
எனை நோக்கி
ஏவி விடுமோ?" என
எனக்குள் அச்சம்
கேள்வி எழுப்பியது!
அவன் கூட இப்படித்தானே;
புன்னகையோடு தந்த
கடிதத்துக்குள்தானே
பிரளயங்களைக்
கொழுவி வைத்திருந்தான்!
–•–
ஊத்துண்டு போன நிலா
எப்படியோ உருவெடுத்து
வானில் மேய்ந்தவாறு
நட்சத்திரக் காட்டை
நக்கித் தின்றது!
–•–
காதலின்
விளம்பரங்களிலெல்லாம்
போலிகளும்
பொய்களுமே
பொங்கி வழியும்....!
காதலர்களுக்குக்
கடைசியிற் கிடைப்பது
பாரமான
கண்ணீர்த் துளிகள் மட்டுமே!

செல்வி. பஹீமா ஜஹான் ஸலாஹிர், மெல்சிரிபுர.

## நிரந்தர நிகழ்வுகள்.....



வையகத்து வெ
வானத்து இடியை
தோற்கடித்து
வாகை சூடும்!
▫▫
மனத்தோணி
நிம்மதித் துடுப்பிழந்து
யுத்தக் கடலில்
தத்தளிக்கும்!
▫▫
சமூகம்
சமாதானத்தை
சாகடித்துவிட்டு
போருக்கு
தனி போட்டு
வளர்க்கும்!
▫▫
பிணங்களை
நலம் விசாரிக்க
எறும்புகள்
துரிதமாக
அணிவகுத்துச் செல்லும்!
▫▫
அரை ஆயுளில்
செத்த ஆவிகள்
இரவில்
இலக்கின்றி
செக்கிங் செய்யும்!
▫▫
இழவு வீட்டில்
ஒப்பாரி நிகழ்ச்சி
ஒத்திவைக்கப்பட்டு
முடிச்சுகளோடு
ஓட்டம் நடக்கும்!
▫▫
பொது மக்களின்
அஞ்ஞாத வாசம்
பதுங்கு குழிகளில்
பயம் ஜீரணிக்கும் வரை
அமுலில் இருக்கும்!

கி.ராஜேஸ்வரி. சம்பூர்–07

## இதுவரை நான்



கால விருட்ஷ
நெடுங்கிளையில்
தொங்கிக் கிடக்கிற தென் ஆவி
நான்
இறந்துவிட மாட்டேனா....?
உன் நினைவுகள் அரித்து...!
❑❑
நேற்றினது மாலையில்
நின் கவிதையொன்றில்,
செதுக்கி வைத்தேன்
உன்னை!
❑❑
இன்றினது இரவில்
நீ–நான் பற்றிய
மெல்லிய நினைவால்
உராயப்படுவாய்
இக்கவிதை படித்ததால்!
❑❑
ஒரு கணமேனும்
என்னில் நீ
இடறாமல் விட்டதில்லை!
❑❑
நேற்றும் ஒரு கவிதைக்கு
உன் பெயரைச் சூட்டி
மூர்ச்சித்ததென் சுவாசம்!
❑❑
நெடுங்காலமாய்
உன் புறாவிழிகளில்
கலக்கவில்லை நான்!
❑❑
அன்பே.....!
எப்படி இருக்கிறாய்
என் பிரார்த்தனையால்?

"கன்ஸியா"

## தானமாக......



பூமிமாதா இன்னமும்
பார்த்துக் கொண்டிருக்கிறாள்;
'பொறுமைக்கான நோபல் பரிசு'
தனக்குத்தான் கிடைக்குமென்று!

இரத்தம் தோயும் மண்ணிற்கே
யுத்தம் சலித்திருக்கும்;
சகித்து வைக்க முடியாமல்
வாய்திறந்து
சொல்லவா போகிறது?

குருஷேத்திரத்திற்கே
பதினேட்டு நாட்களில்
முடிவென்றால்
எங்களுக்கு...?

கீதை சொன்னவன்
இன்னும்
மண்ணுக்கு வரவில்லை;
தீர்வுத்திட்டம்
இதயத்தில் இல்லாமல்
எதை எடுத்துவருவது.....?

கர்ண சொப்பனங்களில்
களத்தில் நிற்பவர்களிடம்
எதைத்தான்
தானமாகக் கேட்பது?

'சமாதானம் எப்போ வரும்?'
'சமாதானமா?
என்ன.... என் பிள்ளையா?
அந்நிய நாட்டில் இருப்பவனா?
வருவான்.........!
விரைவில் வருவான்!
அகதி அந்தஸ்து
நிராகரிக்கப்படுகையில்
நிச்சயம் வந்துதான் ஆகுவான்!

மாவை. வரோதயன்.

## பரீட்சை நெருங்கினால்...



வேண்டிய ஒன்றைப்
பெறுவதற்காக
வேண்டாத ஒன்றைச்
செய்வதாக
நினைக்கத் தோன்றும்!
★★
கடைசிக் கட்டப்
போராட்டத்தில்–என்
விழிகளும், மூளையும்
மோதிக் கொள்ளும்!
★★
லேசாய்
பயம் வரும்!
★★
'உன்னால் முடியும்'
என்று
உள்மனம் சத்தமிடும்!
★★
நம்பிக்கையை
சுவாசமாக்கி
இளமை உதிரும்!
★★
பரீட்சை...!
அது பாடத்திற்கல்ல.....
வாழ்க்கைக்கு!!
★★
அப்போது மட்டும்
காலம் பொன்னாகும்!
★★
மறுக்க மறுக்க
மங்கிய விழிகளுக்குள்
பாடக் குறிப்புகள்
திணிக்கப்படும்!
★★
உணவு, உறக்கம்
இரண்டுமே
இருந்தும்
இல்லாமல் போகும்!
★★
காரணமின்றி
உடல் மெலியும்!
★★
அர்த்த ஜாமத்தில்
என் எதிர்காலம்
தூக்கத்தோடு போட்டியிடும்!
★★

எம். சுரேஷ்,
கொழும்பு வளாகம்.

## மறுபடியும்

அநேகரின்
வேண்டு கோளுக்கிணங்கி
அகிம்சா மூர்த்தி
மகாத்மா காந்தி
மறுபிறவி எடுத்தார்!

'ஒரேயொரு' வரின்
வேண்டு கோளின்படி
மறுபடியும்
அவரை
சுட்டுக்கொன்றார்கள்.

கோவுஸ்ஸ-ராம்ஜீ.

## கனிய விடு

இளைப்பாறிய..
இளந் தென்றல்..
கூந்தல் நீளமதில்..
ஊஞ்சலாடியது..

நிசப்தங்களின..
அச்சமூட்டலுக்கு..
நினைவுகள..
கவசமாகின்றது..

இனியவளின்..
மௌனம் எனை..
இன்னமும்..
கொல்கின்றது..

காத்திருக்கேன்..
காதலியே...!
காதலினை
கனிய விடு...!

என். சஹாப்தீன், ஒட்டமாவடி



"சார், டிக்கட்ட காமிங்க அப்பதான் ஸ்டேடியத்துக்குள்ள விடுவேன்"

"என்ன விளையாடறியா– எங்க டீமோட பயங்கர ஃபாஸ்ட் பௌலர்யா நான், இவ்வளவு தூரத்ல இருந்து ஓடி வந்து பந்து வீசிதான் எனக்கு பழக்கம்!"

"என்ன சார் கிரவுண்ட்ல கலாட்டா?"

"டீம் தோற்கும் நிலையை சமாளிக்க அவுட்டான ஸ்டார் பேட்ஸ்மேனே ஹெல்மட்டாலே முகத்தை மறைச்சுகிட்டு நைஸா மறுபடியும் டென்த் பேட்ஸ் மேனுக்கு பதிலா களத்திலே இறங்கிட்டாராம்!"






## இந்த வாரம் உங்கள் பலன்

(19.11.95 முதல் 25.11.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| விருட்சிகம் | - | சூரியன், புதன், வியாழன், |
| தனு | - | செவ்வாய், வெள்ளி. |
| கும்பம் | - | சனி |
| மீனம் | - | கேது |
| கன்னி | - | இராகு |

★ சந்திரன்–கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், மனச்சோர்வு. | பகல் | 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை,செலவுமிகுதி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை,, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| புதன்- பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | பி.ப. | 1 மணி |
| வெள்ளி - இனசனநன்மை, கௌரவம். | காலை | 6 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவுமிகுதி. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணத்தட்டுப்பாடு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டடல், கௌரவக்கேடு. | காலை | 6 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பணவிரயம். | பகல் | 12 மணி |
| புதன்- காரிய சித்தி,மனப்பயம். | காலை | 7 மணி |
| வியாழன்- தொழிலில் பிரச்சினை, வருமானம் குறைவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- வீண்குறைகேட்டல்,செலவுமிகுதி. | காலை | 6 மணி |
| சனி- அந்நியர் நட்பு, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வெளளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை | 6 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி,செய்தொழில் விருத்தி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- முயற்சி மேன்மை,மனக்கவலை நீங்கும். | காலை | 7 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணவிரயம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியசித்தி,. | பகல் | 12 மணி |
| வெள்ளி- வீண் கவலை,மனக்குறையதிகம் | காலை | 8 மணி |
| சனி- உறவினர் உதவி,தொழில் விருத்தி | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணச்செலவு. | பி.ப, | 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | காலை | 6 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக்கவலை. | பகல் | 12 மணி |
| வெள்ளி- வீண்மனஸ்தாபம், பிரயாணமிகுதி | காலை | 7 மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் நட்டம் | பி.ப, | ·1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் | 2 மணி |
| திங்கள்- வீண்முயற்சி,. செலவுமிகுதி. | காலை | 8 மணி |
| செவ்வாய்-பயனுள்ள செயல்,உயர்ந்தநிலை. | மு.ப | 9 மணி |
| புதன்- பணவரவு, காரிய சித்தி. | பகல் | 12 மணி |
| வியாழன்-தொழில் சிறப்பு, மனக்குறையுண்டு. | மு.ப | 9 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பயனுள்ளசெயல். | பகல் | 12 மணி |
| சனி- பணவரவுத்தடை, காரியநஷ்டம். | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம்,பொருள் வரவு | பகல் | 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனக்கவலை நீங்கும். | காலை | 6 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்ட்ல், பணச்செலவு. | பி.ப. | 2 மணி |
| புதன்- பொருள் வரவு, பெரியோர்நட்பு. | காலை | 6 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை ,முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை | 7 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பயனுள்ள செயல். | பி.ப | 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்கவலை. | காலை | 7 மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, பொருள் இழப்பு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | காலை | 8 மணி |
| புதன் - இனசனநன்மை, பணவரவு. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், தொழில் இழப்பு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- தேககம் பாதிப்பு, கடன் தொல்லை. | காலை | 7 மணி |
| சனி- அந்நியர் உதவி,கௌரவம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 6 மணி |
| திங்கள்- புதியமுயற்சி, மனப்பயம் நீங்கும். | பி.ப. | 12 மணி |
| செவ்வாய்- கௌரவம்,தேக்சுக நன்மை. | காலை | 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக்கலக்கம். | பகல் | 12 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி,முயற்சி பலிதம். | காலை | 7 மணி |
| வெள்ளி- பணவரவு,காரியநட்டம். | பகல் | 12 மணி |
| சனி- வெளியிடபயணம், தொழில்மந்தம் | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, காரியசித்தி. | பகல் | 12 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப | 2 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, தொழில் இலாபம். | பி.ப | 1 மணி |
| புதன்- உறவினர் உதவி, பொருள்வரவு | காலை | 7 மணி |
| வியாழன்-மனக்குறை நீங்கும், இனசனநன்மை | பகல் | 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு | காலை | 8 மணி |
| சனி- பயனுள்ள செயல், முயற்சி பலிதம். | பி.ப | 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி,பொருள் வரவு. | பகல் | 12 மணி |
| திங்கள்- மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, பலவித பேறு. | மு.ப. | 9 மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. | 1 மணி |
| வியாழன்- காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | பகல் | 12 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| சனி- புதிய முயற்சி,பணச்செலவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள்வரவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனக்கவலை நீங்கும். | காலை | 7 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பொருள்வரவு. | பகல் | 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை,செலவு மிகுதி. | காலை | 8 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம்,மனக்கவலை. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 8 மணி |
| சனி- தொழில்நிலை மந்தம், மனக்குழப்பம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 6 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, தேகசுக நன்மை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், அந்நியர்நட்பு. | காலை | 7 மணி |
| புதன்- உறவினர் உதவி, முயற்சிபலிதம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| வெள்ளி- பொருள்வரவு,காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3





## மழை



வானப் போர்வை கிழிந்ததாம்
சின்ன முத்து உதிர்ந்ததாம்!
முத்து முத்து மாலையாம்
சின்ன சின்ன தூறலாம்!

காதுக்குள்ளே குளிருதாம்
காற்று வந்து சிரிக்குதாம்!
பூமி மேலே தாவுதாம்
வேகமாக ஓடுதாம்!

வண்ண வண்ணக் காகிதத்தில்
சின்னச் சின்ன கப்பலாம்!
ஆடிக் கிட்டே போகுதாம்!
பாடிக்கிட்டே சிரிக்கலாம்

-ஹரணி-

தரித்திரம் போகுது; செல்வம் வருகுது;
படிப்பு வளருது;பாவம் தொலையுது
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான்,போவான், ஐயோவென்று போவான்.
- சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# முயற்சி திருவினையாக்கும்

ஓர் ஊரில் முத்து என்ற இளைஞன் ஒருவன் வசித்தான். அவன் சிறு வயதிலேயே தாய், தந்தையை இழந்தவன். அவனது தூரத்துச் சொந்தக்காரர் ஒருவர் அவனை வளர்த்தார். அவரோ ஏழை. அதனால் முத்துவைப் படிக்க வைக்க அவரால் முடியவில்லை.

முத்து எழுதப் படிக்கத் தெரியாதவனாகவே வளர்ந்தான். யார் எந்த வேலை சொன்னாலும் செய்வான். அதற்குக் கூலியாக என்ன கொடுத்தாலும் வாங்கிக் கொள்வான். இயற்கையிலேயே நல்ல மனம் படைத்தவன் அவன்.

ஒரு சமயம் முத்துவின் நண்பன் ஒருவன் வந்து முத்துவிடம், "எமது ஊர் பள்ளிக்கூடத்தில் பியோன் வேலை ஒன்று காலியாக இருக்கிறது. உனக்கு விருப்பமானால் பள்ளிக்கூட தலைமையாசிரியரிடம் போய்க் கேட்டுப்பார்," என்றான்.

அவன் பேச்சைக் கேட்டு அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று தலைமை ஆசிரியரைச் சந்தித்தான் முத்து.

"வணக்கம் ஐயா! இங்கே பியோன் வேலை ஒன்று காலியாக இருக்கிறதாக கேள்விப்பட்டேன்," என்றான் முத்து.

"ஆமாம் இருக்கிறது," என்றார் தலைமை ஆசிரியர்.

"அந்த வேலையை எனக்குத் தந்தீர்கள் என்றால் எனக்குப் பெரிய உதவியாக இருக்கும்," என்றான்.

"நீ என்ன படித்திருக்கிறாய்?" என்று கேட்டார் தலைமையாசிரியர்.



"ஐயா! எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் எந்த வேலை சொன்னாலும் செய்வேன்," என்றான் முத்து.

தலைமையாசிரியருக்குக் கோபம் வந்தது.

"முதலில் நீ வெளியே போ; உனக்கு வேலையும் இல்லை, ஒன்றும் இல்லை," என்று கத்தினார்.

முத்துவும் பயந்து போய் வெளியேறினான். ஆனால் அந்தச் சம்பவம் அவனது மனதை விட்டு அகலவில்லை.

'எழுதப்படிக்கத் தெரியாவிட்டால் என்ன? நான் மனிதன் இல்லையா? எந்த வேலையானாலும் நான் செய்ய மாட்டேனா?' என்று நினைத்து அவன் மனம் குமுறியது.

அந்தக் குமுறல் நாளடைவில் வெறித்தனமானது.

'வாழ்க்கையில் என்னாலும் முன்னேற முடியும்' என்ற வைராக்கியம் அவன் மனதில் இறங்கியது.

தான் சிறிது சிறிதாக சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொண்டு ஒரு பெட்டிக்கடை வைத்தான்.



இரண்டு வருட கடின உழைப்பில் அவனது பெட்டிக்கடை, சற்று பெரிய கடையாக மாறியது.

ஐந்து ஆண்டுகள் ஓடின. அந்த ஊரின் மொத்த வியாபாரியானான் முத்து.

கடின உழைப்பின் மூலம் அவனிடம் செல்வம் குவிந்தது.

மேலும் பத்தாண்டுகளின் பின் பணத்தைப் பல வியாபாரங்களில் முதலீடு செய்து பெரும் கோடீஸ்வரன் ஆனான்.

ஒரு நாள் அவனுக்கு பியோன் வேலை தர மறுத்த தலைமையாசிரியர் வேறு சிலருடன் அவனது வீட்டிற்கு வந்தார்.

அவனை யாரென்று அடையாளம் காண தலைமையாசிரியரால் முடியவில்லை. ஆனால் முத்துவிற்கு அவர் யார் என்று தெரிந்து விட்டது. அவன் அவர்களை வரவேற்று உபசரித்தான்.

"சொல்லுங்கள்! என்னைப் பார்க்க என்ன விஷயமாக வந்தீர்கள்?" என்று கேட்டான்.

"பெருந்தகையீர்! எனது பெயர் சண்முகசுந்தரம். நமது பாடசாலையில் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவன். இவர்களும் அந்தப் பாடசாலையில் ஆசிரியர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்கள் தான். நாங்கள் கூட்டாகச் சேர்ந்து நமது பாடசாலைக்கு ஒரு விஞ்ஞான ஆய்வு கூடம் கட்ட உத்தேசித்துள்ளோம். அதற்கான நிதி நிலமை சரியில்லை. தங்களிடம் இதற்காக நன்கொடை பெற வந்துள்ளோம்." என்றார் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்.

ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தான் முத்து.


அதைப் பெற்றுக் கொண்ட தலைமை ஆசிரியர் மிகவும் மகிழ்ந்து போய், முத்துவிற்கு நன்றி தெரிவித்தார்.

அப்போது முத்து தான் பியோன் வேலை கேட்டு அவரிடம் வந்ததையும், அவர் அன்று தன்னை இழிவாகப் பேசவில்லையானால் தான் இந்த நிலைக்கு வந்திருக்கமாட்டேன் என்று தெரிவித்தான்.

இதைக் கேட்ட தலைமையாசிரியர் முத்துவின் முயற்சியைப் பாராட்டி அவனிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

## வாரம் ஒரு நாடு

### இந்தியா



எமது அயல் நாடான இந்தியா மிகப் புராதன பண்பாட்டுச் சிறப்பு வாய்ந்தது. பாரதம் என்பது இதன் பண்டையப் பெயர்.

**பரப்பளவு:** 3,280,500 சதுர கிலோ மீற்றர் (1,270,000 சதுரமைல்)

**மக்கள் தொகை:** 800,000,000.

**தலைநகர்:** புது தில்லி

**அரசியல்:** பல்வேறு இராச்சியங்களாகச் சின்னாபின்னப்பட்டுக்கிடந்த இந்நாட்டின் மீது மத்திய கிழக்கு மொகலாய மன்னர்களினதும் ஐரோப்பிய நாடுகளினதும் படையெடுப்புகள் பல தடவைகள் இடம்பெற்றன. இறுதியாக ஆங்கிலேயர் ஒன்றரை நூற்றாண்டுகள் ஆட்சி செலுத்திய காலத்தில் பெரும்பாலான இராச்சியங்களை ஒன்று படுத்தி ஏக இந்தியா என்றாக்கி ஆட்சி செலுத்தினர்.

அந்நியரிடமிருந்து நாட்டை மீட்டெடுக்க மகாத்மா காந்தி அடிகளின் தலைமையில் சாத்வீகப் போராட்டங்கள் நடைபெற்றன. 1947 ஆகஸ்ட் 15ல் சுதந்திரம் கிடைத்தது. குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டு பாராளுமன்ற ஜனநாயக முறையில் ஆட்சி நடைபெறுகிறது. இன-மொழி ரீதியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டு மாநில சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது.

**மொழி:** இந்தி மொழி பேசுவோர் தொகையே அதிகம். பிரேதச மொழிகளாக 14 மொழிகள் உள்ளன. இவை தவிர வேறு இனமக்களும் தங்களுக்குரிய மொழிகளைப் பேசுகின்றனர். ஆங்கிலம் பரவலாகப் பேசப் படுகிறது.

**மதம்:** இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் பல மதங்களும் உள்ளன.

**பொருளாதாரம்:** நடுத்தர மக்களை அதிகமாகக் கொண்டுள்ள இந்தியாவின் பிரதான உற்பத்தி விவசாயத்துடன் தொடர்புடையது. நெல், கோதுமை மற்றும் சகல தானியங்களும் பருத்தி முதலான உப விளை பொருள்களும் விளைகின்றன.


அபிவிருத்தியடைந்த பல நாடுகளின் ஒத்தாசையுடன் எந்திர சாதனங்களும் போக்குவரத்து வாகனங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மித மிஞ்சிய பண வசதியுடையோர் இருப்பது போல் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வோரின் தொகையும் அதிகம்.

பிரதேச சுயாட்சி வழங்கப்பட்டிருப்பதனால் அந்தந்தப் பிரதேசங்களில் கலைகள் பண்பாட்டுச் சிறப்பு குன்றாமல் வளர்க்கப்படுகின்றன. இசை-நடனத்துறையில் இந்தியா முன்னணியில் நிற்கிறது.

பண்டைய நாகரிகத்தைப் பறைசாற்றும் சிற்பம்,சித்திரம் ஆகியன இன்றும் பேணிப் பாதுகாத்து வைக்கப் படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.11.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 117
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 114

பரிசுக்குரியவர்:
பி.எம். மாஸ்றுன்,
அல்-ஹிதாயா வித்தியாலயம், மீராவோடை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ப.்.ஸ்லுபாரிஸா ஜமால், இல. 65/11, பள்ளிவாசல் வீதி, ராஜகிரிய. | க. யோகநாதன், யோகம தமிழ் வி., தெஹியோவிட்ட. |
| சரீப் எம். இன்ஸாப், புதிய பாலமுனை, காத்தான்குடி | சி. ரிஷீந்தன், ரோ. க, தமிழ் வித்தியாலயம், வத்தளை. |
| மொஹமட் சுஹைர் மு/ஆண்கள் வித்தியாலம், கட்டுகொடை, காலி | பா. பாலரஞ்சனி கிராள்லி, தமிழ் பா, அக்கரப்பத்தனை. |
| எம்.ஏ. நஸ்லியா, மருகொன, உக்குவெளை | அன்ரு ராஜன், புனித அந்தோனியார் கல்லூரி.வத்தளை |
| செல்வன்-முஹமட் மின்ஹாஜ், சென்/ மேரிஸ் கல்லூரி, நாவலப்பிட்டி. | எஸ். சுரேஸ், பது/ஹப்புத்தளை த.ம.கல்லூரி,. ஹப்புத்தளை |


## உலகில் தமிழ் பேசும் மக்கள் தொகை



| நாடு | மக்கள் தொகை |
|---|---|
| 1.தமிழ்நாடு | 4,14,52,000 |
| 2.இந்தியாவின் பிறமாநிலங்கள் | 1,00,00,000 |
| 3.இலங்கை. | 38,00,000 |
| 4.மலேஷியா | 18,00,000 |
| 5.பர்மா | 3,00,000 |
| 6.ரியூனியன் | 2,50,000 |
| 7.சிங்கப்பூர் | 2,20,000 |
| 8.மொராக்கோ | 1,50,000 |
| 9.இங்கிலாந்து | 1,00,000 |
| 10.பிரான்ஸ் | 1,00,000 |
| 11.அமெரிக்கா | 60,000 |
| 12.கனடா | 52,000 |
| 13.இந்தோனேசியா | 50,000 |
| 14.சௌதி அரேபியா | 34,000 |
| 15.மார் டானிங் | 15,000 |
| 16.கென்யா | 15,000 |
| 17.ஐக்கிய அரபு குடியரசு | 10,000 |
| 18.பிலிப்பைன்ஸ் | 7,000 |
| 19.தென்னாபிரிக்கா | 6,600 |
| 20.சீனா | 6,000 |
| 21.பிரெஞ்சு கயானா | 5,500 |
| 22.தாய்லாந்து | 5,000 |
| 23.இத்தாலி | 5,000 |
| 24.ருஷ்யா | 3,000 |
| 25.தென் வியட்நாம் | 3,000 |
| 26.குவாடி லோப் | 3,000 |
| 27.தான்சானியா | 3,000 |
| 28.ஜப்பான் | 1,000 |
| 29.எத்தியோப்பியா | 800 |
| 30.உகண்டா | 500 |
| 31.எகிப்து,தென்கொரியா,செனகல் முறையே- | 500,500,500. |

தொகுப்பு-கந்நப்பெருமாள் நிமலதாசன்,மட்/மாங்காடு

## யார் இவர்?



இது ஒரு அரிய படம்.

யார் இவர்தெரியுமா? இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக்கொடுப்பதில் முன்னின்றவர். சத்தியத்தை நம்புங்கள் என்று சொன்னவர். இப்போது புரியவில்லையா? மகாத்மா காந்திதான் இவர். தென் ஆபிரிக்காவில் காந்தி இருந்தபோது அங்கு இந்திய ஆம்புலன்ஸ் சேவையை நடத்தினார். ஆம்புலன்ஸ் பிரிவில் ஒரு அணித் தலைவராக சீருடையுடன் தோற்றமளிக்கிறார் காந்தி. (சின்ன வயதில் காந்தி ரொம்ப அழகுதான்!) 1900ம் ஆண்டளவில் எடுக்கப்பட்ட படம்தான் இது.

## விடுகதைகளும் விடைகளும்

1.பலாபலன்களுக்கு ஒத்தசொல் ஒன்றையும் உறுப்பிக்களில் ஒன்றின் பெயரையும் இணைத்தால் படத்தின் பெயர் ஒன்று வரும்-அந்தப் படம் என்ன?
2.அழத்தெரிந்தவன் ஆனால் சிரிக்கத்தெரியாதவன்-யார் அவன்?
3.கீழே ஒருவீடு மேலே இருவீடுகள் அது என்ன?
4. பிறப்பு உள்ளவன் இறப்பு இல்லாதவன்-யார் இவன்?
5.உருவம் கறுப்பு-உரித்தால் தும்பு-உண்டால் கசப்பு-அது என்ன?
6.நிறம் ஒன்றையும் மண்ணுக்கு ஒத்த சொல் ஒன்றையும் இணைத்தால் ஒரு ஊரின் பெயர் வரும்.
7.இளமையில் நந்தவனம் முதுமையில் பாலைவனம் அது என்ன?
8.உணவு முடிந்தவுடன் ஓரம் கட்டுவான்-அவன் யார்?
9.பார்த்தால் ஒரு வீடு, இருவர் இருக்கும் வீடு, உடைத்தால் கட்டமுடியாத வீடு, அது என்ன?
10.ஐம்பது சதத்துக்கு வாங்குவார்கள், இருவண்டில்களில் ஏற்றுவார்கள், மிச்சமும் வைத்திருப்பர்கள், அது என்ன,

### விடைகள்

1. கைராசி 2. கண். 3. வாய்.மூக்கு
4. தண்ணீர் 5. பனங்காய்
6. வெள்ளைமணல் 7. தலைமுடி
8. பேனை 9. முட்டை 10. மூக்குப்பொடி

தொகுப்பு: ஏ.எச்.எம்.சிஹாம். மட்/அல்ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி.05

## நாலு செய்திகள்

பாலின் நிறம் வெள்ளை. ஆனால் திபெத்தில் உள்ள யாக் என்னும் எருமையின் பால் மட்டும் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

உலகில் மிகவும் வெப்பமான இடம்-வட ஆபிரிக்காவிலுள்ள அசிசியா என்ற இடமாகும் இங்குள்ள வெப்பநிலை 136 பாகை பரனைட்.

உலகின் மிகவும் ஆழமான சுரங்கம்-தென் ஆபிரிக்காவிலுள்ள ரொபின்சன் டீப் என்பதாகும் ஆழம் 10000 அடி.

உலகில் மிகவும் பயங்கரமான ஆறு ஐக்கிய அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள கொலரடோ. இதன் நீளம் 1700 மைல் மணிக்கு 30 மைல் வேகம். **எஸ். நாகராஜன் காரைதீவு.**

# விலை உயர்ந்த குற்றம்

## பட்டுக்கோட்டை பிரபாகர் 10

பரிச்சயமானவர்கள் போல அறைகள் இருக்கும் பிளாக்கில் நடந்து, ஒரு அறையின் கதவைத் தட்டி, "எக்ஸ்யூஸ் மீ, இன்றைய பேப்பர் இருக்கிறதா? ஒரே ஒரு விசயம் ரெஃபர் செய்ய வேண்டும்."

பேப்பர் நீட்டப்பட...

"இது ஹோட்டலில் போடப்பட்ட பேப்பரா?"

"ஆமாம்"

அதில் குட்மானிங்கும் இல்லை. அறை எண்ணும் இல்லை. ஹோட்டலின் பெயர் மட்டும் கறுப்பில் ரப்பர் ஸ்டாம்ப் போடப்பட்டிருந்தது.

இது இல்லை என்று புறப்பட்டு அடுத்த ஹோட்டல்.

இந்த ரீதியில் நான்காவது ஹோட்டலாக ஹோட்டல் உத்சவ் வந்து ஓசி வாங்கின பேப்பரில் பச்சை நிற ரப்பர் ஸ்டாம்ப்பில் குட் மானிங்கையும், வட்டமிடப்பட்ட அறை எண்ணையும் பார்த்து, "இதே தான்" என்றார் பார்க்கர் ஸ்மித். பிறகு மார்ட்டின் காதருகில், "ரிஷப்ஷன் சென்று போர்டில் 417 இல் என்ன பெயர் எழுதியிருக்கிறது என்று பார்த்துக் கொள். பிறகு அந்தப் பெயரைச் சொல்லி அவர் இருக்கிறாரா என்று கேள். நான் வெளியில் காத்திருக் கிறேன்" என்றார்.

பார்க்கர் ஸ்மித் வெளியே பார்க்கிங் பகுதியில் பிரௌன் நிற அம்பாஸிடர் இருக்கிறதா, என்று கேஷுவலாகப் பார் வையிட்டுக் கொண்டே நடக்க...... மார்டின் வந்தான்.

"சார், சிக்கந்தர், பெங்களூர் என்று போட்டிருக்கிறது. விசாரித்தேன் அறையில் இல்லை. இன்னும் ஒரு மணி நேரத்தில் வருவேன் என்று தகவல் சொல்லி விட்டுப் போய் அரை மணியா கிறது."

"வெரிகுட், மார்டின் எனக்கு அவன் முகம் தெரியும். அவன் காரின் நிறம் பிரௌன். நான் ஒரு மைக்ராஃபோன் தருகிறேன். ஒவ்வொரு அறைவாசலிலும், மிதியடி போட்டிருக்கிறார்கள். இந்த பட்டன் சைஸ் சாதனத்தை நானூற்றி பதினேழு வாசலில் உள்ள மிதியடிக்கு அடியில் போட்டு விட்டு வா. கதவடியில் இருக்கும் நூலளவு இடைவெளி போதும். உள்ளே பேசும் நுண்ணிய, ரகசியப் பேச்சுக்களைக் கூட சேகரிக்கும். நாம் நம் காரில் அமர்ந்து கொண்டு கேட்கலாம்."

பார்க்கர் ஸ்மித் கொடுத்த வயர்லெஸ் மைக்ராஃபோனை எடுத்துக் கொண்டு மார்ட்டின் நழுவ... காரில் வந்து அமர்ந்து கொண்டார். கொஞ்ச நேரத்தில் மார்ட்டினும் வந்து சேர்ந்து கொண்டான், "சொன்னபடி வைத்துவிட்டேன்."

இருவருமாகக் காத்திருந்தார்கள். சற்று நேரத்தில் ஆட்டோவில் வந்திறங்கினான் சுபா.

"மார்ட்டின், அதோ ஆட்டோவில் இருந்து இறங்கிப் போகிறான் பார். அவன்தான்" என்ற பார்க்கர் ஸ்மித் தன் சூட்கேஸ் திறந்து மைக்ரோவேவ் ரிசீவரை ஆன் செய்து வால்யூமைக் குறைத்து வைத்தார்.

அடுத்த நிமிடத்தில் 417ன் கதவு திறக்கப்படும் சத்தம். சுபாவின் அலட்சிய மான விசில் சத்தம் எல்லாம் கேட்டது. பொறுமையாக காத்திருந்ததில் 17வது நிமிடம் அறைக்குள் டெலிபோன் ஒலிக்கும் சத்தம் கேட்டு... தொடர்ந்து...

"ஹலோ சிக்கந்தர்" என்று குரல். "என்ன ஷேட்டு? முடிவுக்கு வந்துட்டியா? சந்தோஷம். அழுவாதேய்யா. எனக்கு அஞ்சி லட்சம் கொடுத்துட்டு உன் பார்ட்டி க்கிட்டே அதுக்கு மேலதான் கறக்கப் போறே. எனக்குத் தெரியும். ரைட்டு. அப்புறம்? பையன் தானே,. பத்திரமா இருக்கான். நம்புய்யா. ஒப்படைச்சிட்டுப் பணம் வாங்கிக்கறேன். இன்னிக்கு ராத்திரி பத்து மணி சுமாருக்கு கார்ல புறப்பட றேன். ஆறு மணி நேரம் தூக்கத்துக்கு. அதையும் சேர்த்து முப்பது மணி நேரப் பயணம். நாளைக்கு பூரா பயணம் செஞ்சி நாளன்னிக்கு அதிகாலைல வந்துடு வேன். ஊர் எல்லையில காரோட ஆள் அனுப்புறியா? இது நல்ல ஐடியா! பணத்தையும் அனுப்பிச்சிடு சேட்டு. பையனை கார்மாத்தி விட்டுடறேன். நம்ம காரு அம்பாசிடரு. பிரௌன் கலரு. மாட்டிக்கிட்டு வரப்போற நம்பர் டி.எம்.க்யூ. 7171. சரி. நீ அனுப்புற கார் நம்பர் என்ன? இரு குறிச்சிக்கறேன். சந்தன கலர் ஃபியட்டா? சரி, நம்பர் எம்.எஸ்.ஆர் 4244? ரைட். கோட் வார்த்தையா? என்ன அது? பயணம் சுகமா? ரைட் நீ சொல்ற கார்ல வர்ற நபர் பம்பாய் அவுட்டர்ல வெள்ளை கர்சீப் ஆட்டி என் காரை நிறுத்துவான். பயணம் சுகமான்னு கேட்பான். அவன் கிட்டே பணம் வாங்கிக்கிட்டு பையனை ஒப்படைச் சிடணும். ரைட். எந்த குழப்பமும் இல்லை. நாளன்னைக்கு அதிகாலை ஒரு நாலு மணிலேர்ந்து வெய்ட் பண்ணச் சொல்லு. அட்வான்ஸ் போக நாலு லட்சம் நீ தரணுமா? சரி. வச்சிடவா?"

இங்கே டேப்பை அணைத்த பார்க்கர் ஸ்மித் பரபரப்பாக, "என்ன பேசினான்? சீக்கிரம் மொழி பெயர்த்துச்" சொல் என்றார்.

மார்ட்டின் வரிவரியாக ஆங்கிலத்தில் சொல்ல.....

பார்க்கரின் முகம் பிரகாசமானது.

"மார்ட்டின், நீ இந்த இடத்தை விட்டு அப்படி இப்படி நகரப்போவதில்லை. அவ்வப்போது சுவிட்சை ஆன் செய்து ஒட்டுக்கேள். பதிவு செய். அவன் எங்காவது புறப்பட்டால் பின் தொடர். நான் டாக்ஸி ஒன்றில் என் ஹோட்டலுக்குப் போகிறேன். சில முக்கியமான ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். ஏதாவது முக்கியமான தகவல் கிடைத்தால் என்னை போனில் தொடர்பு கொள். இந்தா இது ஒரு எலெட்ரானிக் சாதனம். நாம் ஒரு காரைத் தொடர வேண்டுமெனில் அதில் இதன் காந்தப் பகுதியில் மறைவாக ஒட்டி விட்டால் இங்கே திரைப்பகுதியில் இடது, வலது என்று திசைகாட்டுவதோடு, உன் காருக்கும் அந்த காருக்கும் இடையே எவ்வளவு தூரம் உள்ளது, எந்த வேகத்தில் எத்தனை நிமிடம் ஓட்டினால் அதைப்பிடிக்கலாம் என்று அத்தனை தகவல்களும் சொல்லும். அவசியப் பட்டால் உபயோகி."

பார்க்கர் ஸ்மித் காரைவிட்டிறங்கி ஹோட்டல் வாசலில் யாரையோ இறக்கிவிட்ட டாக்ஸியை அழைத்து ஏறிக் கொண்டு, "ஹோட்டல் மரிஜ்ஜுவானா" என்றார்.

◆ ◆ ◆

அறைக்கு வந்த பார்க்கர் ஸ்மித் உடனடியாக கண்ணபிரானைத் தொடர்பு கொண்டு பேசினார்.

"எனக்கு உடனடியாக நான்கு இலட்சம் பணம் வேண்டும்."

"எதுக்குய்யா அவ்வளவு பணம்? வொய் அவ்வளவு மணி?"

"தேவை. ஊர் போகுமுன் தந்து விடுவேன். பிறகு... பம்பாய்க்கு நாளை மாலை விமானத்திற்கு எனக்கும், மார்ட்டி னுக்கும் மட்டும் இரண்டு டிக்கெட்டுக்கள் வேண்டும்."

"யு அன்ட் மாட்டின் ஒன்லி?"

"ஆமாம்."

"ஆனி இங்கே தனியாக இருப்பாளா?"

"வாட்?"

"ஒக்கே. ஒக்கே. டிக்கெட் எடுத்துடறேன். அப்புறம்?"

"பம்பாயில் தங்க ரகசியமான இடம் ஒன்றும், சந்தனகலர் பியட் கார் ஒண்ணும் தேவை."

"பம்பாய்ல ஐ ஹேவ் பிக் பங்களா. சாவி தர்றேன். அப்புறம் சந்தன கலர் ஃபியட்டா? என்னய்யா நீ இப்படி என்னை வேலை வாங்கறே?"

"வாட்?"

"சரி. பம்பாய்ல நம்ம கூட்டாளிங்க இருக்காங்க. ஏற்பாடு செய்றேன். ஃபிரெண்ட்ஸ் சொல்லி டன்! எல்லாம் ஆனிக்குட்டிக் காகத்தான். போதுமய்யா இதுக்கு மேல எதுவும் வேலை சொல்லாதே."

"அந்த ஃபியட்காரில் பொருத்தும் வகையில் எம்.எஸ்.ஆர் 4244 என்று எழுதின ஒரு நம்பர் பிளேட் தயார் செய்ய வேண்டும்."

"இது ஈ.ஸி. செஞ்சிடலாம். இங்கேயே தயார் செஞ்சித் தர்றேன், ஐ கிவ் இட் ஹியர். யு டேக்கு."


"நாளை காலை உங்களை இங்கே எதிர்பார்க்கிறேன்."

"வந்துட்டா போச்சி."

பார்க்கர் ஸ்மித் ஆனியிடம் சில விபரங்கள் சொல்லிவிட்டு மென்த்தால் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார். மோவா யைத் தட்டிக் கொண்டு யோசித்தார்.

பிறகு புறப்பட்டு ஹோட்டல் உத்சவ் வந்த போது ஃபியட்டில் அமர்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தான் மார்ட்டின்.

"என்ன, அதற்குப் பிறகு ஏதாவது தகவல்?"



"ம்கூம். லேசாக குறட்டை சப்தம் கேட்கிறது. உறங்குகிறான் என்று நினைக் கிறேன்."

"இன்று முழுவதும் அவனை விடாமல் பின்தொடர்ந்து ஆக வேண்டும். பையனுடன் அவனை காரில் பம்பாய்க்கு வழியனுப்பி விட்டுத்தான் மறுவேலை. நாம் இருவரும் சேர்ந்து உட்கார்ந்து காத்திருக்க வேண்டாம். இந்தா. இது 'சிக்னல் பார்' என்று பெயர். இதன் இன்னொரு பகுதி என்னிடம் உள்ளது. அரை கிலோ மீட்டர் விட்டத்தில் நான் எங்கிருந்தாலும், இதன் சுவிட்சை அழுத்துவதன் மூலம் என்னை பீப், பீப் என்கிற சப்தத்தில் அழைக்கலாம். நான் ஹோட்டல் எதிரே உள்ள லைப்ரரியில் இருக்கிறேன்.... அவன் தன் அறைக் கதவை திறந்து புறப்படும் ஓசைகள் கேட்டதும் எனக்கு சிக்னல் கொடு. நான் வந்து காரில் ஏறிக் கொள்கிறேன்."

பார்க்கர் ஸ்மித் லைப்ரரிக்குச் சென்று ஒரு தடித்த புத்தகம் எடுத்துக் கொண்டு அமர்ந்து கொண்டார்.

மாலை ஆறு மணிக்கு அவர் பாக்கெட்டுக்குள் பீப்,பீப் என்று ஒலிக்க... மற்றவர்கள் அது கடிகார ஓசை என்று கருதிக்கொள்ள... பார்க்கர் எழுந்து வெளி யேறினார். மார்ட்டினுக்கு அருகில் முன் சீட்டில் அமர்ந்தார்.

ஹோட்டலை விட்டு வெளியேறிய சுபா ஒரு டாக்ஸி அமர்த்திக் கொண்டு சர்வீஸ் ஸ்டேஷன் வந்து, தன் காரை எடுத்துக் கொண்டு புறப்பட...

பின்னாலேயே தொடர்ந்தது மார்ட்டி னின் கார்.

◆ ◆

நேரம் பார்த்தார் ஜீவானந்தம்- 7.50. போன் எடுத்து, ஹலோ இன்ஸ்பெக்டர் நியூட்டன் இருக்காரா? வணக்கம் சார். என்ன சார், என் பையனைக் கண்டு பிடிச்சிங்களா? இல்லை சார். அதான் சொன்னேனே!... நேத்து வந்த போனுக்கப் புறம் அவங்ககிட்டேர்ந்து எந்த வகை யிலையும் தகவல் இல்லை. சீக்கிரம் கண்டு பிடிங்க சார். ஷ்யூர். எப்ப தகவல் வந்தாலும் உடனே சொல்றேன்" என்று வைத்தார்.

ஐந்து இலட்சம் கட்டின பேப்பர் பார்சலை தன் அருகில் கிடத்திவிட்டு, காரை ஸ்டார்ட் செய்து சாலைக்கு வந்தபோது மணி எட்டு.

மனம் போன போக்கில் எல்லாம் காரைத் திருப்பி ஓட்டினார். அநேகமாக அந்த கடத்தல் நபர் என் காரைத் தொர்டந்து கொண்டிருப்பான். எப்போது, எப்படி என்னிடம் இருந்து பார்சலை வாங்கிக் கொள்ளப் போகிறான்?

ஜீவானந்தத்தின் கார் அண்ணா சாலை யில் கலந்து வேகம் பிடிக்க... பின்னால் இடைவெளி விட்டுத் தொடர்ந்த சுபாவின் காரும் வேகம் பிடிக்க... பின்னால் இடைவெளிவிட்டுத் தொடர்ந்த பார்க்கர் ஸ்மித்தின் காரும் வேகம் பிடித்தது. சிக்னலில் ஜீவானந்தத்தின் கார் நின்ற போது அருகில் உரசினது போல நிறுத்தின சுபா, "ஜீவா சார், பார்சலைக் கொடுங்க; சிக்னல் மாறினதும் திரும்பிப் பார்க்காம போங்க. பையன் வந்து சேருவான்" என்று சொல்ல...

ஜீவானந்தம் பார்சல் எடுத்து அடுத்த சுபாவின் கார் ஜன்னலுக்குள் நீட்டி இருக்கையில் போட்டார். சிக்னல் மாறினதும் சொன்னபடி செய்தார். சுபாவின் கார் வேறு திசையில் திரும்ப...

பின்னால் வந்த ஃபியட்டில், "என்ன மார்ட்டின் இது? அவன் என்ன சொன்னான்? இந்தக் காரில் இருந்தவர் சரவணகுமாரின் அப்பா. புகைப்படம் பார்த்தேன். இவர் என்ன பார்சலைப் போட்டார்?"

சுபாவின் காரில் சாமர்த்தியமாகப் பொருத்தின மைக்ரோபோன் வழியாக சுபா பேசியதைக் கேட்ட மார்ட்டின் ஆங்கிலப் படுத்தி, "பம்பாய்க்காரனோடு பேரம் பேசியதும் இல்லாமல் பையனின் அப்பா வையே பிளாக்மெய்ல் செய்து பணம் வாங்கு கிறான் போலிருக்கிறது. தொடர்ந்து சென்றால் இன்னும் விபரங்கள் கிடைக்கும்."

"தொடர்!" என்றார் பார்க்கர்.

சுபாவின் கார் திருவொற்றியூர் சாலையில் விரைந்து சந்தில் புகுந்து செல்வம் வீட்டின் முன் நின்றது. மார்ட்டின் தன் காரை முக்கிய சாலையிலேயே நிறுத்திக் கொண்டான்.

"மார்ட்டின், நான் இருக்கிறேன், நீ நடந்து போ. காரில் வைத்த மைக்ரோபோனை எடுத்து அவன் எந்த வீட்டுக்குள் போகிறானோ அந்த வீட்டின் சுவரில் அல்லது ஜன்னலில் பொருத்திவிட்டு வா"



சுபா கதவு உள்ளே போன நான்காம் வினாடி மார்ட்டின், பார்க்கர் சொன்னபடி செய்து விட்டுத் திரும்பினான்.

சுபா தன் கையில் பேப்பர் பார்சலுடன் நுழைய, விழி விரித்துக் கேட்டான் செல்வம்.

"என்னடா சக்ஸஸ்தானா?"

"பின்னே? இதோ பாரு அஞ்சு இலட்சம். உன் வீட்லயே பத்திரமா வையி. நான் பம்பாயிலேர்ந்து திரும்பினதும் வாங்கிக்கிறேன். எங்கே வைக்கிறே?"

"ஸ்டோர் ரூமில பெரிய அரிசி ட்ரம் இருக்கு. அதுக்குள்ளே வச்சி மேலே அரிசி கொட்டிடறேன். எப்ப வருவே?"

"போறப்ப கார். வர்றப்ப பிளேன். அதனாலே மூணே நாள்ல வந்துடுவேன். என்ன பண்றான் பையன்?"

"யார் முழிக்க விட்டா? உணர்வு வர்றப்பல்லாம் மறுபடி மறுபடி தூங்க வச்சிக்கிட்டுத்தானே இருக்கேன். எப்ப புறப்படறே?"

"இப்பவே இரு.... வெளிலே பார்த் துட்டுவர்றேன். ரெண்டு பேருமா தூக்கிக் கொண்டு போய் பின் சீட்ல வச்சிடலாம்."

அந்த காரியத்தை அவர்கள் செய்து முடிக்க பத்து நிமிடங்களாயின. இங்கே அவர்களின் பேச்சைக்கேட்ட மார்டின், பார்க்கர் ஸ்மித்துக்கு விளக்கம் சொல்ல....

"வெரிகுட், இனி அந்த கார் நேராக ஹோட்டல் உத்சவ் வரும். நீ தொடர வேண்டும் என்று அவசியம் இல்லை. நேராக அவனுக்கு முன்னால்கூட அங்கே போகலாம்."

மார்ட்டின் அதன்படி வந்து காத்திருக்க.....

பிறகு வந்த சுபா கரை நிறுத்தி, நான்கு ஜன்னல்களின் கறுப்பு கண்ணாடி களையும் உயர்த்திப் பூட்டிவிட்டு உள்ளே சென்றான்.

"சார், இந்த நிமிடம் நமக்குத் தேவை யான பையன் இதோ இந்தக் காரின் பின் சீட்டில் கிடத்தப்பட்டு இருக்கிறான். கைப்பற்ற நிமிட நேரம்கூட ஆகாது" என்றான் மார்டின்.

"தெரியும். ஆனால் என் திட்டம் மாறிவிட்டது இப்போது. எப்படியிருந் தாலும் நான் சரவணகுமாரை பம்பாய்க் குக் கொண்டு சென்று தான் ஆக வேண்டும். அந்த காரியத்தை எனக்கு பதிலாக அவன் செய்து தரப் போகிறான். அவ்வளவுதான்."

பத்து நிமிடத்தில் தன் அறையைக் காலி செய்து சூட்கேசுடன் இறங்கி வந்து, பில் செட்டில் செய்து காரில் புறப்பட்டான்.


அவன். காரை நகர எல்லைவரை சென்று வழியனுப்பிவிட்டுத் திரும்பி னார்கள் இவர்கள்.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். ஸ்ரீகுமார்
வயது: 21
முகவரி: 10/15, சவுண்டஸ் பிளேஸ், கொழும்பு 12.
பொழுது போக்கு: கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்: ஏ. அலி அக்பர்
வயது: 25
முகவரி: 6, பதுளை வீதி, வெலிமடை.
பொழுது போக்கு: ரீ.வி, கதைப்புத்தகங்கள்




பெயர்: எஸ். மீனா
வயது: 22
முகவரி: ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க ரோட், 3வது குறுண, நீர்கொழும்பு.
பொழுது போக்கு: டி.வி. பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ். ஜெமிலா
வயது: 18
முகவரி: மாஷாத் நகர், குறிஞ்சாக் கேணி, கிண்ணியா.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், நண்பிகளுடன் அரட்டை.



பெயர்: வி. சதானந்தன்
வயது: 23
முகவரி: BREMGARTNER - STR - 28 8003 ZURICH, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, கிரிக்கெட்.



பெயர்: அகமட் நுஃமான்
வயது: 23
முகவரி: MINISTRY OF INTERIOR BLOCK-1, SABAH-AL-NASSER, KUWAIT
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, புத்தகம்.

பெயர்: எஸ். றோமன் ஜேக்கப்
வயது: 17
முகவரி: ஸ்பிரிங் வூட் எஸ்டேட், இறக்குவானை.
பொழுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். அஸாயிம்
வயது: 21
முகவரி: 163 1/1, ஜும்மா மஸ்ஜித் வீதி, மாளிகாவத்தை, கொழும்பு-10
பொழுது போக்கு: வழமையானவை

பெயர்: வி. லட்சுமி நாராயணன்
வயது: 26
முகவரி: P.O. Box : 56129, RIYADH: 11554 K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, பாடல்கள்.

பெயர்: எம். பைசல்
வயது: 23
முகவரி: 44, முதலாவது ஒழுங்கை, வான் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு, டி.வி.

பெயர்: பிரசாந்த்
வயது: 18
முகவரி: 224, டையக் வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு, டி.வி.

பெயர்: முகமட் அஸ்கர்
வயது: 19
முகவரி: 16, சாஹிரா கல்லூரி வீதி, மாவனல்லை.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்

# 51

# தாய்

## மக்சீம் கார்க்கி

**சூ**ரிய ஒளி நிறைந்த அந்த அறையில் அவனது குரல் மளமளவெனப் பொழிந்தோடியது. இதற்கு முன்பே இது மாதிரி எத்தனையோ கதைகளை கேட்டிருக்கிறாள் தாய். எனினும் அந்தக் கதைகளை சொல்பவர்கள் ஏன் அத்தனை அமைதியோடு ஏதோ தவிர்க்க முடியாத தொன்றைப் பேசுவது போல, அவற்றைக் கூறுகிறார்கள் என்பது மட்டும் அவளுக்கு புரியவில்லை.

"இன்று என் சகோதரி வருகிறாள்" என்றான் அவன்.

"அவளுக்கு கல்யாணமாகிவிட்டதா?"

"அவள் ஒரு விதவை. அவளது கணவன் சைபீரியாவுக்கு கடத்தப்பட்டுச் சென்றான். ஆனால் அவன் அங்கிருந்து தப்பியோடி விட்டான். இரண்டு வருஷங்களுக்கு முன்னால் அவன் ஐரோப்பாவில் காசநோயால் செத்துப்போனான்"

"அவள் உங்களைவிட இளையவளா?"

"ஆறுவருசம் மூத்தவள். நான் அவளுக்கு மிகவும் கடமைப்பட்டவன். அவள் இங்கு வந்து சங்கீதம் வாசிப்பது வரை நீங்கள் பொறுத்திருங்கள். அது அவளுடைய பியானோ வாத்தியம் தான். பொதுவாகச் சொன்னால் இங்குள்ள பொருள்களில் பெரும்பாகம் அவளுடையவைதாம். புத்தகங்கள் மட்டுமே என்னுடையவை."

"அவள் எங்கு வசிக்கிறாள்?"

"எங்கும்தான்" என்று சிறு புன்னகையோடு பதில் சொன்னான் அவன். "எங்கெல்லாம் ஒரு துணிச்சலான ஆசாமி தேவையோ அங்கெல்லாம் அவள் இருப்பாள்."

"அவள் இந்த மாதிரி- இந்த மாதிரி வேலைக்குக் கூடச் செல்கிறாளா?"

"ஆமாம். நிச்சயமாய்!" என்றான் அவன்.

அவன் சீக்கிரமே போய்விட்டான்; தாய் 'இந்த மாதிரி வேலை'யைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள். அந்த வேலைக்காக ஒவ்வொரு நாளும் அமைதியோடும் விடா முயற்சியோடும் தங்களைத் தாமே தத்தம் செய்து கொள்ளும் மனிதர்களைப் பற்றி நினைக்கும் போது, ஏதோ ஒரு மலையின் முன்னே இரவு வேளையில் நிற்பது போல் அவளுக்குத் தோன்றும்.

மத்தியானத்துக்கு மேல், நெட்டையான அழகிய பெண் ஒருத்தி வந்தாள். அவள் கரியநிற உடை யுடுத்தியுருந்தாள். தாய் கதவைத் திறந்தவுடன் அவள் தன் கையிலிருந்த மஞ்சள் நிறமான சிறு பையைக் கீழே நழுவ விட்டுவிட்டு, தாயின் கையைப் பற்றிப் பிடித்தாள்.

"நீங்கள் தானே பாவெல் மிகாய்லவிச்சின் தாய்?" என்று கேட்டாள்.

"ஆம், என்று பதிலுரைத்தாள் தாய். எனினும் அந்தப் பெண்ணின் அழகிய கோலத்தைக் கண்டது முதல் அவளுக்கு என்னவோ போலிருந்தது.

"நீங்கள் எப்படி இருப்பீர்களென்று கற்பனை பண்ணியிருந்தேனோ, அப்படியே இருக்கிறீர்கள். நீங்கள் இங்கு வந்து வசிக்கப் போவதாக என் தம்பி எழுதியிருந்தான்" என்று அவள் கூறிக்கொண்டே, கண்ணாடி யின் முன் நின்று கொண்டு தொப்பியைக் கழற்றினாள். "நான் வெகு காலமாகப் பாவெல் மிகாய்லவிச்சோடு நட்புரிமை கொண்டவள். அவன் உங்களைப் பற்றிக் கூறியிருக்கிறான்."

அவளது குரல் உள்ளடங்கியிருந்தது. மேலும் அவள் மெதுவாகத்தான் பேசினாள். அவளது நடமாட்டங்கள் மட்டும் விறுவிறுப்போடும் வேகத்தோடும் இருந்தன. அவள் தனது சாம்பல் நிறக் கண்களால் புன்னகை புரிந்தாள். அதில் வாலிப பாவமிருந்தது. அவனது கன்னப் பொறியில் சிறு சிறு சுருக்க ரேகைகள் விழுந்திருந்தன. அவளது சிறு காதோரங்களுக்கு மேல் இளம் நரை ரோமங்களும் மின்னிக்கொண்டிருந்தன.

"எனக்குப் பசிக்கிறது. கொஞ்சம் காப்பி குடித்தால் தேவலை" என்றாள் அவள்.

"அதற்கென்ன, தயார் செய்கிறேன்" என்று பதிலுரைத்தாள் தாய். பதில் கூறிவிட்டு அவள் அலமாரிக்குச் சென்று காப்பிச் சட்டியை எடுத்துக்கொண்டே கேட்டாள்;

"என்னைப்பற்றி பாவெல் சொன்னதாகவா சொன்னீர்கள்?"

"எவ்வளவோ சொல்லியிருக்கிறான்."

அந்த மாது ஒரு தோல் சிகரெட் பெட்டியைத் திறந்து ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தாள்.

"நீங்கள் அவனைப்பற்றி ரொம்பவும் பயந்து போயிருக்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே அவள் அந்த அறைக்குள் உலவினாள்.

சாராய அடுப்பில், காப்பிச் சட்டிக்குக் கீழாக எரியும் நீலநிறத் தீ நாக்குகளைப் பார்த்துக்கொண்டே லேசாகப் புன்னகை புரிந்தாள் தாய். அந்தப் பெண்ணின் முன்னிலையில் ஏற்பட்ட சங்கட உணர்ச்சியை விழுங்கி உள்ளடக்கிய அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

'அப்படியென்றால், அவன் அவளிடம் என்னைப்பற்றிக் கூறியிருக்கிறான், நல்ல பிள்ளை' என்று தனக்குத்தானே நினைத்துக் கொண்டு, பிறகு மெதுவாகச் சொன்னாள்:

"ஆமாம். அது ஒன்றும் சாமானியமான சிரமம் அல்ல. ஆனால்,முன்புதான் அந்தச் சிரமம் எனக்குப் பெரிதாய் இருந்தது. இப்போது அவன் தன்னந் தனியாக இல்லை என்பதால் எனக்குக் கொஞ்சம் நிம்மதி."

அந்தப் பெண்ணின் முகத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டே தாய் அவளது பெயரைக் கேட்டாள்.

"சோபியா"என்றாள் அந்தப் பெண்.

தாய் அந்தப் பெண்ணைக் கூர்ந்து பார்த்தாள். அந்தப் பெண்ணிடம் ஏதோ ஒரு பரபரப்பு-அதீதமான அவசரமும் துணிவும் கொண்ட பரபரப்புக் காணப்படுவதாகத் தோன்றியது.

"இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் அவர்கள் அதிக நாள் சிறையில் இருக்கக்கூடாது என்பது தான்"என்று தீர்மானமாகச் சொன்னாள் அந்தப் பெண். "அவர்கள் மட்டும் விசாரணையைச் சீக்கிரமே நடத்தினால்! அவர்களை நாடு கடத்திவிட்டவுடனேயே,பாவெல் மிகாய்லவிச் அங்கிருந்து தப்பியோடி வருவதற்கு நாம் உடனடியாக ஏற்பாடு செய்து தருவோம். அவன் இப்போது இங்கு அவசியம் இருந்தாக வேண்டும்."

தாய் வியந்துபோய் சோபியாவைப் பார்த்தாள். சோபியா தனது சிகெரட் கட்டையை எங்கு போடுவது என்பதற்காக அங்குமிங்கும் இடம் பார்த்துக் கொண்டிருந்தாள். கடைசியாக, அவள் அந்தச் சிகரெட் கட்டையை ஒரு பூந்தொட்டியிலிருந்த மண்ணில் புதைத்து அமுக்கினாள்.

"ஐயோ! அது பூக்களைக் கெடுத்து விடுமே!" என்று தன்னையறியாமல் கூறினாள் தாய்.

"மன்னிக்க வேண்டும்"என்றாள் சோபியா. "நிகலாயும் இதே விஷயத்தைத்தான் எனக்கு எப்பொழுதும் சொல்லுவான்." அவள் அந்தச் சிகரெட் கட்டையை அதிலிருந்து எடுத்து, ஜன்னலுக்கு வெளியே எறிந்தாள்.

இதைக் கண்டவுடனேயே தாய் மீண்டும் ஒரு சங்கட உணர்ச்சியுடன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே ஒரு குற்ற உணர்வுடன் சொன்னாள்:



"என்னை மன்னியுங்கள்! நான் வேண்டுமென்று அப்படிச் சொல்லவில்லை. என்னையறியாமலே வாய்வந்து விட்டது. உங்களுக்குப் போதிக்க நான் யார்?"

"நான் அசுத்தம் பண்ணினால், போதித்தால் என்னவாம்?" என்று தோளை உலுக்கிக் கொண்டே கேட்டாள் சோபியா. "சரி, காப்பி தயாராய் விட்டதா? ரொம்ப நன்றி. ஒரே ஒரு கோப்பைதானா? உங் களுக்கு ஒன்றும் வேண்டாமா?"

திடீரென்று அவள் தாயின் தோளைப் பற்றிப் பிடித்து அவளைத் தன்னருகே இழுத்து அவளது கண்களை ஆழ்ந்து நோக்கிக் கொண்டே கேட்டாள:

"நீங்கள் என்ன வெட்கப் படுகிறீர்களா?"

தாய் லேசாகப் புன்னகை புரிந்தாள்.

"இப்பொழுதுதான் சிகரெட் கட்டையைப் பற்றி உங்களிடம் சொன்னேன். அதற்காக நான் வெட்கப்படுகிறேனா என்று கேட்கிறீர்களா?" என்றாள் தாய். தனது வியப்புணர்ச்சியை மூடி மறைக்காமல் அவள் மீண்டும் ஏதோ கேட்கும் பாவனையில் பேசினாள்:

"நேற்றுத்தான் நான் இங்கு வந்தேன். அதற்குள்ளாக இதை என் சொந்த விடு போலவே கருதி நடந்து வருகிறேன். எதற்கும் அஞ்சாமல், என்ன சொல்லுகிறோம் என்பதே தெரியாமல்....."

"அப்படித்தானிருக்க வேண்டும்" என்றாள் சோபியா.

"என் தலையே சுற்றுகிறது. நானே எனக்கு அன்னியமாய்ப் போய்விட்டதுபோல் தோன்றுகிறது" என்று மேலும் பேசத் தொடங்கினாள் தாய். "முன்பெல்லாம் ஒரு நபரிடம் நான் என் மனதிலுள்ள விஷயத்தை வெளியிட்டுக் கூறத்துணிவதென்றால் அதற்கு எனக்கு அந்த நபரோடு ரொம்ப நாள் பழக்கம் வேண்டும். ஆனால்,இப்போதோ என் இதயம் எப்போதும் திறந்து கிடக்கிறது. எனவே இதற்குமுன் நான் எண்ணிப் பார்த்திராத விஷயங்களைக்கூட, திடீரெனச் சொல்லித் தீர்த்துவிடுகிறேன்."

சோபியா மீண்டும் ஒரு சிகரெட்டை எடுத்துக் கொண்டே தனது சாம்பல் நிறக் கண்களில் மிருதுவான ஒளிததும்பத் தாயைப் பார்த்தாள்.

"அவன் தப்பிச் செல்வதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறுகிறீர்கள். ஆனால் அப்படி ஓடிவந்த பிறகு அவனால் எப்படி வாழ முடியும்?" என்று தன் மனத்துக்குள் அழுத்திக் கொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டு, மனப் பாரத்தைக் குறைத்துக் கொண்டாள் தாய்.

"அது ஒன்றும் பிரமாதமில்லை" என்று கூறிக்கொண்டு இன்னொரு கோப்பை காப்பியை ஊற்றிக்கொண்டாள் சோபியா. "இப்படி ஓடி வந்தவர்களில் எத்தனையோ பேர் எப்படி வாழ்கிறார் களோ, அப்படியே அவனும் வாழ்வான். நான் அப்படி ஒரு ஆசாமியைச் சந்தித் தேன்; அவனை அவன் வசிக்க வேண்டிய இடத்துக்கு அழைத்துச் சென்றேன். அவனும் நமக்கு இன்றியமையாத ஆசாமிதான். அவனை ஐந்து வருஷகாலத்திற்கு நாடு கடத்தினர். ஆனால் அவன் அங்கு மூன்றரை மாதம்தான் காலம் தள்ளினான்."

தாய் அவளது முகத்தையே சிறிது நேரம் பார்த்தாள். பிறகு புன்னகை புரிந்தாள். அதன் பின் தலையை அசைத்துக் கொண்டே மெதுவாகச் சொன்னாள்:

"மே தினக் கொண்டாட்டம் என்னிடம் ஏதோ ஒரு மாறுதலை உண்டாக்கி விட்டது போல் எனக்குத் தோன்றுகிறது. அது என்ன என்பதை என்னாலேயே கண்டு பிடிக்க முடியவில்லை. நான் என் னவோ ஒரே சமயத்தில் இரண்டு பாதை களில் சென்று கொண்டிருப்பது போல் ஒரு பிரமை. சமயங்களில் எல்லாமே எனக்குப் புரிந்து விட்டது போல் ஒரு பிரமை தோன்றுகிறது. மறுகணம் ஒரே மங்கல்; கண்முன் இருள் மண்டிக் கவிகிறது. உதாரணமாக உங்களைப் பார்க்கிறேன். நீங்கள் ஒரு பெரிய இடத்துப் பெண். இந்த வேலைக்கு வருகிறீர்கள்..... பாவெலை தெரிந்திருக்கிறீர்கள், அவனைப் பற்றி நல்லபடியாய்ப் பேசுகிறீர்கள். அதற்காக நான் உங்களுக்கு நன்றி கூற வேண்டும்."

"நன்றி பெறத் தகுதியுடையவர் நீங்கள் தான்" என்று கூறிச் சிரித்தாள் சோபியா.

"நான் என்ன செய்து விட்டேன்? அவனுக்கு இதையெல்லாம் கற்றுக் கொடுத்தது நானில்லையே" என்று பெருமூச்செறிந்தாள் தாய்.

சோபியா சிகரெட்டை கோப்பைத் தட்டில் நசுக்கி அணைத்தாள். அவள் தலையை அசைத்த அசைப்பில் அவளது பொன்னிற முடி, உலைந்து நழுவி, அவளது இடை வரையிலும் வந்து விழுந்து கற்றை கற்றையாகப் புரண்டது.

"சரி, இந்த அலங்காரத்தை யெல்லாம் களைவதற்கு நேரமாகிவிட்டது"என்று கூறிக்கொண்டேஅவள் எழுந்தாள், எழுந்து வேளியே சென்றுவிட்டாள்.

• • •

**நி**கலாய் மாலையில் திரும்பி வந்தான். அவர்கள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, சோபியா சிரித்துக் கொண்டே, அவள் எப்படி தேசாந்திர சிட்சையிலிருந்து தப்பியோடி வந்த மனிதனைச் சந்தித்தாள், அவனை எப்படி மறைத்து வைத்தாள், அவள் எப்படி ஒற்றர்களுக்காகப் பயந்து நடுங்கினாள், வழியில் பார்க்கின்ற ஒவ்வொருவரையுமே ஒற்றர்கள் என்று அவள் எப்படிக் கருதினாள், ஓடி வந்த மனிதன் எப்படி நடந்துகொண்டான் என்பன போன்ற விவரங்களை யெல்லாம் சுவாரசியத்தோடு விளக்கிச் சொன்னாள். அவளது குரலில் ஒரு பெருமைத் தொனி ஒலிப்பதாகத் தாய்கண்டறிந்தாள்.ஒரு தொழிலாளி தான் ஒரு சிரம சாத்தியமான காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்ததைப்பற்றி அடையும் பெருமித உணர்ச்சி போலிருந்தது அது.

இப்போது அவள் ஒரு சாம்பல் நிறவேனிற்கால நீள் அங்கி அணிந்திருந்தாள். அந்த கவுன் அவளை மேலும் சிறிது நெடியவளாகக் காட்டியது. அவளது கண்கள் கருமை எய்தியன போலவும் அவளது நடமாட்டங்கள் மிகுந்த அடக்கம் கொண்டன போலவும் தோன்றின.

"உனக்கு இன்னோரு வேலை காத்திருக்கிறது,சோபியா" என்று சாப்பிட்டு முடிந்தவுடன் கூறினான் நிகலாய். "விவசாயிகளுக்காக நாம் பத்திரிகை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். சமீபத்தில் நடந்த கைதுகளால்,அப்பத்திரிகையை வினியோகித்து வந்த மனிதனோடு நமக்கிருந்த தொடர்பு விட்டுப் போய்விட்டது. அவனைக் கண்டுபிடிப்பதில் பேலகேயா நீலவ்னா மட்டும்தான் நமக்கு உதவக் கூடியவள். நீ அவளைக் கிராமத்துக்கு ஒரு முறை உன்னோடு அழைத்துச் செல்ல வேண்டும்; கூடிய சீக்கிரம்."

"ரொம்ப சரி" என்று பதில் கூறிக் கொண்டே சிகரெட்டை ஒரு முறை இழுத்துக் கொண்டாள் சோபியா. "சரி, நாம் போவோம். இல்லையா,பெலகேயா நீலவ்னா!"

"கட்டாயம்!"

"அதென்ன ரொம்ப தூரமோ?"

"சுமார் 80 கிலோமீட்டர் தூரம் தான்."

"நல்லது. சரி, இப்போது எனக்குக் கொஞ்சம் வாத்தியம் வாசிக்க வேண்டும் போலிருக்கிறது. பெலகேயா நீலவ்னா, நீங்கள் என் வாத்தியத்தைக் கொஞ்ச நேரமேனும் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா?"

"என்னைப்பற்றிக் கவலைப்படாதே, அம்மா. நான் ஒருத்தி இங்கே இல்லை யென்றே நினைத்துக் கொள்ளேன்"என்று கூறிக்கொண்டே, சோபாவின் ஒரு மூலையில் போய்ச் சாய்ந்தாள் தாய். அக்காளும் தம்பியும் தாயை ஒரு சிறிதும் கவனிக்காதவர்கள் போலவே காட்டிக் கொண்டனர், எனினும் அவர்கள் அவளைச் சாதுரியமாகப் பேச்சில் இழுத்துவிட முனைந்தார்கள்.

(தொடர்ந்து வரும்)

# 'ஞாயிற்றுக்கிழமை!

**போ**ன ஞாயிற்றுக்கிழமை 'வருகிறோம்'என்று சொல்லிவிட்டுப் போன ரமீஸிடமிருந்து- 'வருகிற ஞாயிற்றுக் கிழமை வருகிறோம்'என்று வந்திருந்த அஞ்சல் அட்டை கண்டு வஸீருக்கு ஆத்திரம் வந்தது.

வந்த ஆத்திரம் சிரிப்பாகிப் போனது.

ரமீஸாவது.... வாறதாவது....

'பொய்யன்' என்று அடிக்கடி 'மெய்யன்' சொல்வது ஞாபகம் வந்தது.

"மஸா!.... இந்த ஞாயிற்றுக்கிழமை ரமீஸூம் பானுவும் நம்ம வீட்டுக்கு வர்றாங்களாம்....."

"ஆறேழு மாசமா இதே போஸ்ட்கார்ட் தானே"

"இல்ல... இந்த ஞாயிற்றுக்கிழமை கட்டாயம் வருவாங்க.."

"காத்துல எழுதணும் ஒங்க பிரண்ட் சொன்ன சொல்ல..."என்று பாடிச் சிரித்தாள்...மஸாவாகிய மஸாயிதா.

"என்னங்க...ஒரு குட் ஐடியா"

"என்னது...?"

"ஞாயிற்றுக்கிழமை நாம அங்கே போவோம்...!"

"'வாறதா போஸ்ட் கார்ட் போட்டிருக்கானே..."

"போன சனியும் வந்துச்சே.... வந்தாரா... நாம அவங்க வீட்டுக்குப் போறது தான் அவருக்குச் சரியான பாடம்"

"உத்தரவு மகாராணி!"

ஞாயிற்றுக்கிழமை.

"இன்னும் வெளிக்கிடல்லியா...? பத்து மணியாச்சு.. கோல் ரோட் போய் அங்கேயிருந்து 'பெட்டா'க்கு பஸ்ஸெடுத்துக் 'கெஸல்வத்தை' போய்ச் சேரப் பன்னிரெண்டு மணியாயிடும்.."

"கொஞ்சம்... கத்தாம இருங்களேன்... சனியன் பிடிச்ச இந்தக் கொசுவம்...."-அலுத்துக் கொண்டாள் பானு. பதினொரு மணிக்குப் புறப்பட்டார்கள்.

வாழைத்தோட்டம் வஸீர்,தஸ்கர ராஸிக்,பூண்டுலோயா மெய்யன் நட்ராஜ், நீலாவணையூர் அல்ஜ்,இறக்காமம் ஜபீர், அரைஏக்கர் அஸ்ரப்தீன்- கிண்ணியா ரமீஸ் இவர்கள் தலைநகரில் வாழும் கலையுலக நண்பர்கள்.

ரமீஸ் திருமணமாகி பானுவாகிய அவனது பிந்தான் நோனா திருமதியாகி இன்றோடு அரை வருடமாகிறது.

பாவம் ரமீஸ். அவனுக்கு அவன் நல்லவன்.

கெட்டவனாக இருந்திருந்தால் கஷ்டப்பட



மாட்டான்.

இப்பொழுது... கால் தேய நடக்கின்றான்; சாப்பாட்டுக்கு வழிதேடிச் சப்பாத்துக் கம்பனி நோக்கி....

ஞாயிற்றுக்கிழமை அவனைப் போன்ற 'கூலி' களின் மாதாந்தப் பெருநாள்.

காதலித்துக் கைப்பிடித்த அன்பு மனைவி பானுவுடன் ஞாயிற்றுக் கிழமைகளில் இலக்கிய நண்பர்களின் இல்லம் செல்லும் ரமீஸ்.. இன்னும் வஸீர் வீட்டுக்குப் போகக் கிடைக்காததுதான் பெரிய மனக்குறை.

போன ஞாயிற்றுக்கிழமை 'றியாட்'டுடன் (கம்பஸ்-ஸ்டுடன்ட்) மாவனல்லை போய்வர... இந்த ஞாயிறு கழிந்தது. இந்த ஞாயிற்றுக்கிழமை....?

வஸீரின் வீட்டுக்குப் பதினொரு மணிக்குப் புறப்பட்டார்கள்.

□□□

"ரமீஸ் இருக்கிறாரா...?"-வஸீர்.

"அவங்க ரெண்டு பேரும் வாழைத்தோட்டத்துக்குப் போய்ட்டாங்க... ஒரு சாப்பாடு வீடாம்..."- சிங்களத்தில் வீட்டுக்காரி.

□□□

**கிண்ணியா அமீரலி**

"வஸீர் இருக்கிறாரா?"-ரமீஸ்.

"அவங்க.. ரெண்டு பேரும் களுபோவிலக்குப் போய்ட்டாங்க ஒரு சாப்பாடு வீடாம்.."-தமிழில் பக்கத்து வீட்டுக்காரி.

வஸீரும் மஸாயிதாவும் ,பானு-ரமீஸ் வீடு சென்று-ரமீஸூம் பானுவும் மஸாயிதா - வஸீர் வீடு சென்று...ஏமாறித் திரும்ப.. அந்த ஞாயிற்றுக்கிழமை.. அநியாயமாகக் கழிந்தது.

"அடுத்த ஞாயிற்றுக் கிழமை எங்கே போறதா உத்தேசம்...?"

பானு கேட்டாள்.

ரமீஸாகிய நான் ஒரு அஞ்சல் அட்டையை எடுத்து எழுதத் தொடங்கினேன்;

'கவிஞர் உவைஸ்கனி அவர்கட்கு! வருகிற ஞாயிற்றுக்கிழமை உங்கள் வீட்டுக்கு வருகிறோம்!'

# இடம் பெயர்ந்தவன்

**ஆத்மராஜா றூத் சந்திரிக்கா**

நேரம் உணர்ந்தும் எழும்ப முடியாத படியொரு அசதி. இரவிரவாய் கண்விழித்து 'மகாசிவராத்திரி' காத்த இலட்சணம். நான்கு பூசை கண்டதில் ஒரு ஆத்மார்த்த திருப்தி. ஒரு மகத்தான சாதனைபோல் எண்ணிக் கொண்டான் கஜன். கனடாக்கு வந்த காலமிருந்தே 'போக வேணும் போகவேணுமென்று' எண்ணிய பயணம் கைகூடிய போது மனதுக்குச் சந்தோஷமாக இருந்தது. ஓய் வொழிச்சல் இல்லாத உடலில் சோர்வு தெரிந்தது. 'றிச் மண்ட் ஹில் லூக்கு' காரெடுக்கும் போதே விழிகள் வீக்காகி ஒன்பது மணியளவில் போய்ச்சேர்ந்து நள்ளிரவு இரண்டுமணி, அதிகாலை மூன்று, ஐந்து என்று பூசை கண்டு முடிய அப்பிடியே கோயிலடியில் விழுந்து படுத்து விடவேண்டும் போலத்தான் இருந்தது...... முடியுமா....?

இதென்ன நல்லூரா..... கனடா. ஓய்வொழிச்சலில்லாமல்.... சோம்பேறித்தனமில்லாமல் வாழவேண்டுமென்று வரை வறை காட்டும் கனடா.

'ஏய்.... இப்ப நேரம் தெரியுமே....'

'கத்தாதையப்பா....'

'என்ன கத்தாதை, உங்களுக்கென்ன ஊரிலையிருக்கிறதெண்ட நினைப்பே....'

'ஏனப்பா வெள்ளணையிலை கத்தித் துலைக்கிறாய்....'

'கத்தாமல் பின்னை உங்கடை தலை மாட்டிலையிருந்து கொண்டு தாலாட்டுப் பாடவே'

'பாடன்'

'இஞ்சாருங்கோ.... விசர்க்கதை கதையாமல் எழும்பி வேளைக்குப் போங்கோ.... நாங்கள் போறம். ம்.... எழும்புங்கோவண் அவர் பிந்தினால் சலறியிலை எவ்வளவு துண்டு விழுமெண்டு தெரியுமல்லே....'

'தெரியும்.... தெரியும்'

மனைவி போய்விட்டாள்... நேரம் ஓடியது. இனிமேல் தாமதிக்க முடியாதென நேரம் உறுத்தியது. துடித்துக் கொண்டிருந்த மணிக்கூட்டுக்கம்பியை முறைத்துவிட்டு எழும்பினான். வீடு வெறிச்சோடிக்கிடந்தது. மனைவியும் பிள்ளைகளும் பாடசாலைக்கு போய்விட்டிருந்தார்கள்.... எப்படித்தான் முடிகிறதோ?? விடிய விடிய முழிச்சாலும் விடிஞ்சதும் இயந்திரமாகிற வெளிநாட்டுப் பாணி பிள்ளைகளுக்கு அத்துப்படி.... ஆனால் அவனால் 'அது தான் முடிய மாட்டேன்' என்கிறது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும்' என்கிற தியறிதான் எப்போதும். அரக்கப் பரக்க ஓடிவிட முடியாது. எல்லாவற்றிலும் ஒரு நேர்த்தி அவசியம். ஊரைப்போல் எட்டரைக்குப் போய் பிரின்ஸ்ஸுபலுக்கு தலைசொறிஞ்சு அசடு வழிஞ்சு ஏழரையெண்டு சைன் வைத்து 'பிள்ளையள் இந்தாங்கோ உந்தப் படத்தைப் பார்த்துக் கீறுங்கோ வாறன்' என்று பேய்க்காட்டி, ஸ்டாப் றூமில் அன்றைய ஊரளப்பில் முக்கிய பிரதிநிதியாக கருத்துரைத்து, கன்ரீனில் 'மகாநாடு' முடித்து ஒன்றரைக்கு சைக்கிள் தள்ளுவது இங்கு முடியுமா....? நடையுடை பாவனை கதை பேச்சு வரவு, கற்பித்தல் சகலவற்றிலும் கடும் பிரயாசம் எடுத்து மிகமிக அவதானமாக நடந்து கொள்ளாது விட்டால்... அம்போ தான்... கல்விச்சபை 'குட்பை' சொல்லும்.

'ஜனநாயக நாட்டின் சுதந்திர உணர்வு மிக்க மாணவர்கள் மத்தியில் கற்பிக்கின்றீர் என்ற உணர்வுடன் செயற்படவேண்டும்....



புரிகிறதா..... தற்ஸ் ஓல்...'

'ஒன்டாரியோ ஆசிரியர் தகைமைச் சான்றிதழ்' பெற்று நிரந்தர ஆசிரிய நியமனம் பெறும் போது அந்தக் கல்வியதிகாரி சொன்னது ஒவ்வொரு கணமும் அவனுள் ஒலித்துக் கொண்டேயிக்கிறது. அதனால் தான் நேர்த்தியாகக் கடமைகளைச் செய்யவும் முடிகிறது கஜனால். மிகச் சிறப் பான கல்விக்கொள்கைகள் சக நிருவாகம். 'இப்படியே அங்கும் இருந்தால்.... எவ்வளவு புத்திஜீவிகள் உருவாகியிருப்பார்கள். கடமையென்பது.... அலட்சியமானதொரு நிலை மாறுமானால் எத்தனை சாதனைகள் நிகழ்ந்திருக்கும்' அவன் மனம் அடிக்கடி அங்கலாய்த்தது.

கனடா வந்த பின்பும் 'ஏனோ தானோ' என்ற நிலையிலிருந்து மீள அவனுக்கு எத்தனை கஷ்டமாயிருந்தது.

'என்னாலை ஏலாதப்பா.... இந்த பிள்ளைகளோட மல்லுக்கட்டுறது வலு கஷ்டம் ஆயிரம் கேள்வி கேட்டொண்டு திணறடிக்குங்கள். நான் கராஜ்ஜிலை வேலை செய்யப் போறன்' என்று ஒரே பிடியாய் நின்றபோது மனைவிதான் ஆயிரம் சமாதானம் சொன்னாள்.

'கொஞ்சம் காலம் கஷ்டப்பட்டாலும் பிறகு சுகமப்பா. எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிச்சுப் போட்டு கராஜ்ஜிலை நிக்கப் போறியளே. ரெண்டு பேருமாய் ட்றை பண்ணுவம். பேமனெண்ட் ஆகிற்றால் பிறகு வலு சுகம்'

'சுகமாம் சுகம் மண்ணாங்கட்டி' பல்லைக்கடித்து கொண்டு றோட்டில் இறங்கிய போது மணிக்கட்டில் பளிச்பளிச் சென்று 'ற்று லேட்' உறுத்திக்கொண்டேயிருந்தது.

குயின்ஸ் பாக் கடந்தபோது அவனையுமறியாமல் விழிகள் இரண்டாம் மாடி தாவி மூவாட் புளொட் தொட்டது.

பரபரப்பாக இருந்தது பில்டிங்.

ஆசிரியர் தகைமைச் சான்றிதழுக்கான விண்ணப்பம் பெறத்தாவி 'சோஷல் இன் சூரன்ஸ் நம்பர்' இல்லையே...., அகதியாய் வந்தவர்களுக்கு அது இல்லாட்டில் கஷ்டமே என்று கைவிரித்த மொட்டைத் தலையனை சபித்து, கிவிண் நேம், பெஸ்ட் நேம், சேர் நேம், லாஸ்ற் நேம் எண்டால் உதென்ன கன்றாவியென்று' தலையைப் பிய்த்துக் கொண்டதும்..... கூட வந்திருந்த சக ஆசிரியர் க்ரே ரெயர் சிரித்துக் கொண்டே படிவம் நிரப்பியதும் திடீரென ஞாபகம் வர மெலிதாகச் சிரிப்பும் வந்தது. விரக்தியான சிரிப்பு.

எத்தனை கஷ்டங்கள் ஒரு நிரந்தர ஆசிரிய நியமனம் பெறுவதற்கு.... சே என்று அலுத்துக் கொண்டது.

அதோடு முடிந்ததா.... 'ஸ்பெஷல் ஸ்ருடன்ற்' முத்திரை குத்தப்பட்டு ஒன்டாரியோ பல்கலைக்கழகத்தில் இரண்டு பாடத்தில் பயிற்சி முடித்து, தொடர் கல்விப் பிரிவினரால் நடத்தபடும் பயிற்சி முடித்து...... இப்படியிப்படி கஷ்டப் பட்டு இப்போது ஒரு ஆசிரியராகி விட்டது.

'ஊரிலெண்டால் தொழில் கிடைச்சால்.... அது சாதனை. இஞ்சை அதுதான் பெரிய சோதனை.' தன் நண்பன் சொன்னதை மீட்டுப்பார்க்க.... பார்க்க உண்மை போலத் தான் தெரிந்தது.

பதினைந்து நிமிஷம் லேற்.... பரபரப்பாய் வகுப்பினுள் நுழைந்தபோது பிள்ளைகள் யாருமே மரியாதைசெய்யவில்லை, வணக்கம் செலுத்தவில்லை. எல்லோர் முகமும் இறுகியிருந்தது.... வலிந்து புன்னகைத்து 'குட்மோணிங்' சொன்னான். 'குட் நைட்' ஏக காலத்தில் அவர்களில் இருந்து புறப்பட்டு செவியடைய திடுக்கிட்டான். ஆசிரியருக்கு யாருமே அஞ்சியதாகத் தெரியவில்லை..... அவர்கள் பார்வையில் அலட்சியம் தெரிந்தது.

ஒரு மாணவன் எழுந்தான்.... மாணவ தலைவன் ஷெப்ரின். 'சேர்.... ஜனநாயக நாட்டின் சுதந்திர உணர்வும், கடமையுணர்வும் மிக்க மாணவர்கள் மத்தியில் கற்பிக்கின்றீர்கள் என்ற உணர்வுடன் செயற் பட வேண்டும்.... இல்லையேல் நாங்கள் மேலிடத்தில் முறையிடுவோம். பதினைந்து நிமிடங்கள் தாமதம்.... இன்று நீங்கள் கற்பிப்பவற்றைக் கேட்க நாம் தயாரில்லை....' சுருக்கென்று தைத்தது அந்த வார்த்தைகள். நெஞ்சில் மெலிதான வலி யெழுந்தது. அவசரமாக லீவு போட்டு விட்டு வெளி யேறும் போது கண்கள் பனித்தன. எத்தனை உதாசீனம்..... இங்கு எத்தனை அலட்சியமாய் நடந்தும்.... கற்பிக்கத் தவறியும் குரு என்றால் தெய்வம் என்று நினைக்கும் ஊர்ப்பிள்ளை களின், படிப்பித்த பிள்ளைகளின் முகங்கள் பரிதாபமாய் மனத்திரையில் மங்கலாகத் தோன்றி மறைந்தன.

வேதனை கிளர்ந்தெழுந்தது. ஆற்றாமையும் துயரமும் பெருக்கெடுத்து அழுகையும் சலிப்பும் ஆரத்தழுவிக்கொள்ள அன்றைய நாளை சபித்துக் கெண்டு கட்டிலில் விழுந்தான் கஜன்.

# அப்பா நல்லவர்

**சுவர்ணா**

செல்வத்துக்கு திடீரென்று விழிப்புக் கண்டது. கண்ணைக்கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்துகொண்டான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒப்பாரி அழுகுரல் கேட்கும் திசையை உத்துக் கேட்டான்.... வீட்டுக்குள்ளிருந்து வந்தது.

கொட்டில் கட்டிலை விட்டு இறங்கினான் செல்வம். அவன் கால் பட்டு சிதறிக் கீழே விழுந்த புத்தங்கள், கொப்பிகளை திரும்பிப் பார்த்துவிட்டு நடந்தான்.

வீட்டு விராந்தைப்படியில் ஏறி... ஸ்கிரினைப் பிடித்தவாறே எட்டிப்பார்த்தான் கட்டிலைச் சுற்றி பக்கத்து வீட்டு பெரிய பொம்பிளையள் அழுது கொண்டு நின்றனர். நடந்து போய் எட்டிப்பார்த்தான்.... தாய் கட்டிலில் படுத்திருந்தாள். ஒப்பாரியின் சோகமான சூழலின் நெருக்குதலில் இளகிப் போனது அவன் மனசு.... விபரம் புரியாமல் அவன் கண்களில் கண்ணீர் திரையிட்டது. தாயின் தலைமாட்டில் குத்துவிளக்கெரிந்தது.

"டேய் செல்வம் அம்மா செத்துப் போயிட்டா...." என்ற மாவடிச் சின்னம் மாவை நிமிர்ந்து பார்த்தான். சின்னம்மாவின் நாரியில தம்பி அழுது கொண்டிருந்தான். தாயை தம்பியை, கூடியிருந்தவர்களையும் மாறிமாறிப்பார்த்தான். தான் நினைத்தது நிஜமாக நடந்துவிட்டதை எண்ணுகின்றபோது அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நடந்துபோய் சின்னறை வாசலில் உட்கார்ந்து கொண்டான்.

ஞாயிற்றுக்கிழமை

மத்தியானம்

தோட்டத்து வேலை முடிஞ்சு கள்ளுக்குப் போயிட்டு திரும்பிய அப்பா சமைக்கவில்லை என்று அம்மாவோடு சண்டை பிடித்துக் கொண்டு சாதுமலைக்கு... சித்தப்பா வீட்டுக்குப் போய்விட்டார்.... சோத்துக்கு அரிசி இல்லை என்று சொல்லி சாமி எடுத்து தீட்டிவச்சிட்டு.... அண்ணன் ஊத்திக் குடுத்த தேத்தண்ணியை குடிச்சிட்டு.... அடுப்பைப்பார்த்து எரிக்கச் சொல்லி விட்டு.... களைச்சுப்போய் முந்தானையை விரித்து படுத்துக் கொண்ட அம்மா.

அடங்கி மெலிதாக ஒலித்த ஒப்பாரி திடீரெண்டு வேகமெடுத்து பெரிதாக ஒலித்தது. செல்வத்தின் சிந்தனை தடைப் பட்டுக்கொண்டிருந்தது. நடந்துபோய் விறாந்தைத்தூண் அருகில் நின்று எட்டிப் பார்த்தான். வெளியே போயிருந்த தகப்பனார் வந்திருந்தார். கட்டிலை எட்டிப் பார்த்துவிட்டு திரும்பிய தகப்பன் பந்தல் போடுவதற்கான வேலைகளைச் செய்யும் படி வந்திருந்த ஆண்களுக்கு சொன்னார்.

தூணை வளைத்துப் பிடித்துக் கொண்டிருந்த செல்வத்துற்கு அந்த நினைப்பே மறக்க முடியாமல் இருந்தது. அடுப்பெரிச்சி களைச்சுப்போன செல்வம் பள்ளிக்கூட வீட்டு வேலை செய்யவில்லை என்று நினைத்துக் கொண்டவன் புத்தகம், கொப்பிகளை எடுத்துக் கொண்டு ஆட்டுக் கொட்டிலுக்கு போனான்.

அவனால் வீட்டுப்பாடத்தில் கவனம் செலுத்த முடியவில்லை வயிறு பசித்தது... அன்டைக்கும் ரெண்டு காற்சட்டை போட்டிட்டுப்போயும் கெற்மாஸ்டரிட்ட மாட்டிக் கொண்டு.... காற்சட்டையை கழட்டிப் போட்டு அடி வாங்கியது அவனைப் பயமுறுத்தியது. வெள்ளிக்கிழமை.... அம்மா செத்துப் போயிட்டான்டு சொல்லி பள்ளிக் கூடம் வராத சுரேஸ்..... அவனுக்கு ஞாபகம் வந்தது. எங்கம்மா செத்துப்போனா நாளைக்கு பள்ளிக்கூடம் போக தேவையில்லை என்று அவன் மனம் கற்பனை



செய்து பார்த்தது. அவன் நினைத்தது நிஜமாகவே நடந்து விட்டதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

அவனுக்கு அம்மாமேல பாசம்.... இரவில் வெளியில போறதென்டா செல்வத்துக்குப் பயம். படுத்த பாயில மூத்திரம் போய்விடும்.... விடிய பாய் கழுவி காற்சட்டைதுவைச்சி அவனக்குளிப் பாட்டி விடுவா.... இனி யார் செய்வார்கள் அவன் மனம் தாயின் நிழலை பிரிய ஆரம்பித்தது.

காலையில எல்லா சொந்தங்களும்- தெரிந்தவர்களும் ஒவ்வொன்றாக வரத் தொடங்கினார்கள். ஒவ்வொருத்தரும் படலையால் வீட்டுக்குள் வரும்போது மத்தன் தனது மேளத்தில் பலங்கொண்ட மட்டும் அடித்தான். எல்லோர் மனதிலும் சோகம் நிறைந்தது.

குருக்கள் வந்து.... தாயைக் குளிப்பாட்ட வீட்டிற்கு பின் பக்கத்திற்கு கட்டிலோட தூக்கிக்கொண்டு போனார்கள். செல்வமும் பின் பக்கம் போனான்.

"எடி சரோஜா பரமசாமி மத்தியானஞ் சண்டையில உலக்கையால அடிச்சபோது தங்கம் செத்ததாம்" என்று பெண்கள் பெசியதைக் கேட்டு சுவர் ஓரமாக நின்று கொண்டான்.

செல்வத்தின் மனசு தகப்பனுக்காக அழுதது. அவனுக்குத் தெரியும் நடந்தது என்ன வென்று. அவன் மனம் மத்தியான நிகழ்வுகளை திரும்ப அசைபோட்டுக் கொண்டது.

தேத்தண்ணி குடிச்சிட்டு படுத்துக் கொண்ட அம்மா..... உலை கொதிச்சி மூடியிருந்த அலுமினியத்தட்டு சத்தம் போட ஆரம்பித்தது. தாயை எழுப்பிப்பார்த்து முடியாமல் போகத்தான் புத்தகங்களை எடுத்துக் கொண்டுபோனது....

அதற்குப் பிற்பாடு அப்பா வரவில்லை என்று நினைத்துக் கொண்டான்.

"எடி தேவையில்லாமல் கதைக்காதீங்க தங்கம் கடைசிப்பையனுக்கு பின் ஒப்பரேசன் செய்தவள். அதுதான் அவளுக்கு ஹாடடேக்" என்று மற்றொரு பெண் கூறியது செல்வத்தின் சிந்தனையை நிறுத்தியது.

செத்தவீடு முடிந்து... அந்திரட்டி எல்லாம் முடிந்து உறவுகளெல்லாம் போய் விட்டது. பள்ளிக்கூடம் போக வேண்டும்;

ஸ்கிரினில எல்லா உடுப்போட ஒன்னாக திரண்டு செல்வத்தின் காற்கட்டை, சேட்டுகள் கிடந்தன... சேட்டை எடுத்துப்பார்த்தான் ஊத்தை....

அம்மாட்ட கொடுத்திருந்தா துவைச்சிப் போட்டிருப்பா... பள்ளிக்கூடம் போகும் போது கூப்பிட்டு முகத்திலே அப்பிக்கிடக்கும் பௌடரை தன் முந்தானைச் சேலையால் துடைத்துவிடுவாள். தன் பங்கிற்கு சீப்பை எடுத்து தலை சீவி விட்டு... இன்ரவலுக்கு ஐஸ்பழம் குடிக்க 25 சதம் கொடுத்து கவனமா போய்ட்டுவா என்று சொல்லி அனுப்புவா.... அம்மா இல்லையே... நினைத்துக் கொண்ட செல்வம் காற்சட்டை, சேட்டை போட்டுக் கொண்டு அடுப்படிக்குப் போனான். சாப்பிட்டுக்கொள்ள ஒன்றுமில்லை..... புட்டுக்கு மாக்குழைச்ச அண்ணன் தண்ணிய கூட விட்டு மா களியாப் போயிட்டு.... பாணுக்கு கடைக்குப்போன அண்ணனையும் காணயில்ல.

"டேய் செல்வம் சுந்தரமண்ண வேலையால போரார்டா.... பள்ளிக்கூடத்துக்கு நேரம் போயிட்டு கெதியா வா.... நான் போரன்" என்று செல்வத்தின் நினைவைக் கலைத்தான் மற்றொரு அண்ணன் சுந்தரம் காங்கேசன் துரை சீமெந்து பெக்டரியில் 8மணி வேலை முடிந்து வெல்வம் வீட்டிக்கு வரும் பொழுது எட்டு இருபது ஆகிவிடும்.

புத்தகங்களை தூக்கிக் கொண்டு வெளியே நடந்த செல்வத்தின் கால்களை ஓடிவந்து நக்கிக் கொண்டது வெள்ளை நாய். ஆதரவோடு தடவிக் கொடுத்துவிட்டு நடந்தான்.

வயிறு பசித்தது.

அம்மா இருக்கையில இரவுச்சோறு வச்சிருப்பாங்க... விடியக்காலையில எழும்பின உடன் பழஞ்சோறு சாப்பிடுவேன்.

பள்ளிக்கூடத்தில் அவனால் பாடங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. அவன் மனதில் செத்த வீட்டு நினைவுகள் வந்து போயின.

அம்மாவ குளிப்பாட்டி..... கல்யாணத் தன்டு கட்டிய சேலையை உடுத்தி நடுப்பந்தல்ல வைத்தார்கள்.... பெட்டியில கூட சிரிச்ச முகத்தோடு இருந்தார்..... நாங்க ஏழுபேரும் சுத்தி நின்று தீபம் கொழுத்தி வச்சிக் கொண்டு.... குருக்களும் தன் கடமையை முடிக்க.... சுத்தி நின்ற பொம்பிளயள் ஒப்பாரி வச்சு அழுதார்கள். மூடிய மூடிவிட்டு அம்மாவ தூக்கிக்கொண்டு போனார்கள்.... அழுதபடி நானும் பின்னால ஓடிப்போனேன்.... நீயெல்லாம் சுடலைக்குப் போகக் கூடாதென்று கல்வீட்டு சேதுப் பிள்ளை குஞ்சியாச்சி தடுத்திட்டா.

பள்ளிக்கூடத்தின் மணி அடித்தது. செல்வத்தின் நினைவுத் தொடர் முறிந்தது. பள்ளிக் கூடம் விட்டு வீட்டுக்கு வந்த செல்வம் தகப்பனாரும் செல்லத்துரயரும் கதைப்பதைக் கண்டு அப்படிக் குந்தில் உட்காந்து கொண்டான்.

"இப்படி எத்தின நாளைக்கு நீ சமைக் கப்போற..... உனக்கென்ன இப்ப வயசா போயிற்று.... ஒரு கல்யாணத்த கட்டினின்டா பிள்ளைகளையும், அடுப்படி வேலையையும் பார்க்கும் தானே. உனக்கும் களைச்சுப்போய் வார நேரத்தில் தண்ணி எடுத்துத்தர, சாப்பாடு போட்டுத்தர ஆள் தேவைதானே." என்றார் செல்லத்துரையர்.

தகப்பனின் பதிலுக்கு ஆவலோடு எதிர் பார்த்திருந்தான் செல்வம். சிறுமௌன இடைவெளிக்குப்பின் தகப்பனார் தொடர்ந்தார்.

"நீயும் சொல்றது சரிதான்டாப்பா ஆனா.... வாரவள் என்ன மாதிரி நடந்து கொள்வாளோ தெரியாது, மாறி நடந்துவிட்டா பிள்ளைகளும் அனாதையாப் போயிடுங்கள்.... அப்படியான நிலைமையை என்னால நினைச்சுப் பார்க்க முடியாது.... கல்யாணம் செய்து கொள்ளுற யோசனை எனக்கில்ல. நல்லதோ கெட்டதோ பிள்ளையளோட வாழ்ந்து பார்ப்பம்... நான் ஆருக்காகக் கஸ்டப்படப்போறன் என் பிள்ளையளுக்காகத் தானே..... அவள் மகராசி போய்ச்சேர்ந்திட்டா"........ தோளில் இருந்த சால்வையால் கண்ணைத்துடைத்துக் கொண்டார்.


அப்பா நல்லவர். அப்பாவைப்பற்றி ஊருக்கு ஒன்றுமே தெரியாது..... என்று நினைத்துக் கொண்ட செல்வத்தின் கண்கள் சந்தோசத்தில் பனித்தன......!

# ஒரு விதைப்பும் அறுவடைகளும்

**மருதூர் ஏ. முஹம்மது தம்பி**

நேற்றுவரை பேசிக்கொள்ளாதிருந்த நானும் உவைசும் பேசிக்கொண்டோம்.

நான் அழுதுகொண்டிருந்தபோது என் கண்களை துடைத்துவிட்டு சென்று கொண்டிருந்த புவேந்திரனை இருவருமாக சேர்ந்து துரத்தினோம்.



நாங்கள் துரத்திவருவதை பார்த்துவிட்ட புவேந்திரன் கண்களைச் சுருக்கி மெல் லெனச் சிரித்தான். பிடித்துத் தூக்கினோம். அவன் கூச்சல் போடவில்லை கைகளைக் கட்டினோம்,

கோழிக் கொட்டிலை அறைந்து சாத்தினோம். அவன் திணறிப் போக வில்லை. (26 வருடங்களுக்கு முன்னால் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்குப் போனவகையில் ஒன்றித்துப் போன உறவு புவேந்திரனுக்கும் எனக்கும் உரியது, இந்த 26 வருடங்களில் எத்தனையோ அவலங்களை சந்தித்து ஆழ அகலம் பெற்றுவிட்டதான உறவுதான்.....)

எப்போதும் சிரிப்பதுபோல கண்களைச் சுருக்கி மெல்லெனச் சிரித்தான்.

திடீரென அலறினான், ஓலமிட்டான், கோழிச் சந்தடியில் அவனுடைய அலறல் அடங்கிப் போனது. கட்டி இழுத்த மீனைப்போல் அவனுடைய தேரல் உரிந்து தொங்கிற்று.

கண்களினால் பரிதாபத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தான். என் கண்களை துடைத்துவிட பயன் படுத்திய அவனுடைய வலதுகையை மணிக்கட்டால் வெட்டி எடுத்தோம். அந்த விரல்களாலேயே கண்களை குத்தினோம். அது குழைந்து சிந்திற்று. சதைகளால் பீறிட்ட ரத்தமும் நின்று போயிற்து. இனி என்ன செய்தாலும் அவனுக்குக் கவலை இல்லை நேற்றைய தினம் "சன்சீற்" போடுவதற்காக கடையில் இருந்து கொண்டுவந்த கம்பித்துண்டுகளில் இரண்டை மட்டும் உருவி எடுத்தோம் வயிற்றினுள்ளும், தொண்டையினுள்ளும் கம்பிகளை புதைத்து கிழறித் தோண்டினோம். அந்த இடத்தில் வெடி குண்டுகளோ, போஸ்டர்களோ அகப்படவில்லை. புவேந்திரனின் உடலை மருதமுனை மண் நிராகரிக்கவில்லை. நாளைப் பொழுதில் பாண்டிருப்பு மண் சோனகப் பிரேதமொன்றை நிராகரிக்கவும் போவதில்லை.

(வெடிகுண்டைச் செய்தவர்கள் பல மைல்களை தாண்டியிருக்கவும் கூடும்) வாப்பாவை இழந்த துன்பம் எனக்கு, புவேந்திரனுக்கு.........?

# இலக்கிய நயம்

# வாளாக வீழ்ந்தது



"சோழ சத்திரத்திற்கு இப்பாதையால் செல்ல வழி இருக்கிறதா?"

நதியோரப் பூமரத்தில் பூப் பறித்துக் கொண்டிருந்தவள் குரல் கேட்டுத் திரும்பினாள்.

வழி கேட்டவன் விழிய சைக்க மறந்து போனான். அல்லது முயன்றாலும் மூடிக் கொள்ள விழிகள் மறுத்துக் கொண்டிருந்தன.

நானிருக்க நீயெதற்கு என்று தானோ இந்தப் பூ, அந்தப் பூ மீது போர் தொடுத்துக் கொண்டிருந்தது?!

மலர்ந்திருக்கும் பூவெல்லாம் பூவல்ல, எனக்குப் பிடித்த பூ நீதான் என்று பூமரம்தான் இந்தப் பூவை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்ததுவோ?!

பூவாகிக், காயாகிக், கனியாகும் இயற்கை விதியை இந்தப் பூ எப்படி வெற்றி கொள்ள முடிந்தது? பூவே பூவாக இருந்து கொண்டு இரு கனிகளையும் தாங்கி நிற்பது விந்தையன்றோ?!

உயர்ந்து எழுந்து தாழ்ந்து உயர்ந்து கனிகள் அசைகையில் துவளாமல் தாங்குகிறதே இந்தப் பூ! அது எப்படி?!

பூ தாங்கலாம், அசையும் கனிகள் இரண்டும் என் உயிரை வாங்கும் கொடுமையை நான் எப்படித் தாங்குவது?

வியப்பின் வசப்பட்டவனின் விழிகள் யாத்திரை நடத்துவதை அவளும் உணர்ந்து கொண்டாள்.

அவளுக்கும் வியப்புத்தான். கொள்ளையழகை மேயும் ஆடவரின் கள்ள விழிப் பார்வைகளை ஒரு முறைப்பால் சில சமயம் ஒரு கனைப்பால் முறித்துப் போடுகிறவள் அவள்.

இன்று மட்டும் முறைப்பும் காட்டாமல் கனைப்பும் கொட்டாமல், அவன் ரசிப்புக்கு வசப்பட்டு, கலையார்வக் கணகளுக்கு காட்சியாகும் சிலைபோல மாறிவிட்ட மாயம் என்ன?

நான்கு விழிகளும் சட்டென்று சந்தித்து விலகிய நொடியில், நெஞ்சுக்குள் ஒரு ரோஜாச் செடியை நட்டது யார்?!

அவன் விழிகள் நழுவி, மோக மென்னும் சுனையில் நனைந்து தேக மெங்கும் ஊர்வலம் போகையில், என்னுள் ளேயிருந்து புறப்பட வேண்டிய எதிர்ப் பைக் கட்டிப் போட்டது யார்?

வழி கேட்க வந்தவன், விழி செலுத்த இடம் தேடிக் கொண்டிருக்கிறானே?! தெரிந்தும் பழிச் சொல்லை வீசாமல், அவர் விழியுண்ணும் விருந்தாகிக் கொண்டிருக்கிறேனே, என்ன நடந்தது எனக்குள்?!

எனக்குள் மோகமா?

எத்தனை மேகங்கள் வந்து என்னை வழி மறித்தன; மோகம் என்றால் அந்த மேகங்கள் என்னை மூட அனுமதி அளித்திருப்பேனே!

வயதுக் கோளாறா?

அப்படியெனில் வண்ணக் கனவு களோடு வந்த வாலிபக்கரங்களுக்குள் நான் வசப்பட்டிருக்க வேண்டுமே? இல்லையே; ஒரு வாள் வீச்சுப் பார்வையால் வாலை நறுக்கியன்றோ காளைகளை விரட்டிக் கொண்டிருந்தேன்!

அப்படியானால்... அப்படியானால்... இதுதான்... இதுதான் காதலா?!

நினைத்தபோதே நெஞ்சுக்குள் ஒரு அருவி தன் வருகையை அறிவித்தது. மனசெங்கும் ஈரம்.

நினைப்பே இத்தனை சுகமா?! வியப்பு பிடித்த பிடியில் விடுபடமுடியாமல் இருவரும் தவித்தது தொடர்ந்திருக்கும், தோழி மட்டும் இடையிலே வந்து குறுக்கிட்டிருக்கா விட்டால்!

தொண்டையைச் செருமி தானொருத்தி தலையீடு செய்திருப்பதை பிரகடனம் செய்தாள் தோழி.

கரைகாணா இன்பக் கடலில் தடுமாறிக் கொண்டிருந்த இருவரும் தரைக்கு வந்தனர்.

வார்த்தைகளைத் தேடிச் சேகரித்து வழி கேட்டான் காளை.

பதில் சொல்ல தன் இதழ்களுக்கு மறந்துபோன மொழியைத் தேடிக் கொண்டிருந்தாள் பூவை.

தோழிதான் வழி சொன்னாள். அவனோ இதயத்தை இறக்கி வைத்துவிட்டு இடத்தைக் காலி செய்தான்.

✤ ✤

வழி தேடி வந்தவன், அவள் விழிகளுக்குள் தன் உயிரைத் தேடி தினம்தோறும் படையெடுத்தான்.

சூரியன் வராவிட்டால் சுருங்கித்தானே போகும் தாமரை.

வாரத்தில் ஏழுநாள் என்பது எழுபது நாளாக இருந்திருக்கக் கூடாதா என்று ஒரு நாளை பல துண்டாய் உடைக்க ஆசைப் பட்டாள் அவள்.

"நல்ல ஆசைதான் போடி.." கேலி செய்தாள் தோழி.

ஒரு வாரம் காணவில்லை காளை முகம். சோம்பிப்போனது தாமரையின் வதனம்.

"வேதனை வேலாய் பாய்கிறதே தோழி. தேர்க்காலில் அகப்பட்ட பசுக்கன்றாய் என் நெஞ்சம் துடிக்கிறதே தோழி."

வெதும்பினாள். விம்பினாள். விழியருவி சிந்தினாள்.

வந்தான் காளை. தோழி சீறினாள்.

"பூவைக் கொய்துவிட்டு மரத்திலும் தங்கவிடாமல், மார்பிலும் தாங்கிக் கொள்ளாமல், தரையில் போட்டுவிட்டு நடையைக் கட்டினீரே நியாயமா?" என்று கேட்டாள்.

## தருவது—ரசிகன்

வருந்தினான். குளிக்கத்தான் வந்தேன், அருவி எங்கே என்று தேடினான்.

முதலில் ஊடல். பிரிவாகியிருந்தவனை பழிவாங்க வேண்டாமோ?

இரண்டுவிதமன்றோ காதல் களம். ஊடல் என்பது முதல் களம். அதில் புகுந்து வென்றவரே, கூடல் என்னும் மறு களத்தை சென்றடைவர்.

முதல் களத்தில் வென்றான். ஆக்கிரமிப்பு தேவையாக இருந்தமையால் மறு தரப்பின் எதிர்ப்பில் பலவீனமிருந்தது.

பேருக்கு எதிர்ப்புக் காட்டி, மறு களத்தில் போருக்கு அழைக்க அவளுக்கும் மனதுக்குள் சம்மதம்தான்.

போர் தொடங்கிற்று. முதலில் கோட்டை வசப்பட்டது.

வெற்றியைக் குறிக்க அவன் பதித்தது முத்த முத்திரைகள். உதடுகள் புரவியாகிவிட, கோட்டையின் சகல தடைகளும் உடைபட்டன.

கோட்டையில் இத்தனை புதிர்களா?! போர் தொடரப் போர் தொடர அழிவுக்குப் பதிலாக அற்புத சிருஷ்டிகள்!

வியப்பின் எல்லையில் விரிவது காவியம். ஆளப்படுவதும், ஆள்வதும் யார் என்ற போட்டியில் பொழுது புலர்ந்ததும் தெரியாமல் போனது.

சேவல்கோழி கூவி இரவு தொலைந்து விட்ட செய்தியைச் சொன்னது.

தோளோடு தோள் சேர மயங்கி, பொழுதை மறந்து கிடந்தவர் பிரிந்தனர்.

அன்று மாலையில் தோழி கேட்டாள்.

"நேற்று நடந்ததை நான் அறிவேன். ஆயினும் ஏனடி வாட்டம் வதனத்தில்?"

"வேதனையின் முத்திரை."

"போர் நிறுத்தமோடி?"

"அடிபோடி. கோபம் என்னைக் கொண்டவர் மீதல்ல, கோழி மீது!"

"என்னது சொன்னாய், கோழியில் ஏன் பழி?"

"சொல்வேன் நகைக்காதே"

"சொல்லாவிட்டால் உதைப்பேன் சொல்லடி."

**"பூவும் வாசமுமாய் தோள்தோய நாம் கலந்திருக்க, குக்கூ என்றது கோழி. விடிந்தது என்று நெஞ்சுக்குப் புரிந்து துணுக்குற்றுப் பிரிந்தோம். வாளைப்போல வைகறை வந்து என் தோளில் இருந்து அவரையன்றோ பறித்தது; பிரித்துப் போட்டது."**

"சேவல் கோழியை நோகாதே. வைகறை வந்தால் கூவுதல் கடமை. வேண்டுமானால் வசந்த விழாவில் வாளாய் நீண்ட வைகறையை வசைபாடு" என்றாள் தோழி.

**குக்கூ என்றது கோழி; அதன் எதிர்**
**துட்கென் றன்றுஎன் தூய நெஞ்சம்**
**தோள்தோய காதலர் பிரிக்கும்**
**வாள் போல் வைகறை வந்தென்றால்**
**-எனவே.**

குறுந்தொகை: பாடல்:32
பாடியவர்:அள்ளூர் நன்முல்லையார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—127

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | ■ | 3 |
| | ■ | | 4 | 5 | | |
| | 6 | | ■ | | ■ | |
| ■ | | ■ | 7 | | 8 | |
| 9 | | | | ■ | | ■ |
| | | ■ | 10 | | | |
| 11 | | | | ■ | 12 | |

### இடமிருந்து வலம்

01. வர்ண ஜாலங்களைக் காட்டும் போலியான தோற்றமிது.
04. கருத்தொருமித்து ஆதரவு பட்டு வாழ வேண்டியவர்கள்.
07. உங்கள் நண்பரின் இது தெரிந்தால் தொடர்பு கொள்வதில் சிரமம் இருக்காது.
09. எச்செயலையும் சிறப்புற நடத்துவதற்கு இவருடைய வழி நடத்தல் இன்றியமையாதது.
10. நமது நாட்டின் கிழக்கே உள்ள ஒரு நாட்டில் சில குற்றவாளிகளை இதன் மூலம் தண்டிக்கிறார்கள்.
11. குளிர் காலம் அல்லவா? ஒவ்வொருவரையும் தாக்குவார் 'இவர்'.
12. நம் நாட்டில் சந்தேகத்தின் பேரில் அன்றாடம் பலர் இந்நிலை அடைகின்றனர்.

### மேலிருந்து கீழ்

01. நல்வாழ்வுக்கு வழிகாட்டும் பண்புகளில் பிரதானமானது.
02. இதனைச் சுவைக்கும் பழக்கம் குழந்தைகளிடம் மட்டுமல்ல; சில பெரியவர்களிடமும் உண்டு.
03. ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளில் மற்றொன்று.
05. இன்றைய இசையுலகில் முக்கியமான இடம் பிடித்துள்ளது.
06. இதன் முன் ஒரு எழுத்து இருந்தால் சிறப்பாக இயங்கும்.
08. நம் கருத்தை பிறர் அறியச் செய்யும் ஒரு சைகை.
09. தமிழை இதற்கு ஒப்பிடுவார்கள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 25.11.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-127
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-125ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 யு | வ | 2 தி | ■ | 3 ச | ■ | 4 ச |
| த் | ■ | 5 மி | 6 த | வா | த | ம் |
| 7 த | ட | ங் | க | ல் | ■ | சா |
| ம் | ■ | கி | ன | ■ | 8 ப | ரி |
| ■ | 9 கோ | ல | ம் | ■ | வ | ■ |
| 10 கு | ட | ம் | ■ | 11 நி | ழ | ல் |
| ■ | ரி | ■ | 12 மு | லா | ம் | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 125இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. செல்வி. கமலா ஆறுமுகம், கொழும்பு-05.
2. பாத்திமா பாயிஸா, கல்பிட்டி.
3. எம். அமீர்தீன், திருகோணமலை.
4. எல். ஜெயசீலன், மொரட்டுவ.
5. செல்வி. பர்ஹானா, பலாங்கொட.
6. வி. குருநாதன், ஆலங்குடா.
7. கே. முகமட் நிசார், கொழும்பு-09.
8. திருமதி. ஆர். ஜீவா, வவுனியா.
9. ரி. வாணிதாசன், மஸ்கெலியா.
10. என். அன்டனி, நீர்கொழும்பு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! நான் என்ன தொழில் தொடங்கினாலும் நஷ்டம் ஏற்படுகிறதே, என் கவலை தீர ஒரு ஆறுதல் ஃபிளீஸ்,**

வே.சுந்தர்ராஜன், கண்டி.

*எங்கேயோ படித்த ஒரு சம்பவம் சொல்கிறேன் கேளுங்கள். "பெரும் பணத்தை தொலைத்துவிட்டேன்" என்று ஒருவன் வருத்தப்பட்டானாம். உடனே மற்றவன் சொன்னானாம்,"தொலைப்பதற்கு உன்னிடம் அவ்வளவு பணம் இருந்ததே, அது உன் அதிஷ்டமல்லவா?"*

**★ சிந்தியா! உங்களுக்கு நெற்றிக்கண் இருந்தால் என்ன செய்வீர்கள்?**

கே.வீ.ஜி.ராஜன், கொழும்பு-11.

*நேராக தணிக்கை குழுவிடம் சென்றிருப்பேன். (சும்மா சுகம் விசாரிக்கத்தான்!)*

**★ வெளிநாட்டிலிருந்து எனக்கு வந்த கடிதம் ஒன்று உடைக்கப்பட்டே வந்தது. கடிதத்தை உடைப்பது சட்டபூர்வமானதா?**

வி.தவசீலன், கொழும்பு-6

*உடைக்கப்பட்டதா என்று உடைத்தவர்களே சொன்னால்தானே தெரியும். ஒரு சின்னத் தகவல் கூறுகிறேன்: இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானியர் ஒருவர் தன் நண்பருக்கு கடிதம் எழுதினார். "இந்தக் கடிதம் உனக்குக் கிடைக்குமா என்று தெரியவில்லை. ஏனெனில் அரசாங்கம் கடிதங்களை சோதனையிடுகிறது." ஒரு வாரம் கழித்து அந்த ஜப்பானியருக்கு தபால்துறையிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. கடிதத்தில் இருந்த வாசகம்: "நீங்கள் உங்கள் நண்பருக்கு எழுதியது தவறு. நாங்கள் உங்கள் கடிதத்தை ஒரு போதும் பிரிப்பதேயில்லை".*

**★ என் காதலி வேறு ஊருக்குச் சென்று விட்டாள். என் சோகம் நியாயமானதுதானே சிந்தியா?**

எல்.நஜிமுதீன், கல்முனை.

*நியாயமல்ல என்று நான் சொல்லவில்லை, கவிஞர் அப்துல் ரகுமான் சொல்கிறார்: "தூரமே காதலின் செவிலித் தாய். எதிலிருந்து நீ தூரமாகிறாயோ அதை நீ அதிகமாக நேசிக்கிறாய்" என்று விட்டு இன்னொன்றையும் சொல்கிறார்: "எதிலிருந்து நீ தூரமாகிறாயோ, அதிலிருந்து நீ தப்பிக் கிறாய்!" இதில் பொருத்தமானதைப் போட்டுக் கொள்ளுங்கள்.*

**★ காதல் தோல்விக்கு முக்கிய காரணம் என்ன?**


எஸ்.விஜயன்,அக்கரைப்பற்று.

*உங்களுக்கு ஒரு வித்தியாசமான அறிவுரையை அறிஞர் காண்டேகர் சொல்லியிருக்கிறார். "காதல் ஒரு சூதாட்டம். தோற்கத் தயாராக இருப்பவர்கள் மட்டுமே அதை ஆடலாம்" (காண்டேகரில் கோபம் வருகிறதா?)*

**★ இஸ்ரேலியப் பிரதமர் கொலை தொடர்பாக நீர் அனுதாபக் கட்சியா, ஆரவாரக் கட்சியா?**

கே.சதானந்தன், வவுனியா.

*அனுதாபக் கட்சிதான். அனுதாபம் சமாதானத்தின் மீதுதான். பாகாப்புக் காரணங்களையும் மீறி, இரவோடிரவாக,*



*ராபினின் மனைவிக்கு ஆறுதல் சொல்லச் சென்ற யாசீர் அரபாத்தின் மனிதாபிமானமும் மறக்க முடியாது.*

**★ ராபினின் மறைவால் இஸ்ரேல்-பாலஸ்தீன சமாதானப் பயணம் தடைப்படுமா?**

எம்.எச்.ஹிஸ்புல்லா, காத்தான்குடி.

*தடையை வெட்டி ஒதுக்கி பாதையை திறந்து வைத்ததில் ராபினுக்கும் பங்குண்டு. இனி வருபவர்களின் மனதில் உறுதியிருந்தால் பயணம் தொடரும்.*

**★ டியர் சிந்தியா! உங்கள் வீட்டில் மட்டும் திடீரென்று பண மழை பெய்தால் என்ன செய்வீர்கள்?**

ஐ.எல்.சலீம், நிந்தவூர்-07.

*நிச்சயமாக குடை பிடிக்கமாட்டேன்.*

**★ வயதானவர்களை உதாசீனம் செய்யும் பிள்ளைகளுக்கு ஒரு அறிவுரை கூறுங்களேன்?**

ஆர்.பிலோமினா, நீர்கொழும்பு.

*ஒரு சீனப் பழமொழி இப்படிச் சொல்கிறது; குறித்துக் கொள்ளுங்கள்: "வயதானவர் ஒருவர் இருக்கும் ஒரு குடும்பத்தில் ஒரு இரத்தினம் இருக்கிறது என்று பொருள்." (உங்கள் வீட்டில் எத்தனை இரத்தினங்கள்?)*

**★ மன அமைதிக்கு என்ன வழி?**

எம்.சரோஜா.பதுளை.

*"கௌரவமான சோம்பேறித்தனத்திற்கு மற்றொரு பெயர் அமைதி"-இதைச் சொன்னது கவியரசு கண்ணதாசன்.*

**★ குடும்பச் சண்டையை வீதிக்கு கொண்டு வருவதால் பயன் கிடைக்குமா? (கொண்டு வருகிறார்களே)**

கே.நாகராஜன்,பேராதனை.

*முதலில் மனைவி பேசக் கணவன் கேட்கிறான்; பிறகு கணவன் பேச மனைவி கேட்கிறாள்; அதன் பிறகு இருவரும் பேசுவதை ஊரார் கேட்கிறார்கள். இதுவும் ஒரு சீனப்பழமொழி.*

# இராமாயணம் அங்கம் 7

இராமனும் இலக்குவனும் இணைந்து தாடகை எனும் அரக்கியை வீழ்த்தியதும் தேவர்கள் வானில் தோன்றி பூமாரி பொழிந்து வாழ்த்தினர். அரக்கர்கள் வம்சம் அடியோடழிவதற்கு அத்திவாரமிடப்பட்டு விட்டது என்பதனை மூவுலகத்தவரும் அறிந்து அகமகிழ்ந்தனர்-ஆனந்தக் கூத்தாடினர்.

அரசர்க்கரசர் தசரதரின் திருக்குமாரர்கள் இருவருக்கும் இதுதான் கன்னிப்போர். வசிட்டமாமுனிவரின் குருகுலத்தில் பெற்ற பயிற்சியை முதன் முதலில் பரீட்சித்துப் பார்க்கக் கிடைத்த வாய்ப்பில் முழு வெற்றி கிட்டிவிட்டது. விசுவாமித்திர மாமுனிவரிட்ட பணியின் முதற் கட்டம் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது.

தாடகை வதைக்கப்பட்டதும் அவ்வனம் இருள் நீங்கி மீண்டும் ஒளிப்பெற்றதைப் போன்று புதுப் பொலிவு பெற்றது. நீண்ட நாட்கள் இருண்ட கொடுஞ்சிறையுள் பூட்டி வைக்கப்பட்டிருந்த ஒருவனுக்கு திடீரென விடுதலை கிடைத்தால் எத்தகைய மகிழ்ச்சியும் பூரிப்பும் ஏற்படுமோ அத்தகைய உணர்வினை அங்கு வாழ்ந்த முனிவர்கள் பெற்றனர். அன்றுவரை அந்த வனத்தில் திகிலுடன் திரிந்த விலங்குகளுக்கும் பறவையினங்களுக்கும் பேரானந்தம் பெருக்கெடுத்தோடியது.

முனிவருடன் இரு அரச குமாரர்களும் அங்கேயே ஓய்வெடுத்த பின்னர் அடுத்த நாள் அதிகாலை எழுந்து புனித நதியான கோமதி, சரயு நதியுடன் சங்கமமாகும் இடம் சேர்ந்தனர்.

## வாமன் அவதரித்த சித்தாசிரம வனம்



### கவுசிகரின் சகோதரி

அந்தச் சங்கமத்தை அடைந்ததும் விசுவாமித்திர மாமுனிருடைய நடவடிக்கையில் ஒரு பக்திபூர்வமான உணர்வு பொங்குவதை இராமன் அவதானித்தான். இத்தகைய உணர்வு ஏற்படுவதற்கான காரணத்தை அறிய இராமன் அவாவுறுவதை உணர்ந்த மாமுனிவர்," இராமா! இந்நதி என் சேகாதரி. எனக்கு முன் பிறந்த கவுசிகை. பிருகு முனிவரின் மகனான இரிசிகனை மணந்து சிறப்புற இல்லறம் நடத்தினாள். இரிசிகனுடைய வாழ்நாள் முடிவுற்று சொர்க்கம் சேரும்போது கணவனைப் பிரிய மனம் கொள்ளாத என் சகோதரி, நதி வடிவமெடுத்துப் பின் தொடர்ந்தாள். இரிசிகன் தவலிமை நிரம்பப் பெற்றவர். நதியாக மாறிவிட்ட தன் பத்தினியிடம், "நதியாயகவே பூமியில் ஓடி-ஓடி வருவோரின் பாபங்களைக் களைய உதவுவாயாக" என்று கேட்டுக் கொண்டார். அவ்வாறு அன்று தொடக்கம் இன்று வரை-என்றென்றும்-பாப விமோசனமளிக்கும் பெரு நதியாக என் அக்காள் இதோ ஓடிக் கொண்டிருக்கிறாள்."

இவ்வாறு கூறிய முனிவர் வாஞ்சையுடன் நதியுள் அமிழ்ந்து கொண்டார். இராம-இலக்குவனும் பக்தி சிரத்தையுடன் நதியில் நீராடினர். காலைக் கடன்கள் முடிந்ததும் நதிக்கரைஓரமாகச் சிறிது தூரம் மூவரும் நடந்தனர். அப்போது தனது வரலாற்றையும் அரசிளங்குமாரர்களுக்கு முனிவர் எடுத்துரைத்தார்.


பிரம்ம தேவருக்கு குசன் என்றொரு மகன் இருந்தார். இவருக்கு நான்கு வேதங்களைப் போன்ற நான்கு குமாரர்கள் பிறந்தனர். இவர்களில் மூத்தவன் குசநாபன் குசநாபனுக்கு ஆட்சி பீடமேற ஆண்மகவு இல்லை பிறந்ததோ ஒருவர் பின் ஒருவராக பல பெண் குழந்தைகள். அழகில் ஈடிணையற்றவர்கள்.

### கவுசிகர் பிறந்த கதை

ஒரு நாள் குசநாபன் குமரிகள் பூங்காவில் விளையாடிக்கொண்டிருந்தபோது இவர்களுடைய அழகில் மயங்கிய வாயுதேவன், தன்னை மணந்து கொள்ளும்படி குமாரிகளை வேண்டினான். அவர்கள் மறுக்கவில்லை. தங்களுடைய தந்தையிடம் முறையாகப் பெண் கேட்டு ஒப்புதல் பெற்று திருமணம் முடிக்கும்படி வாயுவிடம் கூறினர். அவசரக்காரனான வாயு, உடனடியாகக் காந்தர்வ மணம் புரிய வேண்டும் என்று விரும்பினான். குசநாபன் குமாரிகள் அதற்கு மறுக்கவே, அவர் களுடைய முதுகெலும்பை உடைத்து அவர்களை தரையில் வீழ்த்தி விட்டுச் சென்று விட்டான்.

தகவலறிந்து வேதனைப்பட்ட குசநாபன், தவவலிமையில் சிறந்த சூளி என்பவரின் குமாரனான பிரம்மதத்தனை அழைத்து தனது குமாரிகளை அவருக்கு மணம் முடித்து வைத்தான்.

தனக்குப்பின் ஆட்சியைக் கொண்டு நடத்த ஆண் வாரிசு ஒன்றினை வேண்டி குசநாபன்-தக்க முனிவர்களின் துணை கொண்டு பெரு வேள்வியினை நடத்தினான். அவ்வேள்வித்தீயில் காதி என்பவன் தோன்றினான். காதியை மகோதயம் என்ற நகரிலிருந்து ஆட்சி புரியுமாறு, குசநாபன் முடிசூட்டி வைத்துவிட்டு மறைந்தான். இந்தக் காதி மன்னனுக்கே கவுசிகை என்ற



பெண்ணும் கவுசிகன் என்ற ஆணும் பிறந்தார்கள். கவுசிக மன்னரே பின்னாளில் பிரம்மரிஷி விசுவாமித்திரரானார்.

மாமுனிவரின் கதையைக் கேட்டுக் கொண்டே நடந்த அரசகுமாரர்கள், அழகும் அமைதியும் நிறைந்த அற்புதமான வனத்தினை அடைந்தனர். அந்த வனத்தை அடைந்ததும்"இதுதான் இந்தத் துறவியின் உறைவிடம். இங்குதான் எண்ணற்ற தவசிகளும் முனிவர்களும் வாழ்கின்றனர். இப்புனிதமான வனம், பந்நெடுங்காலமாக திருமால் தவமியற்றிய இடம். ஆதலினால் இவ்விடத்தை எனது சீடர்களான பல்லாயிரக் கணக்கான முனிவர்கள் வேள்விகளை நடத்தத் தேர்ந்தெடுத்துள்ளனர். இங்கு வேள்விகள் தொடங்கி சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அசுரர்கள் வான் வெளியில் தோன்றி, மாமிசத்துண்டுகளையும் மிருக எலும்புகளையும் ஓமகுண்டத்தில் கொட்டி நாசமாக்குகின்றனர். அத்தகைய கொடியவர்களான இராக்கதர்களை அழித்தொழிப்பதே உங்கள் இருவரினதும் அடுத்த பணியாகும்" என்று கூறினார் விசுவாமித்திர மாமுனிவர்.

### சித்தாசிரமமும் வாமனாவதாரமும்

"இந்த வனம் 'சித்தாசிரமம்' என்றழைக்கப்படுகிறது. பந்நெடுங்காலமாக திருமால் இங்கு தவமியற்றி மாநிடர்களுக்கு தவத்தின் பெருமையையும் அதனால் ஏற்படும் பலாபலன்களையும் விளக்கியருளினார்.

இந்த வனத்தில் தான் திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான வாமனாவதாரம் இடம்பெற்றது. இதன் வரலாற்றையும் நீங்கள் அறிந்திருப்பது நல்லது.

திருமாலின் நரசிம்மாவதாரத்துக்கு காரணபுருடனாகத் திகழ்ந்தவர் பிரஹலாதன். இவரும் அசுர குலத்தவரானாலும் விஷ்ணு மீது பக்தி கொண்டவர். பிரஹலாதனின் தந்தாயான இரணியன், தானே எல்லாம் வல்ல இறைவன் என்றும் தன்னையே அனைவரும் வணங்க வேண்டும் என்றும் துர்ப்புத்தி கொண்டிருந்தான். பிரஹலா-தனோ நாராயணனே மழுமுதற் கடவுள் என்று நம்பினார்."உன் கடவுள் எங்கேயடா இருக்கிறான்" என்று இரணியன் கேட்க, "தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான்" என்று பிரஹலாதன் சொன்னான். அருகே இருந்த தூணைக் காட்டிய இரணியன் "இதிலும் உன் கடவுள் நாராயணன் இருக்கிறானா?" என்று தன் கதாயுதத்தினால் தூணில் இடிக்க, திருமால் நரசிம்ம உருக் கொண்டு இரணியனை வதம் செய்கிறார்.

இக்கதையில் வரும் பிரஹலாதனின் மகன் வீரசேனன். இவனுடைய புதல்வனான மகாபலி சக்கரவர்த்தி பெரும்புகழுடன் ஆட்சி புரிந்தான். தேவர்கள் அளித்த வரத்தின் வலிமையினால் மகாபலி மூவுலகங்களையும் ஆட்டிப்படைத்தான்.

மகாபலியின் கொடுமை தாங்க முடியாத தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். திருமால் காசியப்ப முனிவருக்கும் அவர் தர்ம பத்தினியான அதிதிக்கும் மகனாக அவதாரம் எடுத்தார். குழந்தை வடிவிலேயே சகல வேதங்களையும் உணர்ந்த முனிவராகத்தோன்றினார்.

கொடுமைகளைப் புரிந்த மகாபலி சக்கரவர்த்தி கொடையில் நிகரில்லாதவன். ஒரு தடவை அவன் பெருவேள்வியினை நடத்த ஆயத்தமாகி, வேண்டுவோர் வேண்டுவனவற்றையெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருந்தான். அப்போது தான் வாமன உருவில் மகாபலியின் முன் வந்து நின்றார் அவதாரமூர்த்தி. தெய்வீகக் களையுடன் தன் முன் நின்ற குழந்தையைக் கண்ட மகாபலி "குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

### சுக்கிரனின் எச்சரிக்கை

"நான் தவசி; அமைதியாக இருந்து தவம் செய்ய என் காலால் மூன்றடி மண்தர வேண்டும்" என்று கேட்டார் வாமனன். "பூ....இவ்வளவுதானா? இதோ தருகிறேன்"என்று கூறிய மகாபலி கமண்டலத்தை கையிலெடுத்து தாரை வார்த்துக் கொடுக்கும் போது அசுரர் குலகுருவான சுக்கிரன் எழுந்து, "சக்கரவர்த்தி! இவன் குழந்தையல்ல; உம்மை ஒழித்துக் கட்டுவதற்கு குள்ளவடிவெடுத்து வந்த நாராயணன்- இவனை நம்பி உன் அழிவுக்கு வழி தேடாதே!" என்று எச்சரிக்கை செய்தார்.

"யாசகம் கேட்பது கூடாது தான். ஆனால் யாசித்து வரும் ஒருவனுக்கு யாசகம் கொடுக்காதே என்று தடுப்பது மிகமிகக் கொடுமையானது. நாராயணனே என்னை அழிக்க வந்தானானால் அதை விடவும் பேறு எனக்கு வேறு என்ன?" என்று சுக்கிரனை அப்பால் ஒதுக்கிவிட்டு கமண்டலத்திலிருந்த நீரை வாமனனின் கைகளில் ஊற்றி, மூன்றடி நிலத்தை எடுத்துக் கொள்ளுமாறு தாரை வார்த்துக் கொடுத்தான்.


நீர் கரங்களில் பட்டதும் திருமால் தனது விசுவரூபத்தை எடுத்து விண்ணும் மண்ணும் கடந்து நின்றார். முதலாவது அடியால் விண்ணை அளந்தார். இரண்டாவது அடி பாதாள உலகை அளந்தது. மூன்றாவது அடியால் பூமியை அளந்தாலும் அடியினை வைப்பதற்கு இடம் இல்லை. இதனால் மகாபலியின் தலைமீதே தனது மூன்றாவது அடியை வைத்து அழுத்தி அவனுடைய அகந்தையை அடக்கினார்.

இத்தகைய அவதார விசேடம் பொருந்திய சித்தாசிரமமே எனது தபோவனமாகியிருக்கிறது."

இவ்வாறு சித்தாசிரமத்தின் வரலாறை இராம-இலக்குவனுக்கு முனி சிரேஷ்டர் கூறி முடித்தார்.

### திவ்வியாஸ்திர பிரயோக வரம்.

விசுவாமித்திர மாமுனிவரின் ஆசிரமத்தை அடைந்ததும் அங்கிருந்த ஏனைய முனிவர்கள் ஓடோடி வந்து மூவரையும் வரவேற்றனர். முனிவருக்கு பாத பூசை செய்தனர். இராமரையும் இலக்குவனையும் அழைத்துச் சென்று அதிதி பூசை செய்து, சிரம பரிகாரம் செய்ய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தனர். தங்களுக்கு இராக்கதர்களால் ஏற்பட்டு வந்த இடர்களைக் களைய வந்த



இளங்குமாரர்களல்லவா? மதிப்புடனும் மரியாதையுடனும் பக்தியுடனும் உபசாரங்களைச் செய்தனர்.

அடுத்த நாட்காலையில் இளவரசர்கள் காலைக்கடன்களை முடித்து வந்ததும், ஏற்கனவே தயாராக இருந்த மாமுனிவர், இருவரையும் தனியாயன ஓரிடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கும் பூசைக்கு வேண்டிய பல ஆயத்தங்கள் முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. முனிவரே பூசையையும் நடத்திவைத்தார்.

பூசை முடிந்ததும் மாமுனிவர் இராமனை முதலில் அழைத்தார். "இராமச்சந்திரா! உன் தம்பி இலக்குவனுடன் இணைந்து தாடகையை வதம் செய்வதில் நீ காட்டிய அக்கறை என்னை மிகவும் கவர்ந்து விட்டது. இதற்குக் கைமாறாக- நன்றியறிதலைக் காட்டவே உம்மிருவரையும் இங்கு அழைத்து வந்தேன். பந்நெடுங் காலமாக நான் தவமிருந்து பல வரங்களைப் பெற்றுள்ளேன். பல திவ்வியாஸ்திரங்களையும் அவற்றைப் பிரயோகிக்கும் முறைகளையும் பல தேவதைகளின் மூலம் பெற்றுள்ளேன். இந்த அஸ்திரங்களையும் இவற்றைப் பிரயோகிக்கும் முறைகளையும் திரும்பப் பெறும் முறைகளையும் இப்பொழுது உனக்குக் கற்றுத்தரப் போகிறேன்." இவ்வாறு கூறிய மாமுனிவர் ஒவ்வொரு மந்திரத்தையும் உச்சாடனம் செய்து, அதற்குரிய அஸ்திரத்தையும் இராமபிரானிடம் கொடுத்தார். முனிவர் கூறியபடி அஸ்திரத்தைக் கையிலெடுத்து உரிய மந்திரத்தை உச்சாடனம் செய்ததும் அதற் குரிய தேவதை இராமன் முன்தோன்றியது. "இந்த அஸ்திரத்தின் தேவதை நான். எப்போது இந்த மந்திரத்தை உச்சாடனம் செய்தாலும் அக்கணமே அவ்விடத்தல் தோன்றுவேன்" என்று கூறி அருள் பாலித்தது. இவ்வாறு பல அஸ்திரங்களையும் இராமனுக்கு விசுவா-மித்திரர் அருளி இவற்றை இளையவரான இலக்குவனுக்கும் போதிக்குமாறு கேட்டுக் கொண்டார். இராமரும் தன் தம்பியை அழைத்து அஸ்திர உபதேசம் செய்தார்.

அடுத்தடுத்த நாட்களில் யாகங்கள் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அன்றிரவே விசுவாமித்திரர் யாகத்துக்கான தீட்சையை எடுத்துக் கொண் டார். அதற்கு முன்னர் அரசகுமாரர்களை அழைத்த மாமுனிவர், "யாகதீட்சை எடுத்துக் கொண்டால் நான் யாருடனும் பேச மாட்டேன். நாளை முதல் ஆறு நாட்களுக்கு யாகம் நடக்கும். இரவு பகலாக முனிவர்கள் மந்திரங்களை ஓதியவண்ணம் ஓமம் வளர்ப்பார்கள். அசுரர்கள் யாகத்தைக் கெடுக்க எவ்வேளையிலும் வானில் தொன்றுவார்கள். நீங்கள் இருவரும் பசி,தாகம், தூக்கம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது காவல் புரிந்து, அரக்கர்களை வதம் செய்ய வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார். அரசகுமாரர்கள் இருவரும் முனிவரின் அடி தொழுது ஆசி பெற்று மாமுனிவர் இட்ட பணியை எவ்வகையிலும் ஈடேற்றுவதெனச் சபதமிட்டனர்.

ஆறுநாட்கள் அரசகுமாரர்கள் இருவரும் ஒய்வே எடுத்துக் கொள்ளாமல் வில்லேந்தி வேள்வியைக் காவல் புரிந்தனர். ஆறாவது நாளன்று ஓமகுண்டத்தில் தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. ஓமப்புகை எங்கும் பரந்து விண்ணைத் தாவியது. அப்போது பேரிடிபோன்ற பெரும் சப்தம் கேட்டது. பூமியே அதிர்ந்தது. முனிவர்கள் ஓதும் வேத மந்திரங்களையும் மீறி அப்பேரொலி எழுந்து கொண்டிருந்தது. வானில் அரக்கர்கள் பலர் மிதந்து வந்து கொண்டிருந்தனர்.

இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் வேள்வி நடைபெறும் இடத்துக்கு மேலே வந்து விடுவார்கள்.

(தொடர்ந்து வரும்.)

இராஜகுமாரன்





### உபேந்திரன்?

உபேந்திரன் என்னும் பாத்திரம் வால்மீகி இராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும் இல்லை என வாசகர்களிடமிருந்து விளக்கம் கோரும் கடிதங்கள் பல வந்து கொண்டிருக்கின்றன. யார் அந்த உபேந்திரன்? இராமாயணத் தொடர் நிறைவுறும்போது உங்களுக்கு விடை தெரியும்.

**இராஜகுமாரன்.**

### இராமாயணப் போட்டி இல—5

**பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்**

**சரியான விடை** பிரம்மரிஷி

1. இ.[illegible]
[illegible] மாவத்தை,கொழும்பு-6
2. [illegible]
[illegible] வீதி,கஹடட்டகஹ்திகிலிய
3. இரா.சசிதா
இல.7 பிரதான வீதி,நோட்டன் பிறிட்ஜ்
4. ஏ.டபிள்யு.எம்.சுல்பி
இ/அங்குநொச்சிய, ஹொரவபொத்தானை
5. டபிள்யு.மரிய கிருபாகரன். கட்டைக்காடு,கொத்தாந்தீவு

### இராமாயணப் போட்டி 07

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனு ப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:- நரசிம்மவதாரத்திற்கு காரண புருடர் யார்?**

நவம்பர் 25ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:07.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல— 1772
கொழும்பு.

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# இடையில் முடிந்த பயணம்



அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

← பாலஸ்தீனர்களின் தாயகத்தை விழுங்கி ஏற்பட்டு உருவானதுதான் இஸ்ரேல். அமெரிக்க மத்தியஸ்தத்தோடு பாலஸ்தீனப் பிரச்சனைக்கு இஸ்ரேல் பிரதமர் ராபின் தீர்வு காணமுற்பட்டது தீவிரவாதிகளுக்கு உச்சிமீது இடிந்து விழுந்தது மாதிரியாகிவிட்டது. பதித்ததை முழுவதும் கொடுக்காமல் ஒரு பகுதியைக் கொடுப்பதைக்கூட இஸ்ரேலிய தீவிரவாதிகள் சகிக்கவில்லை. ராபினுக்கு அவர்கள் கொடுத்த பரிசு சில துப்பாக்கி ரவைகள் மட்டும். தீவிரவாதிகள் சிறு குழுவாக இருந்தாலும் அவர்கள் ஏற்படுத்திய நஷ்டம் பாரியது. ராபினின் சமாதானப் பயணம் முடிந்தது. விட்ட இடத்திலிருந்து தொடர்வோம் என்கிறார் புதிய பிரதமர். பார்க்கலாம். சமாதானத்தின் பாதை ஒன்றும் ரோஜாப் படுக்கையல்ல.

# நான்காவது ஹீரோ



← ஜேம்ஸ்பொண்ட் படங்களுக்கு என்றே தனியான ரசிகர் பட்டாளம் இருக்கிறது. ஜேம்ஸ் பொண்ட் பாத்திரங்களில் தோன்றிய இருவரை ரசிகர்கள் மறக்கவே முடியாது. ஒருவர் ஷின் கொனரி, மற்றவர் ரோஜர் மூர். இருவரும் தலா ஏழு படங்களில் நடித்து மனதில் பதிந்தவர்கள். அவர்களின் பின்னர் திமோத்தி டால்டன் இரண்டு படங்களில் நடித்தார். இரண்டும் சூப்பர் தோல்வி. (மேலிருந்து கீழ் மூன்றாவதாக இருப்பவர்) இடையில் ஜோர்ஜ் லெசன்பை என்பவர் ஒரே ஒரு படத்தில் நடித்தார். அதுவும் தோல்வி. அவரைக் கணக்கில் சேர்க்கவே முடியாது. இப்போது கோல்டன் ஐ படத்தில் நடிப்பவர்தான் புதிய ஜேம்ஸ்பொண்ட். பெயர், பியர்ஸ் புரொஸ்னன். அயர்லாந்தைச் சேர்ந்தவர். (தாடியோடு இருக்கிறார்) இவரும் தேறுவாரா என்பது சந்தேகம்தான். ஜேம்ஸ் பொண்ட் பாத்திரத்தில் நடிக்க கதாநாயகர்களை தேடுவதுதான் ஹொலிவூட் படவுலகில் பெரிய தலைவலி. கதையுண்டு கதாநாயகன் இல்லை.

# செமத்தியான குத்து



← எதிரியைக் குத்தி இறக்கவைத்து திருப்பவர் லூயிஸ். வயது 30. குத்தென்றால் குத்துத்தான் என்று ஒத்துக் கொண்டு படுத்திருப்பவர் மொரிசன் வயது 26.

மொரிசன் ஒன்றும் லேசுப்பட்ட ஆளல்ல. அமெரிக்காவின் சூப்பர் குத்துச் சண்டை வீரர். லூயிஸ் பிரிட்டனைச் சேர்ந்தவர். மோதல் தொடங்கி சில சுற்றில் தனது அசுரத்தனமான குத்துக்களை ஆரம்பித்தார் லூயிஸ். சரியாக 1 நிமிடம் 34 செக்கனில் மொரிசன் திணறிச் சரிந்தார். மொரிசன் 4 தடவை வெற்றிக்கனி பறித்திருந்தவர். ஆயிரமாயிரம் பார்வையாளர்கள் அடிச்சறுக்கும் இப்போட்டி நடந்தது அமெரிக்காவில்.

# உள்ளேயே கொல்



← போரின் கொடுமை தமக்கெல்லாம் தெரிந்து கொண்டிருக்கும் காலம் இது. படத்தில் பசுமைக்குள் பலியாகிக் கிடக்கும் காட்சி லைபீரிய நாட்டில் நிகழ்ந்த சோகம். ஒரே நாளில் உள்நாட்டுப்போர் பத்தாயிரம் பேரைப் பலி கொண்டது. அந்தக் கோரத்தில் ஒரு சிறு பகுதிதான் இது. புகலிடம் தேடியோரையும் யுத்தம் துரத்தியடிக்கும்.

# ஐ.நாவின் உதவிக்கரம்




→ றுவாண்டாவில் பட்டினியால் தவித்த மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை நேரில் சென்று உதவிக்கரம் நீட்டியது. இடம் பெயர்ந்து ஓடும் மக்களின் சோகத்தை நேரில் கண்டது. ஒரு அகதிப்பெண் தனது கோழியையும் தூக்கிக் கொண்டு ஓடுகிறார். கோழி போடும் ஒரு முட்டைகூட குழந்தைக்கு உணவாகு மல்லவா. பட்டினிக் கொடுமையில்தானே அதன் அருமை புரியும். ஐ.நா.சபை தலையிட்டதால் எல்லாமே நல்லவிதமாக மாறியது என்று அர்த்தமல்ல. அகதிகளுக்கு ஓரளவு நிம்மதி கிடைத்தது. நிரந்தர நிம்மதி-யுத்தம் செத்துப் போகும் வரை கிட்டிவிடாது.